Registered as Newspaper

# உதயன் சஞ்சீவி

சுடர் : 36 கதிர் : 274 | ஞாயிற்றுக்கிழமை | ஆவணி 13 ஆம் நாள் 29 ஓகஸ்ட் 2021 | வள்ளுவர் ஆண்டு 2052

பக்கங்கள்: 12+16
விலை : ரூ.40

செய்தி : 021 493 0000
விளம்பரம்: 021 493 1111

# வடமாகாணத்தில் சமூகத் தொற்று!

## கொழும்பு பல்கலைக் கழகத்தின் பேராசிரியர் வீரசிங்க தெரிவிப்பு

கொழும்பு, ஓகஸ்ட் 29

கொரோனாப் பெருந்தொற்றானது வடமாகாணத்தில் சமூகத்தொற்றாக உருவெடுத்துள்ளது என்று கொழும்பு பல்கலைக்கழகத்தின் சமூக மருத்துவத்துறையின் தலைவர் பேராசிரியர் மனுஜ் சி.வீரசிங்க தெரிவித்தார்.

11 ►

### வவுனியாவில்
## மூன்று இடங்கள் ஆபத்தானவை

வவுனியா, ஓக. 29
வவுனியாவில் மூன்று கிராம அலுவலர் பிரிவுகள் அதிகமான கொரோனா தொற்றாளர்கள் இனம்காணப்படும் பகுதிகளாக சுகாதாரத் தரப்பினரால் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

11 ►



## நாடு திரும்ப விரும்பினால் பாதுகாப்பு உத்தரவாதம்

### புலம்பெயரிகளுக்கு நாமல் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 29
போர்க் காலத்தில் வெளிநாடுகளுக்கு அகதிகளாகச் சென்று, தற்போது நாடு திரும்பவிரும்பும்

11 ►

### மந்திகை மருத்துவமனையில்
## 45 பேருக்கு அன்டிஜென் 32 பேருக்குத் தொற்று!

யாழ்ப்பாணம், ஓக. 29
பருத்தித்துறை மந்திகை ஆதார மருத்துவமனையின் வெளிநோயாளர் பிரிவுக்கு சிகிச்சைக்காக வந்தவர்களில் 45 பேருக்கு நேற்று முன்னெடுக்கப்பட்ட அன்டிஜென் பரிசோதனையில் 32

11 ►

## 10,000 உயிர்களைக் காக்க ஒக்ரோபர் 2 வரை ஊரடங்கு

### உலக சுகாதார ஸ்தாபனம் அரசுக்கு பரிந்துரை

கொழும்பு, ஓக. 29
'இலங்கையில் எதிர்வரும் ஒக்ரோபர் 2ஆம் திகதி வரை ஊரடங்கை நீடிப்பதன் மூலம் 10 ஆயிரம் வரையான கொரோனாச் சாவுகளைத் தடுக்க முடியும் இவ்வாறு உலக சுகாதார ஸ்தாபனத்தின் கொழும்புக் கிளையும் இலங்கையின் சுயாதீன தொழில்நுட்ப வல்லுநர்கள் குழுவும் இணைந்து

11 ►

### உச்சக்கட்ட ஆபத்தில் இலங்கை
## மணித்தியாலத்துக்கு 9 பேர் உயிரிழப்பு

கொழும்பு, ஓக. 29
இலங்கையின் தற்போதைய கொரோனா நிலைமையில் மணித்தியாலத்துக்கு 9 பேர் தொற்றால் உயிரிழந்து வருகின்றனர் என்று சிறப்பு மருத்துவர் பத்மா குணரத்ன தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கையில்

11 ►

## அரசியல்கைதிகளைச் சந்தித்து பரிந்துரைகளை முன்வைக்குக!

### புதிய ஜனாதிபதி ஆணைக்குழுவிடம் குரலற்றவர்களின் குரல் அமைப்பு வலியுறுத்து

கொழும்பு, ஓக. 29
ஜனாதிபதி ஆணைக்குழு, தமிழ் அரசியல் கைதிகளை நேரில் சந்தித்து, உண்மை நிலையை அறிந்து, பரிந்துரைகளை முன்வைக்க வேண்டும் என்று குரலற்றவர்களின் குரல் அமைப்பு கேட்டுக்

11 ►

## தொற்றிலிருந்து நாட்டைக் காப்பாற்ற ஒரு மாத முடக்கம் மிகஅவசியம்!

### அரசிடம் சஜித் அணி வலியுறுத்து

கொழும்பு, ஓக. 29
'நாட்டைத் தொடர்ந்து மூன்று அல்லது நான்கு வாரங்களுக்காவது கடும் கட்டுப்பாடுகளுடன் முழுமையாக முடக்கி வைத்திருக்க வேண்டும். அப்போதுதான் கொரோனாத் தொற்றிலிருந்து

11 ►

## யாழில் மேலும் ஐவர் கொரோனாவால் பலி!

யாழ்ப்பாணம், ஓக. 29
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த மேலும் மூவர் உட்பட மாவட்டத்தில் மேலும் 5 பேர் கொரோனாவால் உயிரிழந்தனர்.
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று

11 ►

## வவுனியாவில் 9 பேர் கொரோனாவால் பலி

வவுனியா, ஓக. 29
வவுனியாவில் கொரோனாத் தொற்றால் நேற்று ஒன்பது பேர் உயிரிழந்தனர். குறித்த நபர்களில் நான்கு பேர் திடீர் சுகவீனமுற்றநிலையில் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அவர்களுக்கு முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில்

11 ►



## மேலும் 212 பேர் சாவு மொத்தக் காவு 8,583

கொழும்பு, ஓக. 29
இலங்கையில் மேலும் 212 பேர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளனர். சுகாதார சேவை

11 ►

## நேற்று தொற்று 4,582


கொழும்பு, ஓக. 29
இலங்கையில் கொரோனாத் தொற்று உறுதியான மேலும் 4 ஆயிரத்து 582 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.
இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 4 லட்சத்து 21

11 ►

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாவசியப் பொருள்கள் ஒரு மாதத்துக்கே கையிருப்பு

- இறக்குமதியாளர்கள் அபாய எச்சரிக்கை
- டொலர் பற்றாக்குறையால் சிக்கல்
- சீனி விலை குறையும் சாத்தியம் இல்லை



**கொழும்பு, ஓக.29**

**மூன்று வாரங்களுக்குப் போதுமான சீனியே கையிருப்பில் உள்ளது என்று தெரிவித்துள்ள சீனி இறக்குமதியாளர்கள் சங்கம், சீனியின் விலையைக் குறைக்க முடியாது என்று தெரிவித்துள்ளது.**

ஏதாவது ஒரு விதத்தில் இறக்குமதிக்கு அரசு அனுமதி அளிக்காதுவிட்டால் நாட்டில் சீனிக்கு தட்டுப்பாடு ஏற்படும் என்றும் இறக்குமதியாளர்கள் சங்கத்தின் உபதலைவர் நிஹால் செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் நிஹால் செனவிரத்ன தெரிவித்துள்ளதாவது:


இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் அத்தியாவசிய உணவுப் பொருள்களின் ஒரு மாதத்துக்கான கையிருப்பே வர்த்தகர்களிடம் இருக்கின்றது. உணவுகளை இறக்குமதி செய்தவர்களுக்குப் போதுமான டொலரை வங்கிகள் வழங்காமையே இதற்குக் காரணம். இதனால் உணவுப் பொருள்களின் விலைகள் உயர்கின்றன. இந்த நிலைமையைச் சமாளிக்க உடனடியாகத் தலையீடு செய்ய வேண்டும் என்று எமது சங்கம் அரசிடம் கோரியுள்ளது.

நேற்றுமுன்தினம் நடந்த கலந்துரையாடல் ஒன்றில் வர்த்தகத்துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன, நுகர்வோர் பாதுகாப்பு அமைச்சர் லசந்த அழகியவன்ன ஆகியோருக்கு தற்போதைய நிலைமை விளக்கப்பட்டது.

பருப்பு, சீனி, கிழங்கு, வெங்காயம், ரின் மீன், கொத்தமல்லி உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களை இறக்குமதி செய்ய மாதாந்தம் 100 மில்லியன் அமரிக்க டொலர் தேவைப்படுகின்றது. இறக்குமதியாளர்களுக்கு தமது இறக்குமதிகளை முன்னெடுக்க வங்கிகள் கடன் பத்திரங்களுக்கான டொலரை வழங்குவதில் எழுந்துள்ள சிக்கல் நிலைமையானது, உரியநேரத்தில் இறக்குமதிகளை முன்னெடுப்பதில் பல்வேறு சிக்கல்களை தோற்றுவித்துள்ளது. என்றார்.

அதேவேளை, ஒரு வாரத்துக்குள் ஒரு கிலோ சீனியின் விலை 100 ரூபாவால் அதிகரித்துள்ளது. அதையடுத்துச் சீனியைப் பயன்படுத்தி தயாரிக்கப்படும் உற்பத்திகளுக்கான விலைகளும் அதிகரிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த சிற்றுண்டிச்சாலைகள் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் ஒரு கோப்பை தேநீரின் விலை 25 ரூபாவாக அதிகரிக்க நேரிட்டுள்ளது என்று நேற்றுமுன்தினம் தெரிவித்தார். (ஏ-இ)



## சீனியின் விலையை சிறிது குறைக்கலாம்

*அடுத்த வாரம் நடவடிக்கை என அமைச்சர் லசந்த தெரிவிப்பு*

கொழும்பு, ஓக.29

அடுத்தவாரம் முதல் சீனியின் விலையைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன தெரிவித்தார்.

சந்தை நடவடிக்கையின் அடிப்படையில் சீனியின் விலையை உடனடியாகக் குறைக்க முடியாது என்று இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அடுத்து வரும் மூன்று வாரங்களில் சீனியின் விலையை 190 ரூபா அல்லது, 180 ரூபா என்ற அளவுக்கு குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஏ-இ)

## பஞ்சப்பாட்டுப் பாடும் ஆளும் கட்சி எம்.பிக்கள்

கொழும்பு, ஓக.29

**அமைச்சர்கள், ஆளும்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் ஒரு மாதச் சம்பளத்தைக் கொரோனா ஒழிப்பு நிதியத்துக்கு வழங்குவார்கள் என்று தெரிவிக்கப்பட்ட நிலையில், ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திசாநாயக்க அதற்கு மறுப்புத் தெரிவித்துள்ளார்.**

கடன் ஒன்றைப் பெற்றுள்ளமையால் தமது சம்பளம் முழுவதும் அதற்கு அறவிடப்படுகின்றது என்றும், தனது மனைவியின் சம்பளத்திலேயே தான் வாழ்ந்து வருகின்றேன் என்றும் அவர் கூறியுள்ளார்.

300 லட்சம் வரையில் வங்கிக் கடன் செலுத்த வேண்டியுள்ளது என்றும் தெரிவித்துள்ள அவர், முழுச் சம்பளத்தையும் வழங்கமுடியாவிட்டாலும், குறிப்பிட்ட ஒரு தொகையை கொரோனா ஒழிப்பு நிதியத்துக்கு வழங்குவேன் என்று தெரிவித்துள்ளார்.

அதேவேளை, ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான டிலான் பெரேராவும், சம்பளத்தை கொவிட் நிதியத்துக்கு வழங்கினால் தன்னால் உயிர்வாழ முடியாது என்று அண்மையில் தெரிவித்திருந்தார். (ஏ-இ)

## சீனி விலை ரூ.400 ஆனாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை

*எதிர்க்கட்சி சாடுகின்றது*

கொழும்பு, ஓக.29

சந்தையில் ஒரு கிலோ சீனி 300 முதல் 400 ரூபாவுக்கு விற்கப்பட்டாலும் மக்கள் ஆச்சரியப்பட வேண்டாம் என்று எதிர்க்கட்சி தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் துஷர இந்துனில் அமரசேன மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போதைய ஆட்சியில் இறக்குமதி வரியை 25 ரூபாயால் குறைத்த பின்னர் அரசுடன் தொடர்புடைய வணிகர்கள் ஏற்கனவே போதுமான அளவு சீனியை இறக்குமதி செய்துள்ளனர்.

தற்போது வணிகர்களில் பெரும்புள்ளிகள் அரசைக் கட்டுப்படுத்துவதால் சீனி மட்டுமல்லாமல் பல பொருள்களின் விலைகளைக் கடுமையாக அதிகரித்துள்ளனர்.

கொரோனா வைரஸ் நெருக்கடியைக் கையாள அரசு ஒரு புதிய திட்டத்தை உருவாக்க வேண்டும். இந்த முயற்சிக்கு எதிர்க்கட்சிகளும் அரசுக்கு முழு ஆதரவை அளிக்கும். எதிர்க்கட்சியின் குடிமக்கள் தங்கள் உயிர்களைப் பாதுகாக்க வேண்டும் என்றே அரசைக் கேட்கிறார்கள். குடிமக்களின் உயிர்களைப் பாதுகாப்பது அரசின் கடமை. தற்போதைய நிர்வாகம் தோல்வி அடைந்துவிட்டது. ஆனால் நாட்டை தோல்வியடைய அனுமதிக்க முடியாது. அரசு தனது தோல்வியுற்ற கொள்கைகளை ஒதுக்கி வைத்துவிட்டு வல்லுநர்களின் உள்ளீடுகளுடன் ஒரு திட்டத்தை உருவாக்க வேண்டும். என்றார். (ஏ-இ)

### நேற்றும் இன்றும்

## பொருளாதார மத்திய நிலையங்கள் திறப்பு

நாட்டிலுள்ள அனைத்து பொருளாதார மத்திய நிலையங்களையும் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமை (நேற்றும் இன்றும்) ஆகிய நாள்களில் திறப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. விவசாய இராஜாங்க அமைச்சர் சஷேந்திர ராஜபக்சவின் ஆலோசனைக்கு அமைய இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

மொத்த விற்பனைக்காக மாத்திரம் பொருளாதார மத்திய நிலையங்கள் மற்றும் கொழும்பு மெனிங் சந்தையை திறக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக விவசாய இராஜாங்க அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை, பொருளாதார மத்திய நிலையங்களில் பொருள்களை கொள்வனவுசெய்ய அத்தியாவசிய சேவைகளில் ஈடுபடுவோருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. பொருளாதார மத்திய நிலையங்களின் முகாமையாளர்களுடன் தொடர்புகொண்டு தங்களுக்கான பொருள்களை கொள்வனவுசெய்ய நடவடிக்கை எடுக்குமாறு விவசாய இராஜாங்க அமைச்சு தெரிவித்துள்ளது. (த-இ)

## எப்போதாவது உழைத்துக்கொள்ளலாம் அன்புக்குரியவர்களை இழந்துவிடாதீர்

*மன்னார் மாவட்டச் செயலர் பொதுமக்களுக்கு அறிவுறுத்து*

மன்னார், ஓகஸ்ட் 29

பணம் எப்போதாவது உழைத்து கொள்ள முடியும். நமது அன்புக்குரியவர்களின் இழப்பு திரும்பப் பெறமுடியாது என்று தெரிவித்த மன்னார் மாவட்டச் செயலர், அவசியம் இல்லாமல் வீட்டைவிட்டு வெளியேறாமல் வீட்டிலேயே பயனுள்ள விடயங்களை செய்யுங்கள். அதன்மூலம் உங்களையும் உங்கள் குடும்பத்தையும் பாதுகாப்பதுடன் ஏனைய மக்களையும் பாதுகாக்க ஒத்துழைக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். மன்னார் மாவட்ட செயலாளர் திருமதி ஸ்ரான்லி டிமெல். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், மன்னார் மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் ஒரே நாளில் மூன்று மரணங்கள் நிகழ்ந்துள்ளன. இது கவலையளிக்கிறது.

மன்னார் மாவட்டத்தில் நேற்றையதினம் மூன்று அதற்கு முந்தினம் இரண்டு கொரோனா மரணங்கள் ஒரே நாளில் ஏற்பட்டுள்ளன மக்கள் இதை தமக்கான எச்சரிக்கையாக எடுத்துக்கொண்டு சுகாதார வழிகாட்டல்களை உரிய முறையில் பின்பற்ற வேண்டும் பயணத்தடையை மீறி நடப்பதற்கு உபாயம் தேடுவதை விடுத்து நோயின் கனத்தை உணர்ந்து செயற்பட வேண்டும். - என்றார். (த-213)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அச்சுறுத்துகிறது ‘சூப்பர் டெல்டா’

கொழும்பு, ஓக.29

கொழும்பு நகர் பகுதி மற்றும் அதைச் சூழவுள்ள பகுதிகளில் சூப்பர் டெல்டா வைரஸ் திரிபு பரவியிருக்கலாம் என்று அஞ்சப்படுகின்றது. இந்தத் தகவலை கொழும்பு ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார்.

சூப்பர் டெல்டா திரிபு, டெல்டா திரிபை விடவும் மிக ஆபத்தானது என்றும், வேகமாகப் பரவும் தன்மை கொண்டதாக இருக்கலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)








## சினோபோர்ம் தடுப்பூசி ஒரு தொகுதி இலங்கைக்கு

கொழும்பு, ஓக.29

சினோபோர்ம் தடுப்பூசியின் 2.3 மில்லியன் டோஸ்கள் நேற்று இலங்கையை வந்தடைந்துள்ளன. இவற்றில் 3 லட்சம் டோஸ் தடுப்பூசிகள் சீன மக்கள் விடுதலை இராணுவத்தால் வழங்கப்பட்டுள்ளன. இரு மில்லியன் டோஸ் தடுப்பூசிகள் இலங்கை அரசால் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

பண்டாரநாயக்க விமான நிலையத்துக்கு விமானம் மூலம் கொண்டுவரப்பட்ட தடுப்பூசிகளை பாதுகாப்புச் செயலாளர் கமல் குணரத்ன மற்றும் இராணுவத் தளபதி சவேந்திர சில்வா மற்றும் அரச அதிகாரிகள் நேரில் சென்று பெற்றுக் கொண்டனர். இந்தத் தடுப்பூசிகளுடன், சீனாவிலிருந்து இலங்கையால் பெறப்பட்ட சினோபோர்ம் தடுப்பூசிகளின் எண்ணிக்கை 18 மில்லியனாக அதிகரித்துள்ளது. (எ-இ)

இலங்கையில்

## கொவிட்டால் இறப்போர் 2.01 வீதத்தால் அதிகரிப்பு

கொழும்பு, ஓக. 29

சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தின் தரவுகளின் அடிப்படையில், இலங்கையில் கொவிட் மரணங்களின் சதவீதமானது, 2.01 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, சர்வதேச தரவுகளின் அடிப்படையில், நேற்றுமுன்தினம் கொவிட் மரணங்கள் பதிவான நாடுகளின் பட்டியலில் இலங்கை 13 ஆவது இடத்தில் உள்ளது. நேற்றுமுன்தினம், சர்வதேச ரீதியில் அமெரிக்காவில் அதிக கொவிட் மரணங்கள் பதிவாகியுள்ளன. ஆயிரத்து 275க்கும் அதிகமான மரணங்கள் அங்கு பதிவானதாக சர்வதேச தகவல்கள் தெரிவிக்கின்றன.

அனைத்துலக ரீதியில் நேற்றுமுன்தினம், 9 ஆயிரத்து 800க்கும் அதிகமான கொவிட் மரணங்கள் பதிவாகியுள்ளன. இதற்கமைய, சர்வதேச கொவிட் மரணங்களின் எண்ணிக்கை 44 இலட்சத்து 97 ஆயிரத்தைக் கடந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (குஇ)



நல்லூர் கந்தனுக்கு இன்று 17ஆம் திருவிழா

## கார்த்திகைக் குமரா..

தென் திசைக் கோபுர வாயிலிலே உன்றன்
திருப்புகழ் காதினிலே ஒலிக்குதையா

தேவியர் இருவர் சூழ்ந்து வர நல்லைத்
தெருவிலே உன் காட்சி தெரியுதையா...

எண் திசையும் சுடர் பரப்பும் கற்பூரஜோதி
கார்த்திகை குமரா உன் அருள் அங்கே மணக்குதையா

அன்புடனே அடியார்கள் கூட்டத்தோடு
அரோகரா என்று சொல்ல வாய் இனிக்குதையா

அத்தகையும் ஒரித்தில் அமர்ந்து உன்னை
நினைத்திடவே மனத்தினிலே தோன்றுதையா

க. நாகேந்திரன்,
யாழ்ப்பாணம்.

சாவகச்சேரி பிரதேசத்தில்

## இரண்டாவது டோஸ் தடுப்பூசி ஏற்றும் பணிகள் நாளை ஆரம்பம்

சாவகச்சேரி,ஓக.29

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியக எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் வசிப்போருக்கு இரண்டாவது டோஸ் தடுப்பூசி செலுத்தும் பணிகள் நாளை திங்கட்கிழமை தொடக்கம் முன்னெடுக்கப்படவுள்ளன.

சாவகச்சேரி நகரசபையின் பொன் விழா மண்டபம், கொடிகாமம் மற்றும் வரணி மருத்துவமனைகள், நாவற்குழி மகா வித்தியாலயம் மற்றும் கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம் ஆகியவற்றில் தடுப்பூசி மருந்து ஏற்றப்படவுள்ளது. முதலாவது டோஸ் தடுப்பூசி ஏற்றி 28 நாள்கள் நிறைவடைந்தவர்கள் முதலாவது தடுப்பூசி ஏற்றிய நிலையத்துக்கு அட்டையுடன் வருகை தருமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-9)

## டெல்டா தொற்றாளர் 292 பேர் அடையாளம்!



கொழும்பு, ஓக.29

இலங்கையில் டெல்டா திரிபு தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை 292 ஆக அதிகரித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் மூலம் டெல்டா திரிபுத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)



## கைகள், கால்கள் கட்டப்பட்ட நிலையில் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், ஓக. 29

பூநகரி சங்குப்பிட்டிக் கடலில் காணப்பட்ட சடலம், கைகள், கால்கள் கயிற்றால் கட்டப்பட்டு, உருக்குலைந்த நிலையில், கிளிநொச்சி பதில் நீதிவான் முன்னிலையில் நேற்று மீட்கப்பட்டது.

கை மற்றும் கால்கள் நைலோன் கயிற்றால் கட்டப்பட்டு வலையால் சுற்றப்பட்டு உருக்குலைந்த நிலையில் நேற்றுமுன்தினம் சடலம் கண்டறியப்பட்டிருந்தது. நேற்று அது பூநகரி பொலிஸாரால் மீட்கப்பட்டது.

கைகள், கால்கள் கட்டப்பட்ட நிலையில் சடலம் காணப்படுவதால், கொலைசெய்யப்பட்ட பின்னர், சடலம் கடலில் வீசப்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் தெரிவித்தனர். (த-214)

# வவுனியாவில் 222 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி

## இருவர் உயிரிழப்பு

வவுனியா, ஓக.29

வவுனியாவில் மேலும் 222 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. கொரோனாத் தொற்றுக்கு இலக்கான இருவர் உயிரிழந்துள்ளனர் என்றும் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் இனங்காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியோர், வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டோர் மற்றும் எழுமாற்றாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர்., அன்ரிஜென் பரிசோதனைகளின் முடிவுகள் நேற்றுமுன்தினம் இரவு வெளியாகின. அவற்றில் 222 பேருக்கு கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதேவேளை, வவுனியா பூங்கா வீதியைச் சேர்ந்த 83 வயதுடைய ஆண் ஒருவரும், நெளுக்குளம் பகுதியைச் சேர்ந்த 86 வயது பெண் ஒருவரும் என இருவர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளனர். (எ-18)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயிர்ச்செய்கையாளர்களுக்கு 2 ஏக்கர் வீதம் வழங்குங்கள்

## மன்னார் பொது அமைப்புகளின் ஒன்றியம் காணி அமைச்சருக்கு கடிதம் மூலம் கோரிக்கை

**தலைமன்னார், ஓக. 29**

**கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக பயிர்ச் செய்கையில் ஈடுபடுபவர்களுக்கு ஏலவே பிரதேச செயலகத்தின் கோரிக்கைக்கு அமைய உடனடியாக இரண்டு ஏக்கர் வீதம் காணி வழங்குவதுடன் கடந்த நல்லாட்சிக் காலத்தில் தனி நபர்களுக்கு முறைகேடாக வழங்கிய குறிப்பிட்ட காணியை துப்புரவு செய்வதை உடன் நிறுத்த வேண்டும்.**

இவ்வாறு குறிப்பிட்டு, மன்னார் பொது அமைப்புகளின் ஒன்றியம், காணி அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேனவுக்கு கடிதம் அனுப்பியுள்ளது.

அந்தக் கடிதத்தில்,

மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இலுப்பைக்கடவை சோழமண்டலக்குளம் பகுதியில் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக இலுப்பைக்கடவை அந்தோனியார்புரம் பகுதியில் உள்ள 95 பேர் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்

இவர்களுக்கு முறையாக காணிக் கச்சேரியும் நடைபெற்றுள்ளது. காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் அதிகாரிகளின் பங்கேற்புடன் பல கலந்துரையாடல்களும் மாந்தை மேற்கு பிரதேச செயலகத்தில் நடைபெற்றுள்ளது. அத்துடன் பிரதேச செயலாளரினால் பலமுறை எழுத்து மூலம் பெயர் பட்டியல் அனுப்பப்பட்டு இரண்டு ஏக்கர் வீதம் வழங்குமாறு காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன் இணக்கமும் காணப்பட்டுள்ளதாக அறிகிறோம்.

ஆனால் இதுவரை எந்த விதமான ஆக்கபூர்வமான பதிலும் வழங்கப்படவில்லை. எனவே, குறித்த பணியை தற்காலிகமாக நிறுத்தி 25 ஆண்டுகளாக பயிர்ச் செய்கையில் ஈடுபடுபவர்களுக்கு இரண்டு ஏக்கர் வீதம் காணிகளை வழங்கிய பின்னர் ஏனையவர்களுக்கு வழங்குங்கள் - என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (சு-60)



யாழ். பல்கலையில்

# 4 பேரை பேராசிரியர்களாக தரம் உயர்த்த அனுமதி

## பேரவை வழங்கியது

யாழ்ப்பாணம், ஓக. 29

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் இரண்டு இணைப் பேராசிரியர்கள் உட்பட நான்கு பேரைப் பேராசிரியர்களாகப் பதவி உயர்த்துவதற்கு பல்கலைக்கழகப் பேரவை ஒப்புதல் அளித்துள்ளது.

தாவரவியல் துறைத் தலைவரும், இணைப் பேராசிரியருமான இ.கபிலன் தாவரவியல் பேராசிரியரும், இரசாயனவியல் துறையின் முன்னாள் தலைவரும், இணைப் பேராசிரியருமான திருமதி. மீனா செந்தில்நந்தனன் இரசாயனவியல் பேராசிரியரும், தொழிநுட்ப பீடத்தின் பீடாதிபதியும், விவசாய பீடத்தின் முன்னாள் பீடாதிபதியுமான கலாநிதி சிவமதி சிவச்சந்திரன் பயிரியலில் பேராசிரியராகவும், பௌதிகவியல் துறையின் முன்னாள் தலைவர் கலாநிதி க.விக்னரூபன் பௌதிகவியலில் பேராசிரியராகவும் பதவி உயர்த்தப்படுவதற்குப் பேரவை ஒப்புதல் அளித்துள்ளது.

யாழ்ப்பாண பல்கலைக்கழகப் பேரவையின் மாதாந்தக் கூட்டம் நேற்று சனிக்கிழமை, துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தில், மதிப்பீட்டுக்குழுவின் சிபாரிசின் அடிப்படையில் பேராசிரியர்கள் நிய மனத்துக்கான தேவைப்பாடுகளை நிறைவு செய்தவர்களின் விண்ணப்பங்கள் மற்றும் மதிப்பீட்டுக்குழுவின் அறிக்கைகள் என்பன சமர்ப்பிக்கப்பட்டன. மதிப்பீடுகளின் படியும், தெரிவுக் குழுவின் சிபாரிசின் அடிப்படையிலும் நான்கு பேரையும் பேராசிரியர்களாகப் பதவி உயர்த்துவதற்குப் பேரவை ஒப்புதல் அளித்துள்ளது. (ஒ.5)

## முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சியில் 29,403 வெடிபொருள்கள் அகற்றம்

**கண்ணிவெடியகற்றும் ஸார்ப் நிறுவனம் தெரிவிப்பு**

முல்லைத்தீவு, ஓக. 29

முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் 17 லட்சத்து 10 ஆயிரத்து 146 சதுரமீற்றர் பரப்பளவில் இருந்து 29 ஆயிரத்து 403 அபாயகரமான வெடிபொருள்கள் அகற்றப்பட்டுள்ளன என்று ஸார்ப் நிறுவனத்தின் நடவடிக்கை முகாமையாளர் ஓய்வுபெற்ற கப்டன் பிரபாத் நாரம்பனவ தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது;

ஸார்ப் மனிதாபிமானக் கண்ணிவெடியகற்றும் அரச சார்பற்ற நிறுவனமானது 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தொடக்கம் 2021ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 16 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டிசுட்டான் பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள அம்பகாமம் மற்றும் தச்சடம்பன் பகுதியிலும் கிளிநொச்சி மாவட்டத்தில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள முகமாலை மற்றும் ஆனையிறவிலும் 29 ஆயிரத்து 403 வெடிபொருள்களை அகற்றியுள்ளது.

தொடர்ந்து இந்த நிறுவனம் கண்ணிவெடியகற்றும் பணிகளை முகமாலைப் பகுதியில் முன்னெடுத்து வருகிறது - என்றுள்ளது. (ஐ-316)

## பூநகரியின் இரு கிராமங்களுக்கு பஸ் சேவையை ஏற்படுத்தவும்

கிளிநொச்சி, ஓக. 29

கிளிநொச்சி பூநகரியின் இரணைமாதாநகர் மற்றும் நாச்சிக்குடா பகுதிகளுக்கு பஸ் சேவையை ஏற்படுத்த வேண்டும் என்று பூநகரி பிரதேச சபை உறுப்பினர் சி.சிறீரஞ்சன் கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

இரணைமாதாநகர் மற்றும் நாச்சிக்குடா கிராமங்களில் பெருமளவு குடும்பங்கள் வாழ்கின்றன. 2009 ஆம் ஆண்டுக்கு முன்னர் இக் கிராமங்களுக்கு பஸ் சேவைகள் நடைபெற்றன.

முழங்காவில் மகா வித்தியாலயத்துக்கு எதிர்ப் பக்கமாகவுள்ள கொங்கிறீட் வீதி வழியாக இரணைமாதாநகரை அடைந்து கடற்கரை வழியாக நாச்சிக்குடா கிராமத்தை சென்றடைந்து மீண்டும் முழங்காவில் நகரத்துக்கு பஸ்கள் பயணிக்கக் கூடிய வழித்தடம் உள்ளது. முழங்காவில் மகா வித்தியாலயத்துக்கு இரணைமாதாநகர் மற்றும் நாச்சிக்குடா கிராமங்களில் இருந்து பெருமளவு மாணவர்கள் போக்குவரத்து நெருக்கடிகளுக்கு மத்தியில் வருகை தருகின்றனர்.

மேற்படி கிராமங்களுக்கு பஸ் சேவைகள் நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கை பெற்றோர்களிடம் நீண்ட காலமாக உள்ளது. இது தொடர்பாக இலங்கைப் போக்குவரத்துச் சபையின் கிளிநொச்சி சாலை முகாமையாளருக்கு கடிதம் எழுத உள்ளேன். ஏற்கனவே கிளிநொச்சி நகரத்தில் இருந்து முழங்காவில் வரை இலங்கைப் போக்குவரத்துச் சபை பஸ்களும், தனியார் பஸ்களும் பணியில் ஈடுபடுகின்றன. முழங்காவில் நகரத்தில் இருந்து இரணைமாதாநகர், நாச்சிக்குடா கிராமங்களுக்கும் புதிய வழித்தடத்தில் பஸ் சேவை நடத்தப்பட வேண்டும் என்பதே இக்கிராமங்களில் வாழ்கின்ற மக்களின் கோரிக்கையாகும் - என்றார். (ஐ-13)

# உணவுப் பொருள்களின் விலையை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவும்

கிளிநொச்சி, ஓக. 29

உணவுப் பொருட்களின் விலையினைக் கட்டுப்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச சபை தவிசாளர் க.விஜிந்தன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

முல்லைத்தீவு மாவட்டத்தில் சீனி உள்ளிட்ட சகல உணவுப் பொருள்களின் விலைகளும் அதிகரித்துள்ளன. ஏற்கனவே போரால் முழுமையாக பாதிக்கப்பட்டு மீளக் குடியமர்ந்துள்ள குடும்பங்கள் வறுமையினால் வாடும் நிலையில் உணவுப் பொருள்களின் விலை ஏற்றம் மாவட்ட மக்களைக் கடுமையாகப் பாதித்துள்ளது. அங்கர் மா கூட வசதி படைத்தவர்கள் கைகளுக்கே செல்கின்றது. உணவுப் பொருள்களின் விலையைக் கட்டுப்படுத்த வேண்டியது அரசினுடைய பொறுப்பாகும். அரசு உணவுப் பொருள்கள் மீதான கட்டுப்பாட்டு விலைகளை கொண்டு வரவிட்டால் மாவட்டத்தில் உணவுப் பொருள்களின் விலைகளின் உயர்வுகளைக் கட்டுப்படுத்த முடியாமல் இருக்கும். மாவட்டச் செயலகம் கூட நடவடிக்கை எடுக்க முடியாத நிலையே காணப்படுகின்றது. இலங்கைத் தீவின் உணவு நெருக்கடி பெரும் பிரச்சினையாக உள்ளபோது முல்லைத்தீவு மாவட்ட மக்களின் உணவுப் பொருள்களின் விலை அதிகரிப்பினை இரட்டிப்பு பிரச்சினையாக அரசு பார்க்க வேண்டும் - என்றார். (ஐ-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கையைவிட்டுப் போன கடிவாளம்

நாட்டில் கொரோனாத் தொற்று மக்களைச் சுழற்றியடித்துக் கொண்டிருக்க, தற்போது பொருள்களின் விலைகளும் மக்களைச் சம்மட்டி கொண்டு அடிக்கின்றன. அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் நாளாந்தம் எகிறிக் கொண்டே செல்கின்றன.

ஓராண்டுக்கு மேலாகத் தொடர்ந்து கொண்டிருக்கும் கொரோனா அலைகளால் நாட்டின் பொருளாதாரம் ஆடிப்போயிருக்கின்றமையே இந்த விலையேற்றங்களுக்குக் காரணம் என்று சொல்லப்படுகின்றது. ஆனால் இந்த விடயத்தில் அரசு கமுக்கமாக இருக்க, அமைச்சர்கள் தங்கள் எண்ணப்படி பேச, வியாபாரிகள் விருப்பப்பட்டவாறு விலைகளைக் கூட்டிக்கொண்டே செல்கின்றனர்.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச அதிகாரத்துக்கு வந்தபோது, நாட்டின் நிர்வாகம் முன்னெப்போதும் இல்லாதவாறு இருக்கும் என்று, ஆளும் கட்சியினர் பெருமையாகப் பீற்றிக் கொண்டனர். பெரும்பான்மை இன மக்களும் அவ்வாறுதான் நம்பினார்கள். ஆனால் இப்போதைய நிலைமை தலைகீழாகவே இருக்கின்றது.

கொரோனாத் தொற்று நிலைவரம், அத்தியாவசியப் பொருள்களின் விலையேற்றம் என்று திக்குமுக் காடி இருக்கும் மக்களை, ஆளும் கட்சி அரசியல்வாதிகளும் விடுவதாக இல்லை. ஆளாளுக்கு தமக்குத் தெரிந்தவற்றைக் கூறி நிலைமையை மேலும் மோசமாக்குகின்றனர் என்றால் மிகையில்லை.

சந்தையில் சீனியின் திடீர் விலையேற்றத்துக்கு, அரசியல்வாதிகளின் கருத்துக்களும் ஒரு காரணம் என்பதை மறுக்கமுடியாது. சீனியின் விலையேற்றத்தைக் கட்டுப்படுத்த எதுவுமே செய்ய முடியாது என்று நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் கூறியிருந்த கருத்து, விலையை அதிகரித்த வியாபாரிகளுக்கு ஊக்கமாகவிருந்தது. இப்போது ஒரு கிலோ சீனியின் விலை பல இடங்களில் 200 ரூபாவையும் தட்டிச் சென்றிருக்கிறது. இன்னும் சில நாள்களில் ஆயிரம் ரூபாவையும் எட்டக்கூடும்.

தேர்ப்பாகனின் பிடிக்குள் குதிரைகளின் கடிவாளம் இருக்க வேண்டும். அப்போதுதான் தேர் சரியானவாறு ஓடும். நாட்டின் ஆட்சியும் அவ்வாறானதே. ஆனால் இலங்கையில் இப்போது கடிவாளம் கை நழுவிப் போன நிலைமையே இருக்கின்றது. கட்டுப்பாடின்றிக் கூடும் பொருள்களின் விலைகள், கையைப் பிசைந்து கொண்டிருக்கும் அமைச்சர்கள் என எதுவும் ஆரோக்கியமானதாக இல்லை.

இந்த விடயங்களில் அமைச்சர்களைப் பேச விட்டு அரசு மௌனமாக இருக்காது, உண்மை நிலைவரத்தை வெளிப்படுத்த வேண்டும். வியாபாரிகள் தரப்பில், இறக்குமதியாளர்கள் தரப்பில் வெளிப்படுத்தப்படும் தரவுகள் தொடர்பாகவும் பொதுமக்களுக்கு விளக்கமளிக்க வேண்டும்.

இறக்குமதியாளர்கள், ஒரு மாதத்துக்கான அத்தியாவசியப் பொருள்களே கையிருப்பில் உள்ளன என்று கூறியிருக்கும் நிலையில், அரசு அது தொடர்பான தெளிவுபடுத்தல்களை வழங்க வேண்டும். இல்லாதுவிட்டால் உள்ளூர்ச் சந்தைகளில் பொருள்கள் பதுக்கப்படுவதையும், பொருள்களுக்கு தட்டுப்பாடு ஏற்படுவதையும் ... தவிர்க்க முடியாது.




# முதல்வர் மு.க. ஸ்டாலினுக்கு கூட்டமைப்பு நன்றி தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், ஓக. 29**

**ஈழத் தமிழர்களின் நலனுக்காக தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் 317 மில்லியன் ரூபா செலவில் முன்னெடுக்கும் நலத்திட்ட நடவடிக்கைகளுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நன்றி தெரிவித்துள்ளது.**

தமிழ்நாட்டில் முகாம்களில் வாழும் ஈழத்தமிழ் ஏதிலிகளுக்காக தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னெடுக்க ஆலோசித்துள்ள அகதி முகாம்களில் வாழும் ஈழத்தமிழ் உறவுகளுக்கு நிரந்தரமான வதிவிட வசதிகளை ஏற்படுத்துதல், ஈழத் தமிழர்களின் எதிர்கால நலன் கருதிய வளர்ச்சித் திட்டங்களுடன் அவர்களின் உயர்கல்விக்கான உதவித் திட்டம் மற்றும் தாயகத்துக்கு மீளக்குடியமர விரும்புகின்றவர்கள் தொடர்பான தீர்மானங்களை முன்னெடுப்பதற்கான குழுவையும் அமைத்து ஆக்கபூர்வமான நடவடிக்கையை முன்னெடுத்துள்ளார்.

முதன்முறையாக தமிழ்நாடு சட்ட சபையில் ஒரு முதல்வர் இப்படியான திட்டங்களை அறிவித்துள்ளார். அதற்கான நிதி ஒதுக்கீட்டையும் வழங்கியுள்ளார். இது ஓர் ஆக்கபூர்வமான செயலாகும்.

இதற்காக எமது மக்கள் சார்பாகவும் கூட்டமைப்பு சார்பிலும் நன்றியும் பாராட்டும் தெரிவிக்கின்றோம் - என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (கு)

# பந்துலவுக்கு கொரோனா பிரமுகர்களுக்குச் சிக்கல்

கொழும்பு, ஓக.29

வர்த்தகத்துறை அமைச்சர் பந்துல குணவர்த்தனவுக்கு நேற்று கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில், ஜனாதிபதி, பிரதமர், நிதியமைச்சர் ஆகியோர் பங்குகொண்ட கொரோனா ஒழிப்புச் செயலணிக் கூட்டத்தில் அவரும் பங்கேற்றிருந்தார்.

தனக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டதை நேற்று அமைச்சர் தனது டுவிற்றர் பக்கத்தில் பதிவிட்ட பதிவில் உறுதிப்படுத்தியிருந்தார்.

கடந்த 20ஆம் திகதி முதல் தன்னுடன் தொடர்பைப் பேணியவர்கள் தங்களைச் சுயதனிமைப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நேற்றுமுன்தினம் நடந்த கொரோனா ஒழிப்புச் செயலணிக் கூட்டத்தில் அவர் பங்கேற்றிருந்த நிலையில், அந்தக் கூட்டத்தில் பங்கேற்ற முக்கியஸ்தர்கள் தங்களைத் தனிமைப்படுத்திக் கொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் ஜனாதிபதி, பிரதமர், நிதியமைச்சர், சுகாதார அமைச்சர், கொவிட் தடுப்பு இராஜாங்க அமைச்சர், இராணுவத் தளபதி, பொலிஸ்மா அதிபர், சுகாதாரத் துறை உயர் அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (எ-இ)

# 24 மணித்தியாலங்களில் நாட்டில் 667 பேர் கைது

*63 வாகனங்களும் பறிமுதல்*

கொழும்பு, ஓக. 29

தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறியமை தொடர்பில் நேற்றுக் காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் 667 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். 63 வாகனங்களும் பறிமுதல் செய்யப்பட்டுள் ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதற்கமைய, தனிமைப்படுத்தல் விதிகளை மீறியமை தொடர்பில் கடந்த ஒக்ரோபர் தொடக்கம் இதுவரை 60 ஆயிரத்து 288பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். மேல் மாகாணத்தின் எல்லைகளில் அமைக்கப்பட்டுள்ள 13 வீதிச் சோதனைச் சாவடிகளில் மேல் மாகாணத்துக்குள் பிரவேசித்த 641 வாகனங்களில் பயணித்த ஆயிரத்து 128 பேர் சோதனையிடப்பட்டுள்ளனர். அத்துடன், மேல் மாகாணத்தில் இருந்து வெளியேறிய 500 வாகனங்களில் பயணித்த 901 பேரும் சோதனையிடப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது. (கு-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுவிற்சர்லாந்துக்கு பறந்தது உலகின் மிகப் பெரிய இரத்தினக்கல்

இரத்தினபுரி, பெல்மடுல்ல பகுதியில் கண்டெடுக்கப்பட்ட உலகின் மிகப் பெரிய நீல இரத்தினக்கல் பாதுகாப்பாக சுவிற்சர்லாந்துக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. நீல மாணிக்கம் ஒரு சான்றிதழைப் பெறுவதற்காக சுவிற்சர்லாந்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது என்று இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தை தெரிவித்துள்ளார்.

சுவிற்சர்லாந்தில் உள்ள இரத்தின ஆய்வகத்தில் முழுமையாக பரிசோதித்த பிறகு தரச் சான்றிதழ் வழங்கப்படும். பின்னர் வெளிநாட்டு இரத்தினக்கல் ஏலத்தில் அதனை விற்க ஏற்பாடு செய்யப்படவுள்ளது. அந்த இரத்தினக்கல் தொடர்பாக உலகின் பல நாடுகளில் இருந்து தொடர்பு கொண்டதாகவும், சீனாவில் நடக்கும் கண்காட்சியில் அதை விற்க முடியும் என்று எதிர்பார்ப்பதாகவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார். (ஐ-இ)

# பைத்தியக்காரத்தனமாக செயற்படுகின்றது அரசு

### பதவி விலகியது குறித்து இராஜ் கருத்து



கொழும்பு, ஓக. 29

"நாட்டில் ஆட்சி மாற்றம் ஒன்று அவசியமான போது தற்போது ஆட்சியில் உள்ளவர்களை ஆதரித்தாலும், இந்த அரசு செய்யும் அனைத்து பைத்தியக்கார வேலைகளுக்கும் என்னால் பொறுப்புக்கூற முடியாது." இவ்வாறு இசைக் கலைஞர் இராஜ் வீரரத்ன தெரிவித்தார்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் பணிப்பாளர் பதவியை இராஜிநாமா செய்தது தொடர்பாக ஊடகங்களுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பதவியை இராஜிநாமா செய்யக் கோரி நாமல் ராஜபக்சவோ, யோசித ராஜபக்சவோ எனது கன்னத்தில் அறையவில்லை. இந்த அரசில் உள்ளவர்கள் பைத்தியக்காரத்தனமாகச் செயற்படுகின்றனர். நாட்டில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச ஏதாவதொரு மாற்றத்தை ஏற்படுத்துவார் என்று நான் தொடர்ந்தும் நம்புகின்றேன்.

மக்கள் விடுதலை முன்னணியினர் எனக்கு எதிராகவும் அரசுக்கு எதிராகவும் பல்வேறு போலிப்பரப்புரைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தில் இருந்து நான் விலகினாலும், எதிர்கால வேலைத்திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவேன் என்று நாமல் ராஜபக்சவிடம் தெரிவித்தேன். நான் தொடர்ந்து இசைத்துறையில் கவனம் செலுத்தவுள்ளேன்" - என்றார். (து-22)

## நாட்டில் மழைக்கு வாய்ப்பு

கொழும்பு, ஓக. 29

நாட்டின் தென்மேற்குப் பகுதியில் மழையுடனான காலநிலை அடுத்த சில நாள்களில் அதிகரிக்கும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களம் மேலும் தெரிவித்ததாவது;

மேல், சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் 100 மில்லி மீற்றருக்கு அதிகமான பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

சப்ரகமுவ மாகாணத்திலும் களுத்துறை, காலி, மாத்தறை, கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் சில இடங்களில் 75 மில்லி மீற்றருக்கு அதிகமான பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது. வடமேல் மாகாணத்திலும் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் பல தடவைகள் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஊவா மாகாணத்திலும் அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களிலும் சில இடங்களில் பிற்பகல் 2 மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும், மின்னல் தாக்கங்களால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை பொது மக்கள் பின்பற்ற வேண்டும் என்றுள்ளது. (ஐ-இ)

## இலங்கை இன்னும் சிவப்புப் பட்டியலில்

பிரிட்டனின் புதுப்பிக்கப்பட்ட கொரோனாப் பயணக் கட்டுப்பாடுகள் வெளியிடப்பட்டுள்ள நிலையில், இலங்கை தொடர்ந்தும் சிவப்புப் பட்டியலில் உள்ளது. இலங்கையில் கொரோனா பரவல் தீவிரமடைந்த காரணத்தால் பிரிட்டனின் சிவப்புப் பட்டியலில் இலங்கை தொடர்கின்றது.

இதேவேளை, செப்ரெம்பர் மாதமளவில் பிரிட்டனின் சிவப்புப் பட்டியலில் இருந்து இலங்கை வெளியேறலாம் என்று பிரிட்டனுக்கான இலங்கைத் தூதுவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

பிரிட்டனின் புதுப்பிக்கப்பட்ட பயணக் கட்டுப்பாடுகளில் கனடா, டென்மார்க், பின்லாந்து, போர்த்துக்கல், சுவிற்சர்லாந்து, லிச்சென்ஸ்டீன் மற்றும் லிதுவேனியா ஆகிய நாடுகள் பச்சைப் பட்டியலுக்கு முன்னேறியுள்ளன. தாய்லாந்து மற்றும் மொன்டினீக்ரோ ஆகிய நாடுகள் புதிதாக சிவப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன. பிரிட்டனின் புதுப்பிக்கப்பட்ட பயணக்கட்டுப்பாடுகள் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் நடைமுறைக்கு வருகின்றது. (து-22)

## பிரதமர் மஹிந்தவுக்கு கொரோனா இல்லை!

### யோஷித ராஜபக்ச விளக்கம்



கொழும்பு, ஓக. 29

பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் உடல்நிலை குறித்து சமூக வலைத்தளங்களில் வெளியாகும் வதந்திகள் தொடர்பில் பிரதமர் அலுவலகப் பணிக்குழாமின் பிரதானி யோஷித ராஜபக்ச ஊடகங்களுக்கு விளக்கமளித்துள்ளார்.

பிரதமர் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகவில்லை எனவும், அவர் சிறந்த உடல் ஆரோக்கியத்துடன் இருக்கின்றார் எனவும் யோஷித ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ச கொரோனாத் தொற்றுக்குள்ளான நிலையில் கொழும்பிலுள்ள தனியார் மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று சமூக வலைத்தளங்களில் செய்திகள் வெளியான நிலையிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.

இந்தச் செய்திகள் முற்றிலும் பொய்யானவை. அத்துடன் பிரதமர் தனது வழமையான பணிகளில் தொடர்ந்தும் ஈடுபட்டு வருகின்றார். நேற்றுமுன்தினம் காலை கொரோனாத் தடுப்புச் செயலணியின் கலந்துரையாடலில் பிரதமர் ஈடுபட்டிருந்தார்.

நாடு நெருக்கடியை எதிர்கொண்டுள்ள நிலையில் தொற்று நோயைச் சமாளிக்க கவனம் செலுத்த வேண்டிய நேரத்தில் தவறான தகவல்களைப் பரப்பவேண்டாம்.

இதேபோன்று கொரோனாத் தொற்றுக்குள்ளாகி சிகிச்சை பெற்றுவரும் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹணவின் உடல்நலம் தொடர்பிலும் இவ்வாறான வதந்திகள் வெளியாகியிருந்தன.

எனினும், பொலிஸ் தலைமையகமும் அவற்றை மறுத்து செய்தி வெளியிட்டிருந்ததோடு, சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண, தாம் உடல் நலத்துடன் இரு[illegible] உறுதிப்படுத்தும் வகையில் செல்பி படமொன்றை வெளியிட்டிருந்தார். அத்துடன் நேற்று அவர் குணமடைந்து மருத்துவமனையிலிருந்து வீடு திரும்பியுள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (து-22)

### பலாங்கொடை நகரசபை விவகாரம்

# சப்ரகமுவ ஆளுநரின் உத்தரவுக்குத் தடை

### நீதிமன்றம் அதிரடித் தீர்ப்பு

கொழும்பு, ஓக. 29

பலாங்கொடை நகரசபைத் தலைவர் பதவியிலிருந்து சாமிக ஜெயமினி விமலசேனவை தற்காலிகமாக பணி இடை நீக்கம் செய்த சப்ரகமுவ ஆளுநரின் நடவடிக்கையை இரத்து செய்து, இரத்தினபுரி மாகாண மேல் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

அத்துடன் பலாங்கொடை நகர சபைத் தலைவர் விவகாரத்தில், ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ மேற்கொண்டு எந்த நடவடிக்கைகளையும் எடுக்கக் கூடாது எனவும் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. மனுதாரரான பலாங்கொட நகர சபையின் தலைவருக்கு எதிராக, நகர சபை கட்டளைச் சட்டத்தின் 184 (1)ஆம் பிரிவின் கீழ் [illegible] குற்றச்சாட்டுக்களை விசாரிக்க ஆளுநரினால் நியமிக்கப்பட்ட ஓய்வு பெற்ற நீதிபதியின் நியமனத்தையும் நீதிமன்றம் இரத்து செய்து உத்தரவிட்டது. இரத்தினபுரி மாகாண மேல் நீதிமன்ற நீதிபதி லங்கா ஜயரத்ன இதற்கான உத்தரவுகளை பிறப்பித்துள்ளார்.

தன்னை பணி இடைநீக்கம் செய்தமையை சவாலுக்கு உட்படுத்தி, பலாங்கொட நகரசபைத் தலைவர் சாமிக ஜெயமினி விமலசேன தாக்கல் செய்துள்ள விசேட மனு மீதான விசாரணையின் போதே நீதிபதி இந்தத் தடை உத்தரவுகளை பிறப்பித்துள்ளார். இம்மனுவின் முதலாம் பிரதிவாதியாக சப்ரகமுவ ஆளுநரும் 2ஆம் பிரதிவாதியாக நகர சபை [illegible] யான பிரதித் தலைவரும் [illegible] பட்டுள்ளனர். இந்த நிலையில் 'மனுதாரருக்கு எதிரான விசாரணைகளுக்கு ஓய்வுபெற்ற நீதித்துறை அதிகாரியை நியமித்தமை, ஆளுநரால் எந்த அடிப்படையும் நியாயமும் இன்றி எடுக்கப்பட்ட முடிவாகும். எனவே அந்த முடிவை இந்த நீதிமன்றம் தடை மாற்று நீதிப் பேராணை ஊடாக வலுவிழக்கச் செய்கிறது.

அத்துடன் விசாரணை முடியும் வரை, மனுதாரரை பணி இடைநீக்கம் செய்ய ஆளுநர் எடுத்த முடிவையும், அந்தக் காலப்பகுதியில் மனுவின் 2ஆவது பிரதிவாதியான எம்.டி.எம். ரூமி (பிரதித் தலைவர்) நகர சபைத் தலைவரின் அதிகாரங்களை பயன்படுத்தவும் இந்த நீதிமன்றம் தடை [illegible] தடை மாற்று நீதிப் பேராணையை பிறப்பிக்கிறது என நீதிபதி லங்கா ஜயரத்ன அறிவித்தார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கில் இதுவரை

# தொற்று 23, 036 உயிரிழப்பு 329

**யாழ்ப்பாணம், ஓக. 29**

**வடக்கு மாகாணத்தில் கடந்த வியாழக்கிழமை வரை 23 ஆயிரத்து 36 பேர் கொவிட்-19 நோய்த்தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 329 பேர் உயிரிழந்துள்ளனர். வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணம் மாவட்டத்திலேயே அதிகளவானோர் உயிரிழந்துள்ளனர். நேற்றுமுன்தினம் 224 பேர் யாழ்ப்பாணத்தில் கொவிட்-19 நோயால் உயிரிழந்துள்ளனர்.**

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று பரவல் 2020 ஜனவரியில் ஆரம்பித்த போதும் வடக்கு மாகாணத்தில் 2020 மார்ச்சில் யாழ்ப்பாணத்தில் முதலாவது தொற்றாளர் கண்டறியப்பட்டார். அன்றிலிருந்து நேற்றுமுன்தினம் வரையான 17 மாதங்களில் வடக்கு மாகாணத்தில் 23 ஆயிரத்து 36 பேர் கொவிட்-19 தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அவர்களில் 329 பேர் உயிரிழந்துள்ளனர். யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 226 பேரும் வவுனியா மாவட்டத்தில் 55 பேரும் கிளிநொச்சி மாவட்டத்தில் 18 பேரும் முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களில் தலா 15 பேரும் கொவிட்-19 நோயால் உயிரிழந்துள்ளனர். (த-26)



## புழுதியாற்றுப் பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வு

கிளிநொச்சி,ஓக,29

கிளிநொச்சி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மாவடி புழுதியாற்றங் கரையில் சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெற்று வருவதாக அப்பகுதியின் பொது அமைப்பினர் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது;

கல்மடு குளப்பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்பாக பத்திரிகைகளில் கடந்த மாதம் செய்திகள் வெளிவந்ததையடுத்து தற்பொழுது அப்பகுதிகளில் இராணுவக்காவலரண்கள் அமைக்கப்பட்டு சட்டவிரோதமணல் அகழ்வு முற்றாக முடக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் தற்போது மாவடி புழுதியாற்றங்கரையில் மணல் அகழ்வு இடம்பெற்று வருகிறது.

இரவு வேளைகளில் காடுகள் அழிக்கப்பட்டு புதிதாக பாதைகள் அமைக்கப்பட்டு சட்டவிரோத மணல் அகழ்வு முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

தற்போது நாடு முற்றாக மூடப்பட்டுள்ள நிலையில் மக்கள் நடமாட்டங்கள் இல்லாத சமயத்தில் சட்டவிரோத மணல் அகழ்வு அதிகமாக இடம்பெற்று வருகிறது. இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றோம் -என்றனர். (ஐ-113)

## வீதிகளிலுள்ள வெடிபொருள்களை அகற்ற நடவடிக்கை எடுக்கவும்

### பொதுமக்கள் கோரிக்கை

முல்லைத்திவு, ஓக.29

முல்லைத்தீவு கரைதுறைபற்று பிரதேசத்துக்குட்பட்ட வீதிகளில் உள்ள வெடிபொருள்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாத்தளன், அம்பலவன்பொக்கணை மற்றும் வலைஞர்மடம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது;

போர் இடம்பெற்ற காலத்தில் வீதிகளில் புதைக்கப்பட்ட வெடிபொருள்களினால் தற்போதும் அச்சுறுத்தல் காணப்படுகின்றது.

கால்நடைகள் வெடிபொருள்களில் சிக்கி படுகாயமடைகின்ற சம்பவங்கள் தொடர்கின்றதன் காரணமாக குறித்த பகுதிகளுக்கு பொதுமக்கள் செல்வதில் அச்சமடைகின்றனர்.

எனவே வெடிபொருள்கள் வீதிப்பகுதியில் இருந்து முழுமையாக அகற்றப்பட வேண்டும்.

இதற்கான நடவடிக்கையை மாவட்டச் செயலகம் மேற்கொள்ள வேண்டும். -என்றனர். (ஐ-13)

## இடர்காலப் பணியாளர்களுக்கு உலர் உணவுப் பொருள்கள்



கிளிநொச்சி, ஓக.29

கிளிநொச்சி கரைச்சி பிரதேசசபையின் இடர்காலப் பணியாளர்களுக்கு ஒரு தொகுதி உலர் உணவுப் பொருள்கள் கடந்த வியாழக்கிழமை கையளிக்கப்பட்டன.

வானவில் ஆடைத்தொழிற்சாலை நிறுவனம் தனது சமூக நலத்திட்டத்தின் ஊடாக இந்த உதவியை வழங்கியுள்ளது.

நிகழ்வில் கரைச்சி பிரதேசசபைத் தவிசாளர் அ. வேழமாலிகிதன், கரைச்சி பிரதேசபையின் உப அலுவலக பொறுப்பதிகாரி நிசாந்தன், வானவில் நிறுவன அதிகாரிகள் மற்றும் கரைச்சி பிரதேச சபை இடர்காலப் பணியாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ)

## வழிதவறி அலைந்து திரிந்தவர் பாதுகாப்பாக வீட்டில் சேர்ப்பு

வட்டுக்கோட்டை,ஓக.29

வழிதவறி வந்த மனநலம் குன்றிய குடும்பத் தலைவர் ஒருவர் பாதுகாப்பாக மீட்கப்பட்டு அவரது குடும்பத்தினருடன் சேர்க்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை பொலிஸ்பிரிவுக்குட்பட்ட சுழிபுரம் மத்தி பகுதியில் கடந்த வியாழக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் தையிட்டி பகுதியைச் சேர்ந்த குறித்த நபர் மனநலம் குன்றியவர் என்பதோடு, இரண்டு சிறுநீரகமும் செயலிழந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் குருதி சுத்திகரிப்புக்காகச் சென்றுள்ளார்.

தனது கிளினிக்கை முடித்துகொண்டு குறித்த நபர் தையிட்டியில் உள்ள வீட்டுக்குச் செல்லாது வழி தவறி சுழிபுரம் மத்தியில் அலைந்து திரிந்துள்ளார்.

நள்ளிரவு வேளையிலும் குறித்த நபர் அலைந்து திரிவதை அவதானித்த சுழிபுரம் மத்தி சிவில் பாதுகாப்பு குழுத் தலைவர் குறித்த குடும்பத் தலைவரை மீட்டு ஜே/173 கிராம அலுவலருக்கும், வட்டுக்கோட்டை பொலிஸாருக்கும் தெரியப்படுத்தியுள்ளார்.

இதனையடுத்து கிராம அலுவலரின், அனுமதியுடன் குறித்த நபரை தையிட்டியில் உள்ள அவரது வீட்டில் சேர்த்துள்ளனர். (ஐ-20)



## கசிப்பு உற்பத்தி, விற்பனை சந்தேகத்தில் இருவர் கைது

கிளிநொச்சி,ஓக.29

சட்டவிரோத கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இருவரை தருமபுரம் பொலிஸார் கைது செய்தனர்.

சட்டவிரோத உற்பத்தியில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் மாயவனூர் பகுதியில் வைத்து நேற்றுமுன்தினம் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

அவரிடமிருந்து 42 லீற்றர் கசிப்பும், கசிப்பு உற்பத்தி உபகரணங்களும் கைப்பற்றப்பட்டன.

இதேவேளை இராமநாதபுரம் பகுதியில் சட்டவிரோத கசிப்பு விற்பனையில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் நேற்றுமுன்தினம் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

அவரிடமிருந்து 21 லீற்றர் கசிப்பு கைப்பற்றப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்கள் இருவரும் விசாரணையின் பின்னர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டனர் என்று தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். (ஐ-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பணிப் பெண்/பையன் தேவை

யாழ் பிரவுண் வீதியில் உள்ள வீடு ஒன்றில் தங்கியிருந்து சமையல் செய்வதற்கு பெண் ஒருவரும், சிறு வேலை செய்வதற்கு பையன் ஒருவரும் தேவை. தங்கி இருந்து வேலை செய்யக் கூடியவர்கள் மட்டும். ஒருவருக்கான சம்பளம் 21,000/= உணவு தங்குமிடம் வழுங்கப்படும்.

தொடர்பு: **0777 157 070**

# தொற்றாளர்கள் 936 பேர் உயிருக்குப் போராட்டம்!

கொழும்பு, ஓக. 29

ஒட்சிசனின் உதவியுடன் 936 கொரோனாத் தொற்றாளர்கள் நாடளாவிய ரீதியிலுள்ள மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்று கொரோனாப் பரவலைத் தடுப்பதற்கான ஒருங்கிணைப்பாளர் மருத்துவர் அன்வர் ஹம்தானி தெரிவித்துள்ளார்.

நீண்ட நாள்பட்ட நோய்களான நீரிழிவு, உயர் குருதி அழுத்தம், பக்கவாதம், சிறுநீரக நோய்களால் பாதிக்கப்பட்ட 4 ஆயிரத்து 347 பேர் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்றும் அவர் தெரிவித்தார். கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான நிலையில் சிகிச்சை பயனின்றி மரணமடைந்த அநேகமான தொற்றாளர்கள் நீண்ட நாள்பட்ட நோய் நிலைமைகளால் பாதிக்கப்பட்டவர்கள் என்று சுகாதார அமைச்சும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-22)



## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 06 . 10 . 1958

மறைவு 26 . 08 . 2021

### திரு. சபாரத்தினம் சந்திரசேகரம்

(சின்னமணி பத்தர்)

இணுவிலை பிறப்பிடமாக கொண்ட சபாரத்தினம் சந்திரசேகரம் கடந்த (26.08.2021) அன்று இறைபதம் அடைந்த செய்தி கேட்டு மனவருத்தம் அடைந்துள்ளோம்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !

**வினோ நகைப் பூங்கா**
**(உரிமையாளர் மற்றும் ஊழியர்கள்)**
**185, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

## கண்ணீர் அஞ்சலி



யாழ் போதனா வைத்தியசாலையில் மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளராக் கடமை புரியும் **திருமதி கே.லேனிகா** அவர்களின் பாசமிகு தந்தையார்

### திரு. நாகலிங்கம் ரட்ணம்

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**நிறைவுகாண் மருத்துவவியல்**
**தொழில் வல்லுனர்கள் ஒன்றியம்**
**யாழ்ப்பாணம்.**

## மரண அறிவித்தல்



### கலாபூஷணம் கந்தையா சரவணபவன் (ஓவியர்)

மூளாயைப் பிறப்பிடமாகவும், நவாலி கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சரவணபவன் அவர்கள் கடந்த (26.08.2021) வியாழன் இரவு 10.00 மணியளவில் காலமாகியுள்ளார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா, பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற மார்க்கண்டு மற்றும் செல்வரத்தினம் ஆகியோரின் அன்பு மருமகனும், கமலாதேவியின் அன்புக் கணவரும், வேதாரணியின் அன்புத் தந்தையும், மயுரனின் அன்பு மாமனாரும், அக்ஷைதனின் பாசமிகு பேரனும், விசாகபூஷணம், விசாகரத்தினவேல், லிமா லோகேஸ்வரி, கோமதிதேவி, சயலொளிபவன், ஸ்கந்தமலர், குகபூஷணி, கோடீஸ்வரி, ஸ்ரீகௌரி, கேதீஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான முருகையா, சிவமணி, மரியதாசன் மற்றும் செல்வநாதன், சிவானந்தி, குகதாஸன், இராமலிங்கம், சோமசுந்தரம், காலஞ்சென்ற அல்போன்ஸ் மற்றும் சிவபாதம் ஆகியோரினதும் மீனலோசனி, ஸ்ரீஸ்கந்தராசா, குணதாசன், அமிர்தகௌரி, பத்மலோசனி, நிர்மலாதேவி, அரவிந்தகுமார், பானுகோபன், கமலலோசனி ஆகியோரினதும் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.08.2021) ஞாயிற்றுக் கிழமை அவரது இல்லத்தில் காலை 8.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் கொத்துக்கட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



பிறப்பு 05 . 03 . 1971

இறப்பு 26 . 08 . 2021

### அமரர் Lion.சண்முகவேல் விக்னேஷ்வரன்

**(Global Enterprises உரிமையாளர்) Computer Engineer**

யாழ் நாச்சிமார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகவேல் விக்னேஷ்வரன் 26-08-2021 அன்று காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகவேல், பத்மாவதி தம்பதிகளின் புதல்வரும் சிவகுமார் (மணி), புஷ்பராஜா, கிருஷ்ண்வேணி, பாலசுப்ரமணியம், மனோன்மணி, ஹேமலதா (லதா), சந்திரகலா, ஆனந்தராஜா, கலைவாணி (வாணி) ஆகியோரின் சகோதரரும் அருந்ததி, சுப்ரமணியம், சுபத்திரா, ஆனந்தன், சுதர்சன், கிருஷ்ணதாஸ், சுஜிதா, கிரிகரன் ஆகியோரின் மைத்துனரும் [illegible]கிரன், அஜந்தன் , ஜனனி , ஆரணி, இந்திரா , நிர்த்திகன் ஆகியோரின் மாமனாரும் ஜதீசன், ஜனுசன், ஜதுசன் ஆகியோரின் பெரியப்பாவும் அபிஷனா, காயத்ரி, கௌதமன், மதுரா ஆகியோரின் சித்தப்பாவும் ஆவார.

அன்னாரின் பூதவுடல் (27.08.2021) அன்று பொரளை இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தொடர்பு:**
**வாணி : 0094763528537**
**கரன் 0094776760073**
**அஜந்தன் 0094769199144**

**தகவல்: குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



பிறப்பு 01 . 05 . 1949

இறப்பு 27 . 08 . 2021

### சின்னத்துரை சந்திரலிங்கம் (தவம்)

(பட வரைஞர்)

நவாலியை பிறப்பிடமாகவும் கொழும்பு மட்டக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை சந்திரலிங்கம் (தவம்) அவர்கள் கடந்த (27.08.2021) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற. சின்னத்துரை பொன்னம்மா தம்பதியரின் மூத்த புதல்வனும், இராமன் மாலதி தம்பதியரின் பாசமிகு மருமகனும், சரஸ்வதியின் அன்புக் கணவரும், சிறிக்காந்த், நரேந்திர பிரசாத், திவாகர் ஆகியோரின் அன்புமிகு தந்தையும், தியாகலிங்கம் (அரியம்), விமலாதேவி (ரதி-ஜேர்மனி), யோகலிங்கம் (ஜெயம்), சாரதா[illegible]தேவி (ரஞ்சி), கணேசலிங்கம் (ராதா-சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கடந்த (27.08.2021) அன்று நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும் .

**தகவல்: குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதிமுறை மீறி களஞ்சியப்படுத்திய உலர்ந்த கடலட்டைகளுடன் கைது

**மன்னார், ஓக. 29**

**மன்னார் - எருக்கலம்பிட்டிப் பகுதியில் அனுமதிப்பத்திர விதிமுறைகளை மீறும் வகையில் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்த 9ஆயிரத்து 100 கிலோகிராம் உலர்ந்த கடலட்டைகளை கடற்படையினர் பறிமுதல் செய்துள்ளனர்.**

சம்பவம் தொடர்பில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். எருக்கலம்பிட்டிப் பகுதியில் கடற்படையினர் நேற்றுமுன்தினம் முன்னெடுத்த விசேட தேடுதலின் போது அவை சிக்கின. இதன்போது, கைதுசெய்யப்பட்டவர் புத்தளத்தைச் சேர்ந்தவர் என்பது தெரிய வந்துள்ளதாக இலங்கைக் கடற்படை அறிவித்துள்ளது. சந்தேகநபர் கைப்பற்றப்பட்ட கடலட்டைகளுடன் மேலதிக விசாரணைகளுக்காக மன்னார் கடற்றொழில் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (த-இ)

2 ஆயிரம் ரூபா கொடுப்பனவை வழங்க

# முல்லைத்தீவு மாவட்டத்துக்கு மேலும் ரூ. 12.1 மில். தேவை

## மாவட்டச் செயலர் தெரிவிப்பு

முல்லைத்தீவு,ஓக.29

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஊரடங்கால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு 2 ஆயிரம் ரூபா வழங்குவதற்காக மேலும் 12.1 மில்லியன் ரூபா நிதி அரசிடம் கோரப்பட்டுள்ளது என்று மாவட்டச் செயலர் க.விமலநாதன் தெரிவித்துள்ளார்.

மாவட்டத்தின் கொவிட் 19 நிலைமைகள் மற்றும் நிவாரணம் வழங்கல் தொடர்பான ஊடக சந்திப்பு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது;

முல்லைத்தீவு மாவட்டத்தில் 578 பேர் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த ஆண்டு ஜனவரி தொடக்கம் தற்போது வரை 15 உயிரிழப்புகள் இடம்பெற்றுள்ளன. 784 பேர் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

ஊரடங்கால் தொழில் பாதிக்கப்பட்டவர்களுக்கான 2 ஆயிரம் ரூபா கொடுப்பனவுகள் வழங்கும் நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்தக் கொடுப்பனவுக்கு 8 ஆயிரத்து 553 குடும்பங்கள் தகுதி பெற்றுள்ளனர். மாவட்டத்துக்கு கிடைத்த 5 மில்லியன் ரூபா நிதியை 2 ஆயிரத்து 500 குடும்பங்களுக்கு வழங்கியுள்ளோம்.

12.1 மில்லியன் மேலதிக நிதி கோரியுள்ளோம்.நிதி கிடைத்தவுடன் ஏனையவர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். -என்றார். (ஐ-19)

# போலியாக நடிக்கின்றார் ஜனாதிபதி கோத்தாபய

## முன்னாள் உறுப்பினர் கூறுகின்றார்

மன்னார், ஓக. 29

நாட்டின் மிக நெருக்கடியான நிலையில் சர்வதேச நாடுகளின் உதவிகளை பெற முயற்சிப்பதற்கு ஜனாதிபதி போலியாக நடிக்கின்றார் என்றே தமிழ் மக்கள் மத்தியில் சந்தேகங்கள் ஏற்பட்டுள்ளன என்று வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நெருக்கடிகளிலிருந்து தம்மைப் பாதுகாக்க இலங்கை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, பயங்கரவாத தடைச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ள ஓய்வுநிலை நீதிபதி அசோக டீ சில்வா தலைமையில் ஒரு குழுவை நியமித்துள்ளார்.

அரசியல் கைதிகளின் பொது மன்னிப்பின் பின்பே பயங்கரவாத தடைச் சட்டத்தின் திருத்தம் தொடர்பான உண்மையை ஓரளவு நம்ப முடியும். ஆனால் நாட்டின் நிலையான இன நல்லிணக்கத்துக்கு ஒரேவழி பயங்கரவாத தடைச் சட்டத்தை முற்றாக நீக்குவதே - என்று அவர் மேலும் தெரிவித்தார். (த-213)

# முதன்முதலாக சட்டசபையூடாக ஈழ ஏதிலிகளுக்கு உதவிகள்

## ஸ்டாலினுக்கு செல்வம் எம்.பி. நன்றி தெரிவிப்பு

ஈழத் தமிழர்களுக்காக முதன்முறையாக தமிழ்நாடு சட்டசபையில் ஒரு முதல்வர் திட்டங்களை அறிவித்ததோடு அதற்கான நிதி ஒதுக்கீட்டையும் வழங்கி ஆக்கபூர்வமான செயற்றிட்டங்களையும் அறிவித்துள்ளார். இதற்கு எமது மக்கள் சார்பாக உளம் கனிந்த நன்றியையும் தங்களது நல்லாட்சி தொடர்வதற்கு வாழ்த்துக்களையும் தெரிவிக்கிறேன் என்று, வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் அகதிமுகாம்களில் வசிக்கும் ஈழத்தமிழர்களின் நலன்கருதி பல்வேறு நலத்திட்டங்களை முதல்வர் மு.க. ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

அதற்கு நன்றி தெரிவித்து அனுப்பிவைத்த கடிதத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

நீண்டகாலமாக தமிழ் நாட்டிலே அகதி முகாம்களில் வாழ்ந்து கொண்டிருக்கும் ஈழத்தமிழ் உறவுகளுக்கு நிரந்தரமான வதிவிட வசதிகளையும், அவர்களுடைய எதிர்கால நலன் கருதிய வளர்ச்சித் திட்டங்களையும் அறிவித்துள்ளீர்கள்.

அத்துடன் நம்முடைய சந்ததிகளின் உயர்கல்விக்கான உதவித் திட்டத்தையும் மற்றும் இலங்கையில் மீளக் குடியமர விரும்புகின்றவர்கள் தொடர்பான தீர்மானங்களை முன்னெடுப்பதற்கான குழுவையும் அமைத்து ஆக்கபூர்வமான நடவடிக்கையை நீங்கள் முன்னெடுத்திருக்கிறீர்கள். அதற்கு நன்றி . என்று கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (த-110)

# 60 வயதுக்கு மேற்பட்டவர்களின் பெயர்ப்பட்டியல் விவரம் சேகரிப்பு

கொழும்பு, ஓக. 29

60 வயதுக்கு மேற்பட்டவர்களின் விவரங்கள் அடங்கிய மாவட்ட அளவிலான பட்டியலை மாவட்டச் செயலாளர்களிடமிருந்து உடனடியாக பெற சுகாதார அமைச்சு முடிவு செய்துள்ளது.

அடுத்த சில நாள்களில் அனைத்து மக்களுக்கும் தடுப்பூசி போடும் திட்டம் துரிதப்படுத்தப்படும் என்று சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார். நேற்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பிரதிநிதிகளை சந்தித்தபோது சுகாதார அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார். 18 வயதுக்கு உட்பட்டவர்ளுக்கும் தடுப்பூசி போடுவது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக அமைச்சர் ரம்புக்வெல தெரிவித்துள்ளார். (த-இ)

# துருக்கித் தூதுவரை சந்தித்தார் பீரிஸ்!

கொழும்பு, ஓக.29

இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸுக்கும், இலங்கைக்கான துருக்கிக் குடியரசின் தூதுவர் டிமெட் செகெர்சியோலுவுக்கும் இடையே கடந்த புதன்கிழமை வெளிவிவகார அமைச்சில் சந்திப்பொன்று நடந்துள்ளது.

இந்தச் சந்திப்பில் அரசியல், பொருளாதார மற்றும் கலாசாரத் துறைகளில் இலங்கை மற்றும் துருக்கிக்கு இடையேயான இருதரப்பு உறவுகளின் முக்கியத்துவத்தை வலியுறுத்திய அமைச்சர் பீரிஸ், தற்போதுள்ள சிறந்த உறவுகளை மேலும் உயர்த்துவதற்கான இலங்கையின் ஆர்வத்தை வெளிப்படுத்தினார். இலங்கை மற்றும் துருக்கிக்கு இடையேயான பலதரப்பட்ட ஒத்துழைப்பின் வலுவான அரசியல் உறவுகள், வர்த்தகம், முதலீடு, விஞ்ஞானம், தொழில்நுட்பம், கல்வி மற்றும் கலாசாரம் ஆகிய துறைகளிலான ஒத்துழைப்பின் பன்முகத் தன்மையை தூதுவர் செகெர்சியோலு வலியுறுத்தினார்.

இந்தச் சந்திப்பில் பிராந்திய ஒத்துழைப்புக்கான இராஜாங்க அமைச்சர் தாரக்க பாலசூரிய, வெளியுறவுச் செயலாளர் அட்மிரல் பேராசிரியர் ஜயநாத் கொலம்பகே மற்றும் வெளிநாட்டு அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள் பங்கேற்றனர். (எ-இ)

# ஹிஸ்புல்லாவை விடுதலைசெய்ய இலங்கை அரசுக்கு அழுத்தம்கொடு

## ஐ.நா. ஆணைக்குழுவுக்கு மனு

கொழும்பு, ஓக. 29

தடுத்து வைக்கப்பட்டுள்ள சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாவை உடனடியாக விடுதலை செய்ய இலங்கை அரசை வலியுறுத்துமாறுகோரி, 75 பேர் கையெழுத்திட்ட மனு, ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் பல சர்வதேச நாடுகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

ஹிஸ்புல்லாவுக்கு எதிராக பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தைப் பயன்படுத்துவதைத் தவிர்க்குமாறு சர்வதேச சமூகத்தை அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். சட்டத்தரணி ஹிஸ்புல்லா சிறையில் அடைக்கப்பட்டு, 26 ஓகஸ்ட்டுடன் 500 ஆவது நாளையெட்டியதை குறிப்பிட்டு, இந்த மனு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கத்தோலிக்க பாதிரியார்கள், சிவில் செயற்பாட்டாளர்கள், அரசியல் பிரமுகர்கள் உள்ளிட்ட 75 பேர் மனுவில் கையெழுத்திட்டுள்ளனர்.

ஹிஸ்புல்லாவின் வழக்கு மற்றும் பிற ஒத்த வழக்குகள், பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் நிகழும் கொடூரமான மனித உரிமை மீறல்களின் அடையாள பிரதிபலிப்பாக இருக்க வேண்டும் என்று மனு வலியுறுத்துகிறது.

இந்த மனுவின் படி, பயங்கரவாதத் தடைச் சட்டம் மற்றும் சிவில் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கை சட்டத்தின் கீழ் குற்றப்பத்திரிகை இப்போது ஹிஸ்புல்லாவுக்கு வழங்கப்பட்டுள்ளது. குற்றப்பத்திரிகையின் படி, ஹிஸ்புல்லா ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலில் ஈடுபட்டார் என்று குற்றம் சாட்டப்படவில்லை, ஆனால் இந்தச் சட்டங்களுக்கு முரணாக மாணவர்களுக்கு சில அறிக்கைகளை வெளியிட்டார் என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

குற்றப்பத்திரிகைக்கு ஆதாரம் ஒரு குழந்தையின் அறிக்கையாக மட்டுமே தோன்றுகிறது. அதில் ஹிஸ்புல்லா மட்டக்களப்பில் ஒரு பல்கலைக்கழகத்தை வைத்திருக்கும் நபர் என்று விவரிக்கப்படுகிறார்.

ஹிஸ்புல்லாவை உடனடியாகவும் நிபந்தனையின்றி விடுதலை செய்யவும், அவருக்கு எதிரான அனைத்து குற்றச்சாட்டுகளையும் கைவிடுமாறு இலங்கை அரசை வலியுறுத்தவும் கேட்டுக்கொள்கிறோம் என மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய நாள்

**மேடம்:** தடைகளைக் கண்டு தளர மாட்டீர்கள். தாயாருடன் விவாதம் வேண்டாம். நண்பர்களுடன் உற்சாக மான சந்திப்பு இன்று உண்டு. சக ஊழி யர்கள் உங்களை அண்ணார்ந்து பார்ப்பார்கள்.

**இடபம்:** அரசு அதிகாரியின் உதவி யால் ஒரு திட்டம் நிறைவேறும். பண வரவு நல்ல வகையில் இருக்கும். நிம் மதியான நாள். செலவு குறையும். கவர்ச்சி அம்சம் அதிகரிக்கும்.

**மிதுனம்:** இன்று எடுக்கும் புதிய முயற்சி கள் வெற்றியை அளிக்கும். புனர்பூசம் தடைகளையும், எதிர்ப்பையும் தாண்டி வெல்வீர்கள். குடும்பத்தினர் உதவிகர மாக நடந்து கொள்வர்.

**கடகம்:** செயல்களில் நேர்த்தி அதி கரிப்பதால் பாராட்டு கிடைக்கும். பொறுமை தேவை. உணர்ச்சிகளை கட்டுப்படுத்துவீர்கள். ஆன்மிக ஈடுபாட் டின் காரணமாக ஆறுதல் கிடைக்கும்.

**சிம்மம்:** பெரியோர்களுக்கு உதவி செய்து அவர்களிடம் ஆசி பெறுவீர்கள். பூரம்: பொறுமையுடனும், நம்பிக்கையுடனும் முன்னேறுவீர்கள். பணியில் மன நிறைவு கிடைக்கும். சம்பளம் அதிகரிக்கும்.

**கன்னி:** மன அமைதி கூடும். உறவி னர்களின் உதவி கிடைக்கும். மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். நட்பு வட்டம் விரியும். உணர்ச்சி வசப்பட்டுப் பேசுவதை தவிர்க்க வேண்டும்.

**துலாம்:** சவாலான சூழ்நிலையால் சமநிலை இழக்க வேண்டாம். வெற்றி பெற உற்சாகமாக முயற்சி செய்வீர்கள். கவலை நீங்கும். பழைய பிரச்சினை ஒன்றை நிரந்தரமாகத் தீர்ப்பீர்கள்..

**விருச்சிகம்:** உங்கள் அணுகுமுறையில் சிறிது கவனம் அதிகரிக்கும். பிரியமான வர்களுடன் பேசும்போது கவனமாகப் பேசுவீர்கள். முக்கியமான முடிவுகளை எடுக்க இது உகந்த நாள்.

**தனுசு:** பழைய சவால்களை கையாள்வது கடினமாக இருக்காது. வளர்ச்சி குறித்து சுதந்திரமாக முடிவெடுப்பீர்கள். பயம் நீங்கும். மன உறுதி காரணமாகச் சரியான முடிவெடுப்பீர்கள்.

**மகரம்:** நம்பிக்கையுடன் செயற்பட்டால் வெற்றி கிடைக்கும். சிறிது முயன்றால் வெற்றி காணலாம் என்பது புரியவரும். சிறந்த தொடர்புகளை இன்று ஏற்படுத் திக் கொள்வீர்கள்.

**கும்பம்:** நன்மை, தீமை இரண்டும் கலந்து காணப்படும். பிறருடன் பேசும்போது கவனமாக இருக்க வேண்டும். பயணம் செய்வதை தவிர்க்க முயற்சி செய்யுங்கள்.

**மீனம்:** கடந்த சில நாட்களை விடவும் ஆரோக்கியம் சிறக்கும். மனதில் திடீர் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். குடும்பத்தில் பந்தபாசம் அதிகரிக்கும். திடீர் வியப்பு ஒன்று உண்டு.

இந்தியாவில
இளைய 'தளபதி'
இலங்கையில
இராணுவத் 'தளபதி'



# இதுதான் வாழ்க்கை

கவலையுற்ற மனிதன் ஒருவன் குருவைத் தேடி வந் தான்.
"குருவே! என் வாழ்க்கையில் மகிழ்ச்சியே இல்லை. என்னென்னவோ செய்து பார்க்கிறேன். மகிழ்ச்சி மட் டும் கிடைக்கவில்லை" என்றான்.
குரு அவனை ஒரு தோட்டத்துக்கு அழைத்துச் சென் றார். பட்டாம்பூச்சிகள் அங்குமிங்கும் பறந்து கொண் டிருந்தன.
"இதோ இவற்றில் ஒரு பட்டாம்பூச்சியைப் பிடித்து வா!" -குரு அவனிடம் சொன்னார்.
அவன் பட்டாம்பூச்சியைத் துரத்தித் துரத்தி ஓடினான். அவனால் எந்தப் பட்டாம்பூச்சியையும் பிடிக்க முடிய வில்லை.
"பரவாயில்லை. வா, நாம் இந்தத் தோட்டத்தின் அழகை ரசிக்கலாம்!" என்ற குரு அவனைத் தோட் டத்தின் நடுவில் அழைத்து வந்தார். இருவரும் அங்கு அமைதியாக நின்று, தோட்டத்தின் அழகைக் கண்கு ளிர பார்த்துக் கொண்டிருந்தனர்.
சிறிது நேரத்தில் அவர்களைச் சுற்றியும் பட்டாம்பூச் சிகள் பறக்கத் தொடங்கின. அவன் பிடிக்கத் துரத்திய பட்டாம்பூச்சி அவன் கைகளிலேயே வந்து அமர்ந்தது. குரு சிரித்தபடி அவனிடம் சொன்னார்: "இதுதான் வாழ்க்கை! மகிழ்ச்சியைத் தேடி துரத்துவது அல்ல வாழ்க்கை. நாம் வாழ்க்கையை அமைதியாக ரசிக்கும் போது மகிழ்ச்சி நம்மிடம் தானே வந்து சேர்ந்துவிடும்!"



# கௌதம் மேனனுடன் முதல்முறையாக இணையும் சிவகார்த்திகேயன்


தமிழ் திரையுலகுக்கு பல வெற்றிப் படங்களை கொடுத்துள்ள இயக்குநர் கௌதம் மேனன் இயக்கத் தில் சிவகார்த்திகேயன் நடிக்கவுள்ளார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.
கௌதம் மேனன் தற்போது சிம்பு நடித்து வரும் 'வெந்து தணிந்தது காடு' எனும் படத்தை இயக்கி வரு கிறார்.
இந்த நிலையில் இயக்குநர் கௌதம் மேனன் அடுத்து இயக்கவுள்ள படத்தில், முன்னணி நடிகர் சிவகார்த்தி கேயன் நடிக்கவுள்ளார் என்று தகவல் வெளியாகி யுள்ளது.
இது, இயக்குநர் கௌதம் மேனன் மற்றும் சிவகார்த் திகேயன் இணையும் முதல் கூட்டணி என்பது குறிப் பிடத்தக்கது. சிவகார்த்திகேயன் 'டான்' திரைப்படத்தில் நடித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை வருவோருக்கான விசா கட்டணத்தில் திருத்தம்

## *அபராதத் தொகை அதிகரிப்பு*

கொழும்பு, ஓக. 29
வெளிநாட்டுப் பயணிகளுக்கான விசா கட்டணங் களையும் அபராதங்களையும் இலங்கை திருத் தியுள்ளது.
குடிவரவு, குடியகல்வு சட்டத்தின் 23ஆம் பிரிவின் ஒழுங்குவிதிகளை பாதுகாப்பு அமைச்சரான ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச திருத்தி, புதிய வர்த்தமானி அறிவித்தல் வெளியிட்டுள்ளார். விசா காலம் நிறைவடைந்த பின்னர் இலங்கை யில் தங்கியிருப்போருக்கான அபராதத் தொகை 500 அமெரிக்க டொலராக அதிகரிக்கப்பட்டுள் ளது.
இதேவேளை, வெளிநாட்டு முதலீட்டாளர்கள், ஊழியர்கள், மாணவர்கள், மருத்துவ தேவைக ளுக்கான வருவோர், அரச சார்பற்ற நிறுவனங் களின் பிரதிநிதிகள், மதபோதகர்கள், அவர்களின் வாழ்க்கைத் துணைவர்கள் மற்றும் குழந்தை களுக்கான கட்டணமாக 200 அமெரிக்க டொலர் அறவிடப்படுவதாகவும் புதிய வர்த்தமானி அறி வித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-22)





## ஊரடங்கை தொடர்ந்து நீடிக்க அரசு தீர்மானம்


# வேலையாட்கள் தேவை

யாழ்/நல்லூர் வீதியில் இயங்கும் ஷாய்றா சுப்பர்மார்க்கட்டுக்கு வேலை ஆட்கள் தேவை. அனுபவம் வாய்ந்த வேலையாட்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
**076 251 7520, 077 963 7483**


# கண்ணீர் அஞ்சலி



யாழ் போதனா வைத்தியசாலையில் மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளராக கடமை புரியும் **திருமதி கே.லேனிகா** அவர்களின் பாசமிகு தந்தையார்

**திரு. நாகலிங்கம் ரட்ணம்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆய்வுகூட உத்தியோகத்தர்கள்**
**போதனா வைத்தியசாலை,**
**யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடமாகாணத்தில்...

அவர் மேலும் தெரிவிக்கையில், 'கொரோனா வைரஸின் திரிபான டெல்டா வைரஸ் தனது கோரத் தாண்டவத்தின் ஆரம்ப கட்டத்தைத்தான் இப்போது காட்டியுள்ளது. இது உச்சகட்டத்தை எட்டும்போது தாங்க முடியாத பேரழிவைத் தரும்.

கொரோனாத் தொற்றுப் பாதிப்புப் பற்றிய புள்ளிவிவரங்களை நம்பி அவற்றில் தங்கி இருக்காதீர்கள். உண்மை நிலைமை மோசமானது. வெறும் பொதுமுடக்கம், ஊரடங்கினால் பயன் இல்லை. தொற்றுப் பரவலைத் தவிர்க்கச் செய்யும் விஞ்ஞான ரீதியான நடவடிக்கைகளையே எடுக்க வேண்டும்.

முடக்கத்தை அறிவித்துவிட்டு, பின்னர் அதனை நீக்குவதாக வெறுமனே பிரகடனப்படுத்தினால் மக்கள் மீண்டும் திரளுவர். அடங்கிக் கிடந்த தொற்றுப் பரவல் மீண்டும் எகிறிப்பாய அது வழி செய்ததாக இருக்கும்.

எனவே, மருத்துவ சுகாதார நிபுணர்களின் விஞ்ஞானரீதியான பார்வையிலே விடயங்களை அணுகி முடிவுகளை எடுத்து, நடைமுறைப்படுத்த வேண்டும்' என்றார். (ம-22

## மூன்று இடங்கள்...

அந்தவகையில் வவுனியா நகரம், நொச்சிமோட்டை, தோணிக்கல் ஆகிய பகுதிகளில் ஒவ்வொரு நாளும் தொற்றாளர்கள் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. தொற்றைக் கட்டுப்படுத்த சுகாதாரத் தரப்பினர் குறித்த பகுதிகளில் பல்வேறு நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர். சுகாதாரத் தரப்பினருக்கு உதவியாக கிராம மட்டத்திலிருந்து தற்காலிக சுகாதாரப் பணி உதவியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் சேவைக்கு இணைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன், கிராமமட்ட அமைப்புக்களின் உதவிகளைப் பெற்று அதன் மூலம் தொற்று ஏற்பட்டவர்களையும், தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்களையும் கண்காணிக்கும் செயற்பாட்டினையும் முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ம-110)

## 45பேருக்கு...

பேர் தொற்றாளர்களாக அடையாளப்படுத்தப்பட்டனர்.

தொற்றாளர்கள் 32 பேரும் மருத்துவமனையில் சிகிச்சை பெறவேண்டியவர்கள், இடைத்தங்கல் சிகிச்சை நிலையங்களில் அனுமதிக்கப்பட வேண்டியவர்கள் மற்றும் வீடுகளில் கண்காணிக்கப்பட வேண்டியவர்கள் என அடையாளம் காணப்பட்டு உரிய பொறிமுறைகளின் கீழ் சிகிச்சைக்காக அனுப்பப்பட்டனர். (ம-26)

## மணித்தியாலத்துக்கு...

நாளுக்குநாள் கொரோனா மோசமாகிக்கொண்டு செல்கின்றது. உயிரிழப்பவர்களில் பெரும்பாலானவர்கள் கொரோனாத் தடுப்பூசி எதனையும் பெற்றுக்கொள்ளாதவர்கள்.

நாட்டில் இதுவரையில் பதிவான கொரோனாச் சாவுகளில் அதிகளவானவை 60 வயதுக்கும் மேற்பட்டவர்களின் இறப்புக்கள். எனவே கொரோனாத் தடுப்பூசியைப் பெறாதவர்கள் விரைவில் அதைப் பெறவேண்டும் என்றார். (ம-22)

## யாழில்...

வந்த ஆனைக்கோட்டையைச் சேர்ந்த 89 வயதுடைய பெண் ஒருவரும், யாழ்ப்பாணம் அரசடி வீதியைச் சேர்ந்த 79 வயதுடைய ஆண் ஒருவரும், அச்சுவேலியைச் சேர்ந்த 80 வயதுடைய ஆண் ஒருவரும், மந்திகை ஆதார மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற 34 வயதுடைய பெண் ஒருவரும், அதே மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற பிறிதொருவருமே இவ்வாறு கொரோனாத் தொற்றால் உயிரிழந்தனர்.

இதையடுத்து யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொரோனாவால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 231ஆக உயர்வடைந்துள்ளது. (ம-26)

## நேற்று தொற்று...

ஆயிரத்து 557ஆக அதிகரித்துள்ளது. அத்துடன், கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 2 ஆயிரத்து 203 பேர் நேற்று குணமடைந்துள்ளனர். அதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 3 லட்சத்து 55 ஆயிரத்து 394ஆக உயர்வடைந்துள்ளது. (ம-22)

## வவுனியாவில்....

கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டமை உறுதிப்படுத்தப்பட்டது. எனினும் அவர்கள் சிகிச்சை பயனின்றி நேற்று உயிரிழந்தனர்.

அத்துடன் நேற்றுமுன்தினம் வீடுகளில் உயிரிழந்த 5 பேருக்கு முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையின் முடிவுகள் நேற்று வெளியிடப்பட்டன. அவர்கள் ஐவருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இதேவேளை நேற்று வவுனியா மாவட்டத்தில் எழுமாறாக முன்னெடுக்கப்பட்ட அன்டிஜென் பரிசோதனைகளில் 152 பேர் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டனர். (ம-110)

## அரசியல்கைதிகளைச்...

கொண்டுள்ளது.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் 13ஆவது பிரிவுக்கமைய ஆலோசனைச் சபை உறுப்பினர்களை பெயரிட்டுள்ளமை தொடர்பாக குரலற்றவர்களின் குரல் அமைப்பு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

'இந்தச் சபையானது பயங்கரவாத நடவடிக்கைகள் சம்பந்தமாக சிறைத் தண்டனையை அனுபவித்து வருகின்றவர்கள், தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளவர்கள் தொடர்பில் ஆராய்ந்து, அவர்களுக்கான விடுதலைப் பொறிமுறையைக் கண்டறிந்து, ஜனாதிபதிக்குப் பரிந்துரைகளை முன்வைக்கவுள்ளது.

முன்னாள் பிரதம நீதியரசர் அசோக டி சில்வா தலைமையிலான ஆலோசனைச் சபையில் ஓய்வுநிலை மேல் நீதிமன்ற நீதிபதி ஏ.ஆர்.ஹெய்யந்துடுவ மற்றும் ஓய்வுபெற்ற சொலிசிட்டர் ஜெனரல் சுஹத கம்லத் ஆகியோர் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

கைதிகள் தங்களது பிரச்சினைகளை இந்தச் சபையிடம் முன்வைக்க சந்தர்ப்பம் கிடைக்கும் என்று ஜனாதிபதியின் சட்டத்துறைப் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் இந்த முன்னெடுப்பைப் பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் குரலற்றவர்களின் குரல் அமைப்பு வரவேற்றுள்ளது. ஜனாதிபதியின் ஆலோசனைச் சபை தமிழ் அரசியல் கைதிகளின் நீண்ட சிறை வாழ்வுக்கு தீர்வு வழங்க வேண்டும். தமிழ் மக்களின் நீண்ட காலக் கோரிக்கையான தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை விவகாரம், குறைந்த வேகத்திலாவது அசையத் தொடங்கியிருப்பது சிறந்த விடயமே' - என்றுள்ளது. (ம-22)

## தொற்றிலிருந்து...

ஓரளவுக்கு நாட்டைக் காப்பாற்ற முடியும் இவ்வாறு அரசிடம் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி கோரிக்கை விடுத்துள்ளது.

'கொரோனா வைரஸ் தொற்று அச்சுறுத்தலில் நாட்டை முடக்குவதற்கு எடுக்கப்பட்ட தீர்மானம் என்பது மிகவும் அவசியமானது. நாட்டின் பொருளாதாரத்தை விடவும் நாட்டு மக்களின் உயிரைப் பாதுகாப்பதற்கே முன்னுரிமையளிக்க வேண்டும். இருந்த போதிலும் இன்னும் நாடு முழுமையாக மூடப்படவில்லை' என்று அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'நாட்டை முழுமையாக மூடினால் தொற்றாளர்களை அடையாளம் காண முடியும்; பிரதேசங்களைத் தனிமைப்படுத்த முடியும். மேலும் தொற்று சமூகமயமாவதைத் தடுக்க முடியும். எனினும், நாட்டின் பொருளாதாரத்தைக் காரணம் காட்டி பல நிறுவனங்கள் இயங்குவதற்கு சந்தர்ப்பமளிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு நகருக்கு ஆயிரக்கணக்கான வாகனங்கள் வந்து செல்கின்றன. மக்கள் இன்னும் வீதிகளில் நடமாடுகின்றனர், ஒன்றுகூடுகின்றனர். குறைந்தது 3 அல்லது 4 வாரங்களுக்காவது கடும் கட்டுப்பாடுகளுடன் முழுமையாக முடக்கி வைத்தால்தான் தொற்றிலிருந்து ஓரளவுக்கு நாட்டைக் காப்பாற்ற முடியும்.

கொரோனாத் தொற்று என்பது சாதாரண காய்ச்சல், தடிமன் போன்றதென்று ஆளுங்கட்சி உறுப்பினர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்திருப்பது ஏற்றுக்கொள்ள முடியாத விடயம். முழு உலகமும் இந்தத் தொற்றானது அபாயகரமானது எனத் தெரிவித்துள்ள நிலையில், ஆளுங்கட்சி எம்.பியின் இந்தக் கருத்தால் மக்கள் மத்தியில் கொரோனாத் தொற்று மீதான அச்சம் குறைந்து சுகாதார பழக்க வழக்கங்களையும் உதாசீனப்படுத்தும் நிலைமை ஏற்படலாம்' - என்றார். (ம-22)

## மேலும்...

கள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரச தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா சாவுகளின் மொத்த எண்ணிக்கை 8 ஆயிரத்து 583ஆக அதிகரித்துள்ளது. நேற்றுமுன்தினம் உயிரிழந்த 212 பேரில் 103 பெண்களும், 109 ஆண்களும் உள்ளடங்குகின்றனர் என்று அரச தகவல் திணைக்களத்தின் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-22)

## 10,000....

வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

'இலங்கையில் தற்போது அமுலில் உள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கானது செப்டெம்பர் 18 வரை நீட்டிக்கப்பட்டால், சுமார் 7 ஆயிரத்து 500 சாவுகளைத் தடுக்க முடியும். அதேவேளை, எதிர்வரும் ஒக்ரோபர் 2ஆம் திகதி வரை ஊரடங்கை நீடிப்பதன் மூலம் 10 ஆயிரம் வரையான கொரோனாச் சாவுகளைத் தடுக்க முடியும். நாட்டில் கொரோனா காரணமாக பலியாகுபவர்களின் உயிர்களைக் காப்பாற்ற அரசு அவசர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். குறைந்தபட்சம் செப்ரெம்பர் 18ஆம் திகதி வரை கடுமையான கட்டுப்பாடுகளை நீடிக்க வேண்டும்.

ஓகஸ்ட் 26ஆம் திகதி வெளியான கொரோனாத் தொற்று நிலைவரப்படி, நாட்டில் கொரோனா சாவுகளின் எண்ணிக்கை கணித்ததை விட வேகமாக அதிகரித்து வருகின்றது. அத்தோடு, நாட்டில் அடையாளம் காணப்படும் கொரோனா பரவல் 90 வீதம் டெல்டா மாறுபாட்டைக் காட்டுகின்றது. இப்போது மேல் மாகாணம் தவிர மற்ற மாகாணங்களுக்கும் டெல்டா வைரஸ் பரவியிருக்கின்றது.

நாட்டின் சுகாதாரத்துறை நெருக்கடியைச் சந்தித்துள்ளது. மருத்துவமனைகள் முழுத்திறனில் இயங்கி வருகின்றன. வீடுகளுக்குள் கொரோனா வைரஸ் பரவிவிட்டது. குறிப்பாக டெல்டா மாறுபாடு வேகமாக பரவும் சூழலில், மக்களுக்குத் தடுப்பூசி வழங்குவது உயிரிழப்பை குறைக்க வழிவகுக்கும்' என்றுள்ளது. (ம-22)

## நாடு திரும்ப...

அகதிகளின் பாதுகாப்பை உறுதிசெய்வோம் என்று விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

இலங்கை அகதிகளுக்கு தமிழக முதலமைச்சர் சிறப்புரிமைகளை அறிவித்த நிலையிலேயே, நாமல் ராஜபக்ச தனது டுவிற்றரில் இதனைக் கூறியுள்ளார்.

இலங்கைக்கு மீள வருகை தரும் மக்களுக்கு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் அரசு அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும். தாய் நாட்டில் அவர்கள் மீண்டும் வாழ்வதற்கான அனைத்து வாய்ப்புக்களும் ஏற்படுத்திக் கொடுக்கப்படும். இலங்கை அகதிகள் குறித்து அவதானம் செலுத்தியுள்ள தமிழக முதலமைச்சரின் கருத்துக்களை நாம் வரவேற்கின்றோம் - என்றார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய அணி படுதோல்வி!



லீட்ஸ், ஓக. 29

**இந்தியாவுக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்தில் இன்னிங்ஸால் வெற்றி பெற்று, லோட்ஸ் மைதானத்தில் அடைந்த தோல்விக்குப் பதிலடி கொடுத்தது இங்கிலாந்து அணி. தற்போது இரு அணிகளும் தொடரில் 1:1 என்ற நிலையில் உள்ளன.**

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அந்த அணி எதிர்பாராத விதமாக வெறும் 78 ஓட்டங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்தது. ரோகித் 19 ஓட்டங்களையும், ரகானே 18 ஓட்டங்களையும் பெற்றனர். இவர்கள் இருவரையும் விட வேறு எவரும் 10 ஓட்டங்களைக் கடக்கவில்லை.

பந்துவீச்சில் அண்டர்சன், ஓவர்டன் இருவரும் தலா 3 இலக்குகளைக் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய இங்கிலாந்து அணி, அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. அந்த அணி 432 ஓட்டங்களை முதல் இன்னிங்ஸுக்காகக் குவித்தது. அணித்தலைவர் ரூட் 121 ஓட்டங்களை அதிகபட்சமாகக் குவித்தார். மலன் 70 ஓட்டங்களையும், ஹமீட் 68 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் மொகமட் சமி 4 இலக்குகளைக் கைப்பற்றினார். பும்ரா, சிராஜ், ஜடேஜா மூவரும் தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினர்.

இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த இந்திய அணி நேற்றுமுன்தினம் மூன்றாம் நாள் முடிவில் 2 இலக்குகளை இழந்து 215 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. புஜாரா 91 ஓட்டங்களுடனும், கோலி 45 ஓட்டங்களுடனும் நான்காம் நாளுக்காக நேற்றுக் களமிறங்கினர்.

நேற்றையதினம் புதுப்பந்து பெறப்பட்டது. 'டியூக்' ரக பந்தில் இங்கிலாந்தின் இயல்பான மிரட்டல் நேற்றும் தொடர்ந்தது. மேலதிகமான ஓர் ஓட்டத்தையேனும் புஜாராவால் பெறமுடியவில்லை. 91 ஓட்டங்களுடன் அவர் பவிலியன் திரும்பினார். கோலி அரைச்சதம் கடந்தாலும் மறுமுனையில் இலக்குகள் சரிய ஆரம்பித்தன. கோலியும் 55 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். ஜடேஜா 30 ஓட்டங்களைப் பெற்றார். எனினும் 278 ஓட்டங்களுக்கு அனைத்து இலக்குகளையும் இழந்தது இந்தியா. நேற்று 63 ஓட்டங்களுக்கு இந்தியா 8 இலக்குகளைப் பறிகொடுத்தமை இங்கே குறிப்பிடத்தக்கது.

பந்துவீச்சில் றொபின்சன் 5 இலக்குகளையும், ஓவர்டன் 3 இலக்குகளையும் கைப்பற்றினர். றொபின்சன் ஆட்டநாயகனானார். (ம)




# மன்செஸ்டர் யுனைட்டைட்டில் இணைந்தார் றொனால்டோ!

லண்டன், ஓக. 29

இங்கிலாந்தின் மன்செஸ்டர் யுனைட்டட்டை கழகத்துக்காக விளையாட ஒப்பந்தம் செய்யப்பட்டார் பிரபல வீரரான றொனால்டோ.

இத்தாலியின் யுவென்டஸ் கழகத்துக்காக விளையாடி வந்த றொனால்டோவின் ஒப்பந்தம் அந்தக் கழகத்தால் அண்மையில் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. இதையடுத்து றொனால்டோ அடுத்ததாக எந்தக் கழகத்துக்காக விளையாடுவார் என்பதில் பெரும் எதிர்பார்ப்பு இருந்தது.

மன்செஸ்டர் சிற்றி, மன்செஸ்டர் யுனைட்டை கழகங்கள் அவரை ஒப்பந்தம் செய்வதற்கு முனைப்புக்காட்டின. இந்த நிலையில் மன்செஸ்டர் யுனைட்டை றொனால்டோவை ஒப்பந்தம் செய்துள்ளது (ம)

**Personal English Classes**

யாழ் நகரில் விரிவான விளக்கமான பேச்சு பயிற்சிகள்
Grade 7 - O/L, A/L, பட்டதாரிகள், தொழில் புரிவோர்.
K.Ganesh B.A
0777668725

**வீடு வாடகைக்கு தேவை**

K.K.S அல்லது பலாலி வீதிக்கு அண்மையில் வசதிகளுடன் கூடிய வீடு உடன் வாடகைக்குத் தேவை.
076 105 6333

**காணி விற்பனைக்குண்டு**

நீர்வேலி தெற்கு கரந்தன் பகுதியில் 18 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. நிலப்பரப்பு 1 1/2 பரப்பாகவும் 2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் 14 அடி பாதையுடன் கரந்தன் சந்தியில் இருந்து 200 M தூரம்.


பார்வையிடும் நேரம் காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை (தரகர் தேவையில்லை) விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்




077 814 7389
077 614 7333

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்
10 . 09 . 1936



மறைவு
01 . 08 . 2021

**அமரர் சிதம்பரப்பிள்ளை கதிரவேலு (கிச்சி)**

(காரைநகர் மற்றும் வவுனியா)

(ஓய்வுபெற்ற படவரைஞர் - வீதி அபிவிருத்தி அதிகார சபை - வவுனியா)

**திதி நிர்ணயம்**

சீர்பிலவ ஆடிநிலாத் தேய்கின்ற அட்டமியில்
ஊர்குலவு முத்தமராய் உள்ளத்தி லேயென்றும்
பேர்நிலவு மெங்கள் பெருங்கதிர வேலடைந்தார்
தார் பலவுங் கொண்டமைந்தான் தாள் !

இவ்வுலகில் வாழ்வாங்கு வாழ்ந்து ஆடிமாதம் (01.08.2021) ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்த எம் தந்தை சி.கதிரவேலு அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து இக்கட்டான காலச் சூழலில் நேரடியாகவும் தொலைபேசி மற்றும் சமூக ஊடகங்கள் மூலமாகவும் தொடர்புகொண்டு எம்முடன் துயர்பகிர்ந்து கொண்டோருக்கும், இறுதிக் கிரியைகளுக்கான சகல ஒழுங்குகளை மேற்கொள்ள உதவி ஒத்தாசைகள் வழங்கிய உறவினர்கள், நண்பர்கள் மற்றும் ஊரவர்களிற்கும் நன்றி தெரிவித்துக்கொள்கின்றோம்.

மேலும் எங்கள் குடும்பத் தலைவர் நோயுற்றபோது சகல விதத்திலும் உதவிய வைத்தியர்கள் மற்றும் சுகாதாரத்துறை ஊழியர்களிற்கும் நன்றி தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (29.08.2021) ஞாயிற்றுக்கிழமை காரைநகர் ஆலங்கன்று அந்தியேட்டி மடத்திலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் எதிர்வரும் (31.08.2021) செவ்வாய்க்கிழமை காரைநகர் கோவளத்தில் அமைந்துள்ள எமது இல்லத்திலும் நடைபெறும் என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

**குறிப்பு:-** நாட்டின் பொது சுகாதார நடைமுறைகளுக்கு அமைய மேற்படி நிகழ்வில் கலந்துகொள்ளும் உறவுகளின் எண்ணிக்கை மட்டுப்படுத்த வேண்டியுள்ளது என்பதனையும் அனைவருக்கும் மிகுந்த மனவேதனையுடன் அறியத்தருகின்றோம்.

**கோவளம், காரைநகர்.** **பிள்ளைகள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 29.08.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# சஞ்சீவி

Registered as a Newspaper

பக்கங்கள்: 16

மலை 33: வள்ளுவர் ஆண்டு : 2052 ஆவணி 13 ஞாயிற்றுக்கிழமை (29.08.2021) சிகரம் : 62


காறிக் கந்தையாதெருவில் துப்பினார்
கண்டவர் விழுந்தோடித் தப்பினார்
நாறியகுண நாயிற்கடையர்
நாட்டினைச்சற்றும் நினையார்
பாறியபுத்தியென பார்த்தவர் செப்பினார்!

- காரைக்கவி



# போரும் வைரஸும் ஒன்றல்ல!




○ நிலாந்தன்

ஒரு தனிப்பட்ட உரையாடலின்போது ஒரு ராஜதந்திரி என்னிடம் சொன்னார் "உங்களுடைய நாட்டில் மிக அடிமட்டம் வரையிலும் இறங்கி வேலை செய்யும் ஒரு சுகாதாரக்கட்டமைப்பு உண்டு. வீடுவீடாக வந்து நுளம்புப் பெருக்கத்துக்கான வாய்ப்புக்கள் உண்டா இல்லையா என்பதனை நுணுக்கமாக ஆராய்கிறார்கள். இது ஒரு முன்னேற்றகரமான சுகாதாரச் செய்முறை" என்று.

உண்மைதான் இலங்கைத் தீவின் சுகாதார வைத்திய அதிகாரி (MOH)கட்டமைப்பு என்பது தனித்தன்மைமிக்கதாக வர்ணிக்கப்படுகிறது. மிகக் குறைந்த செலவில் மிகக்கூடுதலான வினைத்திறனோடு செயற்படும் ஒரு பொதுச்சுகாதாரக் கட்டமைப்பாக அது போற்றப்படுகிறது. பிரித்தானியரின் ஆட்சிக்காலத்தில் பெருந்தோட்டத்துறையில் பரவிய கொழுக்கிப் புழு தொற்றுநோய் காரணமாக அதிகரித்த உயிர்ச் சேதம் ஏற்பட்டபோது அதை தடுப்பதற்கு முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் ஒரு கட்ட விளைவே அதுவெனலாம். அமெரிக்க மருத்துவத் தொண்டு நிறுவனமான ரொக்கெபெலர் நிதியத்தால் (Rockefeller Foundation) பெருந்தோட்டத் துறையில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்ட சுகாதார நடவடிக்கைகள் திருப்தியான விளைவுகளைத் தரத் தவறிய ஒரு பின்னணியில் பெருந்தோட்டத்துறைக்கு வெளியே ஒரு குறிப்பிட்ட பகுதியை மேல்மாகாணத்தில் களுத்துறை பிரதேசத்தை பரிசோதனைக் களமாக தெரிந்தெடுத்து இலங்கைத் தீவின் முதலாவது சுகாதார மருத்துவ அலுவலர் கட்டமைப்பு 1926ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. அந்தக் கட்டமைப்பை உருவாக்கியவர்களில் ஒருவரான டொக்டர். எஸ். எப். செல்லப்பா என்ற ஒரு தமிழரே இலங்கைத் தீவின் முதலாவது சுகாதார மருத்துவ அதிகாரியாவார். இவ்வளவு பெருமைமிக்க ஒரு கட்டமைப்பை கொண்டிருக்கும் இலங்கைத்தீவு ஒரு பெருந்தொற்று நோய்க்கு எதிராக கடந்த ஒன்றரை ஆண்டுகளுக்கு மேலாக என்ன செய்து கொண்டிருக்கிறது? அண்மையில் சமூகவலைத்தளங்களில் ஒரு படம் வெளியாகி இருந்தது. அதில் களைத்து துவண்டுபோன ஒரு பொதுச் சுகாதார பரிசோதகர் சிறிய பிளாஸ்டிக் கதிரை ஒன்றில் உடலை நீட்டி அயர்ந்து தூங்கும் காட்சி காணப்பட்டது. அது ஒரு குறியீடு. உலகில் மிகவும் போற்றப்படும் ஒரு பொதுச்சுகாதார கட்டமைப்பு களைத்துப் போயிருப்பதை அது காட்டுகிறதா? பெருமைக்குரிய அடிமட்ட சுகாதார கட்டமைப்பை கொண்டிருக்கும் ஒரு நாடு பெருந்தொற்று நோய்க்கு எதிரான போராட்டத்தில் தடுமாறுகிறதா? கடந்த வாரம் அறிவிக்கப்பட்ட சமூக முடக்கம் அதைத்தான் காட்டுகிறதா? அது மேலும் நீடிக்கப்படும் என்று நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டிருப்பதும் அதைத்தான் காட்டுகிறதா?

சமூக முடக்கத்தை அறிவிக்குமாறு சுகாதாரத் துறைசார் நிபுணர்களும் மருத்துவர்களும் சமூக அக்கறை கொண்ட சக்திகளும் கடந்த சில மாதங்களாக தொடர்ச்சியாக கேட்டு வந்தனர். ஆனால் அந்தக்கோரிக்கைகளை பொருட்படுத்தாத அரசாங்கம் இரண்டு மகாநாயக்க தேரர்கள் கேட்டதும் சமூக முடக்கத்தை அறிவித்தது. தனித்துவம்மிக்க ஒரு பொதுச் சுகாதார கட்டமைப்பின் எச்சரிக்கைகளை விடவும் மகாநாயக்க தேரர்களின் கோரிக்கைகளைத்தான் இந்த அரசாங்கம் செவிமடுக்குமா? மேலும் அறிவிக்கப்பட்ட சமூக முடக்கமும் முழுமையானதும் அல்ல. முன்னைய சமூக முடக்கங்களைப் போலவே அது அரைகுறையானது. ஒவ்வொரு முறையும் அது வேறு பெயர்களால் அழைக்கப்படுகிறது. இம்முறை அது தனிமைப்படுத்தல் ஊரடங்கு என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அதைவிட முக்கியமாக அந்தச் சமூக முடக்கம் அறிவிக்கப்பட்ட விதம் ஒரு சிவில் நடவடிக்கை போன்றதல்ல. அது ஒரு இராணுவ நடவடிக்கை போலவே திடீர் என்று அறிவிக்கப்பட்டது. அரசாங்கம் ஒரு சமூக முடக்கத்தை அறிவிக்கக்கூடும் என்ற எதிர்பார்ப்பு தொடர்ச்சியாக பத்திரிகை வாசிப்பவர்கள் மத்தியில் இருந்தது. ஆனால் அரசாங்கம் அதனை வெளிப்படையாகச் சொல்லவில்லை. திடீரென்று ஒருநாள் முன்னதாக அதனை அறிவித்தது. அப்படி அறிவித்தால் சாதாரண குடிமக்கள் என்ன செய்வார்கள் ?கிடைக்கும் கால அவகாசத்தில் சேமிக்கக்கூடிய பொருட்களை சேமிப்பார்கள். அதுதான் வெள்ளி பின்னேரம் நடந்தது. எல்லா தெருக்களிலும் சனத்திரள் திருவிழாக்காலம் போல பண்டிகைக்காலம் போல பிதுங்கி வழிந்தது. சந்தைகளின் முன்னும் எரிபொருள் நிரப்பு நிலையங்கள், பல்பொருள் அங்காடிகள்.மருந்தகங்களின் முன்னும் மக்கள் நிரம்பி வழிந்தார்கள். தெருக்களில் வாகனங்கள் நெரிசலாக காணப்பட்டன. எதற்காக சமூகம் முடக்கப்படுகிறது? வைரஸ் தொற்றும் வேகத்தை குறைப்பதற்காகத்தானே? ஆனால் பத்து நாட்களுக்குள் ஏற்படக்கூடிய தொற்றை சில மணித்தியாலங்களுக்குள் ஏற்படுத்தியமை தான் திடீர் அறிவிப்புகளின் விளைவு எனலாமா?

கொரோனாத் தொற்று பரவி மரணங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமைக்கு ஜோசப் ஸ்டாலின் கொத்தணி, சஜித் கொத்தணி மற்றும் அனுர கொத்தணி போன்றவையே காரணம் என்று நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். ஆனால் திடீர் சமூக முடக்க அறிவிப்பால் நாட்டில் பெட்ரோல் செட் கொத்தணி , ஃபூட் சிற்றி கொத்தணி, பார்மசி கொத்தணி போன்ற கொத்தணிகள் உருவாகாது என்பதற்கு என்ன உத்தரவாதம்?



அரசாங்கம் ஏன் இப்படித் திடீர் என்று அறிவிக்கிறது? சமூக முடக்கத்தை அறிவிப்பது என்று தீர்மானித்தால் அதை ஏற்கனவே மக்களுக்கு வெளிப்படையாகக் கூறி மக்களை சில நாட்களுக்குள் அதற்கு தயாராகும்படி கேட்கலாம் தானே? வெள்ளியன்று ஜனாதிபதி ஆற்றிய உரையை சில நாட்களுக்கு முன்பே செய்திருக்கலாம் தானே? முன்கூட்டியே அறிவித்தால் வைரஸ் ஓடி ஒளித்துவிடும் என்ற பயமா? இவ்வாறு திடீரென்று அறிவித்தமை என்பது ஒருவித இராணுவத்தன்மான அறிவிப்புதான். அது சிவில்தனமானது அல்ல.

மருத்துவ நிபுணர்கள், துறைசார் அதிகாரிகள், அக்கறைகொண்ட தரப்புக்கள், ஊடகங்கள் போன்றன சில மாதங்களாக கேட்டுக்கொண்ட போதிலும் சமூகத்தை முடக்கத் தயாரற்றிருந்த அரசாங்கம் இரண்டு மகாநாயக்கர்கள் கேட்டதும் அதை முடிவெடுத்ததா? அல்லது அரசாங்கம் முடிவெடுக்கும் சக்தியின்றி தடுமாறுகிறதா? ஒரு தென்னிலங்கை நண்பர் கேட்டார் "இறுதிக் கட்டப் போரில் நாட்டை ஆட்சி செய்தவர்கள்தான் இப்பொழுது அரசாங்கத்தில் இருக்கிறார்கள். போரை முடிவுக்குக் கொண்டு வரத்தேவையான முடிவுகளை அப்போது எடுத்த இவர்களால் இப்பொழுது வைரஸுக்கு எதிராக முடிவுகளை ஏன் எடுக்க முடியாதுள்ளது?" என்று. ஆனால் இறுதிக்கட்டப் போரில் அவர்கள் என்ன முடிவை எடுத்தார்கள்?. யுத்தத்தின் வெற்றிக்காக தமது குடிமக்களில் ஒரு பகுதியினரின் உயிர்


13



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூகோள அரசியல் சூழலும் 13 ஆம் திருத்தச் சட்டமும்!

அ.நிக்ஸன்

ஈழத்தமிழர்களின் இறைமை அங்கீகரிக்கப்பட்டு வடக்கு - கிழக்கு இணைந்த சுயநிர்ணய உரிமைதான் அரசியல் விடுதலைக்கான சிறந்த தீர்வென தமிழரசுக் கட்சி மற்றும் புளொட் தவிர்ந்த ஏனைய தமிழ்த்தேசியக் கட்சிகள் வலியுறுத்தி வருகின்றன. ஆனால் அதனை அடைவதற்கான வழிவகைகள் இதுவரை சரியாக ஒழுங்குபடுத்தப்படவில்லை. வெறுமனே வாய்மூலப் பேச்சாக மாத்திரமே உள்ளன. இதன் காரணமாகவே இன அழிப்புத் தொடர்பான விசாரணைகள் நடத்தப்பட வேண்டுமென சிவில் சமூக அமைப்புகள் மற்றும் புலம்பெயர் நாடுகளில் உள்ள சில அமைப்புகளும் அழுத்தம் கொடுத்து வருகின்றன.






சர்வதேச விசாரணை நடத்தப்பட்டு இன அழிப்பு நிகழ்ந்தது என்பது நிறுவப்பட்டால், தமிழர்களின் சுயநிர்ணய உரிமை அங்கீரிக்கப்பட வேண்டிய சூழல் உருவாகும். அது வடக்கு, கிழக்கு இணைக்கப்பட்ட சுயாட்சிக்கு ஏற்புடையதாகவே இருக்கும். இதனாலேயே இந்த சுயாட்சிக் கட்டமைப்பு வந்துவிடக்கூடாதென்ற நோக்கில் இலங்கை அரசாங்கமும் இலங்கை ஒற்றையாட்சி முறையை ஏற்றுக்கொண்ட சில தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் செயற்படுகின்றனர். இதன் பின்னணியில் பல அரசியல் செயற்பாட்டாளர்கள் மறைமுகமாகவும் நேரடியாகவும் 2009 ஆம் ஆண்டின் பின்னரான சூழலில் இன்றுவரை இயங்குகின்றனர்.

அரசியல் தீர்வுக்கான ஆரம்பமாக 13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டுமென 2012 ஆம் ஆண்டில் இருந்து 2021 ஆம் ஆண்டு வரையான ஜெனீவா மனித உரிமைச்சபையின் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. 2015 ஆம் ஆண்டு ரணில் மைத்திரி அரசாங்கம் அமைக்கப்பட்ட பின்னரான சூழலில் 13 ஆவது திருத்தச் சட்டமே தீர்வு என்ற தொனியில் ஜெனீவாத் தீர்மானங்கள் கடுமையாக வலியுறுத்தின. ரணில் அரசாங்கத்தில் உருவாக்கப்படவிருந்த புதிய அரசியல் யாப்புக்கான நகல் வரைபு கூட இலங்கையின் ஒற்றையாட்சிக்கு அமைவானதாகவும் 13 ஆவது திருத்தத்தில் இருந்த காணி, பொலிஸ் அதிகாரங்கள் மத்திய அரசின் கட்டுப்பாட்டில் வைத்திருக்கக் கூடிய ஏற்பாடுகளோடே அமைந்திருந்தன. தற்போது ராஜபக்ச அரசாங்கத்தில் புதிய அரசியல் யாப்புப் பற்றிய பேச்சே இல்லை. அத்துடன் 13 உம் இல்லை. 13 பற்றிய இந்தியாவின் அழுத்தத்தை ஜனாதிபதி கோத்தாபய செவிசாய்ப்பதாகவும் இல்லை. இந்தவொரு நிலையிலேயே தனி நாட்டுக் கோரிக்கைக்கு அமைவான 1976 ஆம் ஆண்டு வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை இரண்டாவது 'வட்டுக்கோட்டைத் தீர்மானம்- என்று பெயரிட்டு நடத்திய மாநாட்டிலும் சந்தேகம் வலுத்தது. இலங்கையை அச்சுறுத்த புதுடில்லி கையாண்ட மற்றுமொரு அணுகுமுறையாகஅது அவதானிக்கப்பட்டது. வட்டுக்கோட்டையைச் சொல்லிக் கொண்டு பதின்மூன்றையே தீர்வாக்கிவிடலாம் என்று டில்லி கருதியதை மாநாட்டில் கலந்து கொண்ட பலரும் புரிந்து கொண்டதாக இல்லை.

> **சிங்கள ஆட்சியாளர்களைப் பொறுத்தவரை இந்தியாவைக் கடந்து அமெரிக்கா அல்லது ஐரோப்பிய நாடுகளின் ஆதரவுடன் 13 அல்லது ஒற்றையாட்சி அரசியல் யாப்புக்குள்ளே தமிழர்களை அமைதியடைச் செய்துவிட வேண்டுமென்ற நோக்கில் இயங்குகின்றனர்.**



இவ்வாறான நிலையில், மைத்திரி - ரணில் அரசாங்கத்துக்கு கூட்டமைப்பு ஆதரவு கொடுத்திருந்த காலத்தில், இந்தியா இல்லாமலேயே தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியுமென நாடாளுமன்றத்தில் கூறியிருந்த சுமந்திரன், மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு சென்ற வியாழக்கிழமை அரசாங் கத் திடம் கோரியுள்ளார். இந்திய ஆதரவுடன் ஜெனீவா மனித உரிமைச் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் 13 ஆவது திருத்தம் உள்ளடக்கப்பட்டமைக்கு அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளும் ஆதரவு வழங்கியிருந்தன.

இதன் பின்புலத்தில் 13 ஆவது திருத்தச் சட்டத்துக்கு அமைவான மாகாண சபைத் தேர்தல்களை நடத்துமாறு சுமந்திரன் கோரியிருக்கலாம். ஏனெனில் அவர் மேற்குலகின் செல்வாக்கைப் பெற்ற ஒருவர்.

13 ஆவது திருத்தச் சட்டத்தை தும்புத்தடியாலும் கூடத் தொட்டுப்பார்க்க முடியாதென 2006 ஆம் ஆண்டு சம்பந்தன் நாடாளுமன்றத்தில் கூறியிருந்த நிலையில், 2013 ஆம் ஆண்டு நடந்த மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பங்குபற்றியிருந்தது. 13 அரசியல் தீர்வுக்கு உகந்ததல்ல என்பது தமிழரசுக் கட்சிக்குத் தெரிந்த நிலையிலும் அன்று தேர்தலில் போட்டியிட்டது. 2009 ஆம் ஆண்டு மே மாதத்துக்குப் பின்னரான சூழலில் இந்தோ பசுபிக் விவகாரத்தில் இலங்கை அரசாங்கத்தைச் சீனாவிடம் இருந்து பிரிக்க வேண்டுமென்ற அமெரிக்க, இந்திய வல்லாதிக்க நாடுகளின் சிந்தனையால், ஈழத்தமிழர் பிரச்சினைக்கு உடனடித்தீர்வாக 13 ஆம் திருத்தம் சித்திரிக்கப்படுகின்றது. இதற்கு சம்பந்தனும் உடன்பட்டிருந்தார் என்பதையே 2013 ஆம் ஆண்டு இடம்பெற்ற வடமாகாண சபைத் தேர்தல் வெளிப்படுத்தியது.

ஆனால் 2015 ஆம் ஆண்டின் பின்னரான சூழலில் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ரெலோ 13 ஆம் திருத்தம் தீர்வு அல்ல என்றும் ஈழத்தமிழர்களின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டுமெனவும் கூறுகின்றது. புளொட் மதில் மேல் பூனைபோன்று இருக்கின்றது. அனந்தி சசிதரன் உள்ளிட்ட ஏனைய தனிநபர் அரசியல் செயற்பாட்டாளர்களுக்கும் 13 ஆம் திருத்தத்தில் உடன்பாடில்லை. முதலமைச்சராகப் பதவி வகித்ததால், விக்னேஸ்வரனும் 13 இன் பலவீனங்களை வெளிப்படையாகவே ஒப்புக்கொள்கிறார். தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியும் வெளிப்படையாகவே நிராகரித்துள்ளது.

ஆனாலும் மாகாண சபைத் தேர்தல் இடம்பெற்றால் அதில் போட்டியிட அனைவருமே தயாராகவுள்ளனர். இதனையே இலங்கை அரசாங்கமும், அமெரிக்கா, இந்தியா போன்ற வல்லரசுகளும் சாதகமாகப் பயன்படுத்துகின்றன என்பது கண்கூடு. இதன் பின்புலத்திலேதான் கொவிட் நோய்த் தாக்கம் கட்டுப்பாட்டில் வந்ததும் மாகாண சபைத் தேர்தல்களை நடத்த வேண்டுமென சுமந்திரன் கோரியிருக்கிறார் போலும்.

சிங்கள ஆட்சியாளர்களைப் பொறுத்தவரை இந்தியாவைக் கடந்து அமெரிக்கா அல்லது ஐரோப்பிய நாடுகளின் ஆதரவுடன் 13 அல்லது ஒற்றையாட்சி அரசியல் யாப்புக்குள்ளே தமிழர்களை அமைதியடைச் செய்துவிட வேண்டுமென்ற நோக்கில் இயங்குகின்றனர். இந்த மாத ஆரம்பத்தில் சுமந்திரன் - அமைச்சர் பீரிஸ் சந்திப்பு அமெரிக்கத் தூதுவரின் இல்லத்தில் நடந்தமைகூட இதன் பின்னணி தான்.

பஸில் ராஜபக்ச அமைச்சராவதற்கு முன்னர் அமெரிக்கா சென்றிருந்தபோது கடந்த ஜூன் மாதம் இணையவழி மூலம் சுமந்திரனோடும் பிரித்தானியாவில் உள்ள தமிழ் அமைப்பு ஒன்றின் பிரதிநிதியோடும் பேசியிருந்தார். 2015 ஆம் ஆண்டு ஜெனீவாத் தீர்மானத்துக்கு அமைவான முறையில் சில திருத்தங்களைச் செய்து 13 ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவதே இந்த இரகசியச் சந்திப்புக்களின் நோக்கம் என்பது வெளிப்படை.

இந்த இடத்திலேதான் செல்வம் அடைக்கலநாதன் தலைமையிலான ரெலோ இயக்கத்துக்குப் பெரும் பொறுப்புள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் பிரதான அங்கம் வகிக்கும் தமிழரசுக் கட்சியில் சுமந்திரனைத் தவிர்த்து மாவை சேனாதிராசா மற்றும் ஏனைய கட்சிகளின் தலைவர்களோடு இணையவழியில் உரையாடியது போன்று, 13 ஆம் திருத்தம் தீர்வல்ல எனவும் தமிழர்களின் சுயநிர்யண உரிமை அங்கீகரிக்கப்பட்டு வடக்கு - கிழக்கு இணைந்த சுயாட்சி முறையை உருவாக்க வேண்டுமெனப் பிடிவாதமாக நிற்க வேண்டும்.

அத்துடன் தமிழரசுக் கட்சியின் மத்திய குழு உறுப்பினர்கள் மற்றும் புளொட்டின் ஆதரவுடனும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைமைப் பொறுப்பை ரெலோவின் செல்வம் ஏற்க வேண்டும். ஏனெனில் மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் ரெலோவில் உள்ளனர். அத்துடன் உள்ளூராட்சி சபையிலும் அதிகளவான உறுப்பினர்கள் உள்ளனர்.

ஆகவே அந்தத் தற்துணிவு செல்வம் அடைக்கலநாதனுக்கு வரவேண்டும். அப்படியானதொரு சூழலில் விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி, சுரேஸ் பிறேமச்சந்திரன் தலைமையிலான ஈ.பி.ஆர்.எல்.எப் ஆகிய கட்சிகளையும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் உள்வாங்கலாம். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கும் அழைப்பு விடுக்கலாம். 2001 ஆம் ஆண்டு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டபோது செல்வம் அடைக்கலநாதன், சுரேஸ் போன்றவர்கள் முக்கிய பங்காற்றியிருந்தனர்.

தற்துணிவோடு எடுக்கப்பட வேண்டிய இந்த முடிவை செல்வம் அடைக்கலநாதன் ஏற்பாரேயானால், தமிழர்கள் ஒரு தேசமாக இருக்கின்றனர் என்பதை நிறுவ முடியும்.

(05 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யாழ்ப்பாண நகரத்தின் அடையாளங்களை அழித்தல்

## யாழ்ப்பாண நகரபிதாவுக்கு ஒரு குடியானவனின் மடல்









ஜீவன் தியாகராஜா

*அன்புடையீர்.*

தங்களுடைய அண்மைய பத்திரிகையாளர் சந்திப்பொன்றின் காட்சித் துண்டொன்றை டான் தொலைக்காட்சியில் பார்க்கக் கிடைத்தது. அது ஒருங்கே மகிழ்ச்சியையும், கவலையையும் தந்தது. மகிழ்ச்சியானது, 'நாவலர் காலாசார மண்டபத்தை மத்திய அரசிடம் கையளிப்பது இல்லை' என்ற தங்கள் நிலைப்பாடு சம்பந்தப்பட்டு உருவானது. மறுபுறம் எமக்கு வருத்தத்தை ஏற்படுத்திய விடயமானது, ஆஸ்பத்திரி வீதியின் பௌதீகத் தோற்றத்தை மாற்றி அமைப்பது தொடர்பான 'அபிவிருத்தி நடவடிக்கை' சம்பந்தப்பட்டு உருவானதாகும். இதன் மூலம், இலங்கையின் வேறெந்த பெருநகரங்களிலும் இல்லாததும், குறிப்பாக யாழ்ப்பாண நகரத்துக்கேயான சிறப்பம்சங்களில் ஒன்றாகக் காணப்படுவதுமான தெருமத்தி வாகனத் தரிப்பிடத்தை நாம் அழிக்க இருக்கின்றோம்.

அந்த தெருமத்தி வாகனத்தரிப்பிடம், வெறும் வாகனத்தரிப்பிடம் மாத்திரமல்ல : பதிலாக அது பெருவிருட்ச நிரைகளையுடைய தெருநடு பச்சைக் கோட்டுருவுமாகும் (green line). கூகுள் தரைப்படப் பயனியூடாக யாழ்ப்பாண நகரத் தரையை வெவ்வேறு காலப்பகுதி சார்ந்து உற்று நோக்கும்போது, அது எவ்வளவு தூரத்துக்கு தனது நகர உடலின் பச்சைப்பரப்பினை இழந்துள்ளது என்பதை அவதானிக்கலாம். அந்த இழப்பு நகரத்தின் சூழலமைப்பை (eco system) பாதித்து இருப்பது மட்டுமல்லாமல், அதனை எவ்வித ஒத்திசைவுமற்ற கட்டடங்களின் காடாக்கி விட்டிருக் கின்ற தென்பதையும் அவதானிக்கலாம்.

அடிப்படையில் நகரம் என்பது ஒரு இடம் (Place). கட்டடக் கலைப் பரப்பிலும். நகர அபிவிருத்தி வடிவமைப்பிலும் இடம் என்பதும் - இட உருவாக்கம் (Place making) என்பதும் முக்கியமான ஒன்றாக இன்று வாதிடப்படுகிறது. குறிப்பாக பேரிழப்புக்களையும் - பண்பாட்டு அடையாள அழிவு, அழிப்பு என்பனவற்றையும் சந்தித்த சமூகங்களில் அதன் மீந்திருக்கும் அழிவுக்கு முற்பட்ட கால அடையாளங்களைக் காப்பாற்றுதல் மூலமாக அதன் சமூக - பண்பாட்டு, வரலாற்று அடையாளத்தைத் தக்கவைக்க வேண்டும் என்ற வாதம் மரபுரிமைவாதிகள், கட்டடக்கலைக் கோட்பாட்டாளர்கள், நகரவடிவமைப்பாளர்கள் மற்றும் பண்பாட்டுப் புவியியலாளர்கள் முதலியோர்களால் அதிகம் முன்வைக்கப்பட்டுவருகிறது. அவ்வகையில் ஒரு இடமானது, எதிர்பாராத இயற்கைஅனர்த்தம்காரணமாகவோ அல்லது யுத்தம் முதலான நிலவரங்களின் கீழாகவோ அழிந்தால் அதனை மீளவும் அதன் பண்டைய நினைவுகள் செயற்பாடுகளின் தொடர்ச்சியை பேணும் வண்ணம் மீள உருவாக்கப்பட வேண்டும் என இட உருவாக்கக் கோட்பாடு வலியுறுத்துகிறது. என் ஞாபகத்தின்படி 2002 இல் என்று நினைக்கி றேன். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுண்கலைத் துறையால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 'யாழ்ப்பாணக் கட்டக்கலை' பற்றிய கருத்தரங்கில் கட்டடக்கலைஞர் ஷயன் குமாரதாஸ் மேற்படி இடவுருவாக்கக் கோட்பாடு தமிழ் சமூகத்தின் மீள் கட்டுமானத்தில் ஏன் முக்கியமானது என்பது பற்றி உரையாற்றியமை நினைவில் இருக்கிறது. ஆனாலும் இத்தனை ஆண்டுகளுக்கு பின்பும், அது பற்றியோ அல்லது எதனைப் பற்றியோ எந்தவிதமான விவாதங்களோ பிரதிவாதங்களோ இன்றியே தமிழ் சமூகம் காணப்படுகிறது. இந்த நிலைவரங்கள் ஈழத்தமிழ் சமூகம் ஒரு தோற்றுப் போய்விட்ட சமூகம் தானா? என்ற கேள்வியை எழுப்புவதைத் என்னால் தவிர்க்க முடியவில்லை.

இந்தப் பின்னணியில் ஆஸ்பத்திரி வீதியானது அதன் பல தசாப்தகால தொடர்ச்சி காரணமாக, யாழ்ப்பாண நகரம் என்ற நகர மரபுரிமையின் எஞ்சியிருக்கும் கூறுகளில் (பல சிதைவுகள் நடந்தேறி இருப்பினும்) ஒன்றாகக் காணப்படுகிறது. இருந்தபோதிலும் ஆகக் குறைந்தபட்சம் ஆஸ்பத்திரி வீதியின் எஞ்சிய குறைந்தபட்சப் பண்புகளையாவது காக்க வேண்டும். ஏற்கனவே காங்கேசன்துறை வீதி என்ற காலனியக் கலப்பொட்டுடன் (hybrid) கூடிய தமிழ்நகரங்களின் பொதுப்பண்புடைய தெரு சிதைக்கப்பட்டு விட்டது. இப்போது அது அகன்ற ஒரு வெற்றுத்தெரு மட்டுமே. அதன் கட்டட உடல்களும், தெருவின் அளவும் இயல்புகளும் பொதிந்து வைத்திருந்த வரலாற்று ஞாபகங்களும் தடயங்களும் குலைத்தெறி யப்பட்டு விட்டன.

யாழ்ப்பாண மறுமலர்ச்சியின் ஒரு வரலாற்றுத் தெரு எந்தவிதமான குற்ற உணர்வும் இல்லாமற் பிடுங்கப்பட்டது போன்ற ஒரு நிலைவரமே இப்போது ஆஸ்பத்திரி வீதிக்கும் நடைபெற இருக்கிறது. அங்கொன்றும் இங்கொன்றுமாக அவ்வீதி இன்னும் பொத்தி வைத்திருக்கும் சில கூறுகளே, பழைய ஆஸ்பத்திரி வீதியை எம்முள் இன்னும் உயிர்ப்புடன் வைத்திருக்கின்றது. அப்படியான ஒரு நகர மரபுரிமையின் மிகச் சிறிய - ஏறத்தாழ அதன் அடையாளத்தையே இப்போது நாம் பலி எடுக்கத் தலைப்பட்டுள்ளோம். இதில் ஆச்சரியமானது என்னவெனில், நகரபிதா அவர்களிடம் இன்று ஒரு மரபுரிமைக் காப்புப்படையணி ஒன்றுள்ளது. அதனைச் சார்ந்த வளவாளர்கள் ஏன் இந்தத் தெருவின் வரலாற்றுப் பண்பாட்டு முக்கியத்துவத்தை நகரபிதாவின் கவனத்துக்கு கொண்டு செல்லவில்லை என்பது எனக்குப் புரியவேயில்லை.

அதேவேளை, 1980களின் நடுப்பகுதி மற்றும் 1990களது முற்பகுதியில் கோட்டையில் இருந்து ஏவப்படும் எறிகணையின் பிரதான எல்லையாகவும் ஆஸ்பத்திரி வீதியே அமைந்திருந்தது.

அதனைத் தாண்டி ஆஸ்பத்திரிக்குள் வந்து எறிகணைகள் வீழ்ந்தநாட்களும் உண்டு. என்னைப் போன்றவர்களின் நினைவுகளுக்குள் புதிதாக எழுந்து நிற்கின்ற கார்கில்ஸ், ஜெற்விங் ஹொட்டேல் முதலிய கட்டுமானங்களைத் தாண்டி யாழ்ப்பாணப் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கக் கட்டடம், வீழ்ந்து வெடித்த எறிகணையில் சிதறிப்போன சனங்களது நினைவுகள் எல்லாம் ஒட்டியுள்ளன. அந்த நினைவுகள் ஆஸ்பத்திரி வீதியுள் மறைந்துகிடக்கும் பழைய இன்னும் தப்பியொட்டிக் கிடக்கும் சிலபல பௌதீக அம்சங்களால்தான் விளைகின்றன.. அப்படிப் பார்க்கும்போது அது ஒரு யுத்தகால நினைவு புதைந்து கிடக்கும் தெருவுங் கூட.

ஆங்கிலக் கவரனரான டைக் யாழ்ப்பாண ஆஸ்பத்திரியை நிறுவியதோடு வளரத்தொடங்கிய இத்தெருவில் 1950களின் பின்னரே இப்போதுள்ள கடைகளின் முன்னோடிக்கடைகள் பெருமளவுக்குத் தோன்றி உருவாகி விரிந்திருந்தாலுங் கூட, மேலே சுட்டிக்காட்டப்பட்ட வரலாற்று விடயங்களாலும் அதற்கான தடையங்களாலும் உருவாகி ஒரு மௌனமான சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு தெருவாகியும் இருக்கிறது. இன்று ஒசுசல இருக்கும் மின்சாரசபையின் பழைய கட்டடங்கள் உள்ளிட்ட சில கட்டடங்களை விடுத்துப் பர்த்தால் ஆஸ்பத்திரி வீதியிற் காணப்பட்ட காலனிய கட்டட மரபுரிமைகளை நாம் எல்லோரும் கூட்டிணைந்து விழுங்கி ஏப்பமும் விட்டு அமர்ந்தாகிவிட்டது.

சரி, இவை எல்லாம் ஒரு புறம் இருக்கட்டும். இப்போது இந்த வீதியை அகலிக்க வேண்டிய காரணம் யாது? அப்படி என்ன தலைபோகின்ற பிரச்சினையை இந்த வீதி நகரத்துக்குக் கொடுக்கிறது? ஏற்கனவே பாதசாரிகளுக்கான நடைபாதை இரண்டு புறமும் உள்ளது. வீதியின் இரு புறமும் ஏறத்தாழ இரண்டிரண்டு வாகனங்களுக்கான பாதைகள் உள்ளன. அது சற்று நெருக்கமாக இருப்பது பிரச்சினையா? அல்லது 'பெரியகடைக்கு' கொழும்பிலிருந்து பொருட்களை ஏற்றி வரும் லொறிகள் உள்ளிட்ட பார ஊர்திகள் நடமாடச் சிரமமாக உள்ளதா? எதற்காக இந்த நடவடிக்கையில் முனைப்பாக உள்ளோம்?

இவைதான் பிரச்சினை என்றால், இவற்றைக் கையாள வேறெந்த மாற்று வழியும் இல்லையா? அல்லது ஒரு சமூகத்தின் பண்பாட்டு அடையாளங்களைக் காத்து அதன் சமூக வரலாற்றுத் தனித்துவங்களைக் காப்பதற்கான ஒரு பொறிமுறையானது வாகனங்களுக்கு போய்வர இடங்காணாதுள்ளது என்பதை விடவும் முதன்மையானதா?.

மத்திய வாகனத்தரிப்பிடம் காரணமாக பிரச்சினைகள் வருகின்றது எனின் அதனை ஒழுங்குபடுத்தும் மாற்றுச் சிந்தனைகள் எவையும் எம்மிடம் இல்லையா. எந்தெந்த வாகனங்கள் எங்கு நிறுத்தப்பட வேண்டும், எப்படி அவை தரிக்கவேண்டும் என்ற குறைந்தபட்டச வழிகாட்டல்கள் ஏதும் அவ்வீதிக்கு உண்டா? அல்லது இப்போதுள்ள வாகனத்தரிப்பிடச் சிக்கல்களை தீர்க்க நகர அபிவிருத்தித் திட்டமிடலாளர்களது மூல வரைபடங்களில் அதற்கான திட்டங்கள் ஏதும் இல்லையா? கண்டிப்பாக இருக்கும் என்றே நம்புகிறேன்.

ஒரு குட்டிப்பட்டினத்தைச் சுற்றிவர எவ்வளவு நிமிடங்கள் எடுக்கும். பாதிவாகனங்களை நகரத்தின் விளிம்புகளில் அமைக்கப்படும் தரைமைய அல்லது தரைக்கீழ் (underground) தரிப்பிடங்களில் விட்டு வைத்துவிட்டு நடந்து தமது செயற்பாடுகளை மேற்கொள்ள மக்களை ஊக்குவிக்க வேண்டாமா? (அது, சலரோகம், இதய நோயுள்ளாவர்கள் இந்தச்சாட்டிலாவது நடந்து அவர்கள் உடலிற் தேங்கிக்கிடக்கும் கலோரிகளை எரிக்க உதவுமே?

(07ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதுமை ஒரு கொடையோ..?



தண்ணீரில்
மீன் அழுதால்
யாருக்குத் தெரியும்..

நெஞ்சத்தின்
சுமைகள்
சுமந்தாலே புரியும்..

கண்ணீரில்
கரைந்தே
கனவுகளும் அழியும்..

கடந்து சென்ற
நிகழ்வுகள்
பதிவுகளாய் விரியும்..

சொல்லித்தான்
புரிந்திடுமோ
தந்தையரின்
தியாகங்கள்..

சொல்வதற்கு
வார்த்தைகளை
தேடுகின்றேன்
தெரியவில்லை..

குடும்பத்தின்
உயர்வொன்றே
நெஞ்சத்தின்
நினைவலைகள்..

சூரியன் உதித்திட
தாமதம் ஆகலாம்
மாறாதே..
உதயத்தின்
முன்னெழுந்து
இருளோடு பயணங்கள்..

நாள் முழுதும்
வேலை
நள்ளிரவைத் தொட்டுவிடும்
வீடு வந்து
சேர்கையிலே..

உறங்கிவிட்ட
குழந்தைகளின்
முகம் பார்த்து
துயில் கொண்ட
பொழுதுகள்..

பிள்ளைகளின் தேவைகள்
படிப்பு
உத்தியோகம்
உயர்வுகள் என்றே
நாளும் தொடரும்
கலையாத
கனவுகள்
கற்பனைகள்
நீரோட்டம் போல்
அலை அலையாய்
வாழ்வின் கோலங்கள்..

வேகமான
கால ஓட்டம்
வருடங்களின் நகர்வுகள்
வயதின் முதிர்ச்சி..

பருவ வயதில்
பிள்ளைகள்..
திருமண நிகழ்வுகள்
மகிழ்வினிலும்
பிரிவுகளின்
தடுமாற்றம்..

பிள்ளைகள்
விலகிவிட்ட
வீட்டின் வெறுமை..
சோகத்தின் நிழலாய்
தொடரும் தனிமை

நித்தம் பாசத்தின்
பரிதவிப்பு..

தள்ளாமை கூடிவரும்
வாழ்க்கைப் படிகள்
ஒவ்வொன்றாய்
ஏறித்தான் ஆகவேண்டும்
வாழ்வின் நியதி..

வாழ்க்கை தரும்
கிடைத்தற்கரிய
கொடையோ
மூப்பு..?

முதுமையில் கிட்டிடும்
ஆனந்தம்
பேரானந்தம்
பேரக்குழந்தைகளின்
சுகமான கொஞ்சல்கள்..

மனம்
நிறையப் பாசம்
கை நிறையப் பழங்கள்
இனிப்பு வகை
மக்கள்
மருமக்கள்
பேரர்களைத் தேடி
செல்லும் யாத்திரைகள்..

சொர்க்கமே காலடியில்
கண்டது போல்
பேரர்கள் பக்கத்தில்
அரவணைப்பில்
ஆனந்தப் பெருமூச்சு
அது
நிம்மதிப் பெருமூச்சு
இனிப் போதுமென்ற
மூச்சு..

எட்டி நிற்கும்
தந்தையரின்
பாசம்
நேசம்
அவர்தம் ஆசைகள்
எதிர்பார்ப்புகள்
எண்ணங்கள்
யாரறிவார்..?

அப்பாக்களின்
கடை விழிகளில்
துளிர்த்து நிற்குமே
கண்ணீர் முத்துக்கள்
அவை சொல்லும்
கதை கதையாய்
கண்டவர்க்குப் புரியும்..

தேடிப் படியுங்கள்
அவசியம்..
வாழ்வின்
அனுபவப் புத்தகங்கள்
அவை..!

**பத்மா இளங்கோவன்**
**(பத்மபாரதி) பிரான்ஸ்**



முதுபெரும் எழுத்தாளர் கி.ராஜநாராயணனின் (கி.ரா.வின்) நண்பரும் எழுத்தாளருமான பேராசிரியர் அ.ராமசாமி, அவரின் 40 ஆண்டு கால நண்பர். அவரோடு கொண்ட நட்பை 'உதயன் – சஞ்சீவி' வாசகர்களுக்காக நினைவுக் குறிப்புகளாகத் தருகிறார்.

**பேராசிரியர் அ.ராமசாமி**
*தமிழ்த்துறை (பணி நிறைவு) மனோன்மணி சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, தமிழ்நாடு.*

# கி.ரா: நினைவுகள் 32

மதுரைக்காரர்களுக்கு விருதுநகருக்குத் தெற்கே இருப்பவர்கள் எல்லாம் தெக்கத்தி ஆட்கள்தான். இலக்கிய வட்டாரத்தில் தெக்கத்தி எழுத்தாளர்கள் என்ற சொல்லாட்சி, 1980கள்வரை, நெல்லை, கன்யாகுமரிக்காரர்களைக் குறிக்கும் சொல்லாக இருந்தது. கன்யாகுமரி எழுத்தாளர்கள் கூட அந்தச் சொல்லாட்சிக்குப் பெரிதும் சொந்தம் கொண்டாடுவதில்லை: ஆனால் நெல்லைக்காரர்கள், தங்களைத் தெக்கத்திச் சீமைக்காரர்கள் என்று சொல்லிக்கொள்வதில் பெருமையோடு இருந்தார்கள்.

இந்தப் பெருமையை மங்கச்செய்து, கரிசல் எழுத்தாளர்களின் கூட்டத்தையே தெக்கத்தி எழுத்தாளர்களின் கூட்டமாக மாற்றியவர் கரிசல் இலக்கியத்தின் முன்னத்தி ஏரான கி. ராஜநாராயணன்தான். கரிசல் இலக்கியம் என்பதற்கு நில அடையாளம், மொழி அடையாளம், புழங்கு பொருட்கள் மற்றும் தொழில்சார் கருவிகள் கொண்ட வாழ்வியல் அடையாளம் எனத் திட்டமிட்டு உருவாக்கித் தந்து. அதன் வெளிப்பாடாக கரிசல் வட்டாரச் சொல்லகராதியைத் தொகுத்துத் தந்ததன் மூலம் கரிசல் இலக்கியப்பரப்பை விரிவாக்கினார் கி.ரா. அவர் உருவாக்கிய பரப்பிற்குள் பூமணி, பா.ஜெயப்பிரகாசம், தமிழ்ச்செல்வன், சோ.தர்மன், தனுஷ்கோடி ராமசாமி, கௌரிசங்கர், உதயசங்கர், கோணங்கி போன்ற கதைக்காரர்களும் தேவதச்சன், தேவதேவன், சமயவேல், வித்யாஷங்கர் போன்ற கவிஞர்களும் அந்தப் பரப்பைப் பல வித வண்ணங்கள் கொண்டதாக மாற்றினார்கள்.



அந்த மாற்றத்திற்குப் பின்னால் நெல்லை எழுத்தாளர்களும் கூட கரிசல் என்ற சொல்லை தெக்கத்தி என்ற சொல்லால் பெரிதாக்கித் தங்களையும் இணைத்துக் கொண்டு பெரிய அடையாளத்துக்குள் இணைந்துகொண்ட நிகழ்வைச் சமகாலத் தமிழ் இலக்கியப் பெருநிகழ்வு என்று சொல்லலாம். நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்த வண்ணதாசன், கலாப்ரியா, விக்ரமாதித்யன் போன்றவர்கள் தங்களின் நிலப்பரப்பிலிருந்து வந்த முன்னோடியாகக் கி.ராஜநாராயணனைக் கொண்டாடியதை நேரில் கண்டிருக்கிறேன். இவர்களில் பலரும் கி.ரா.வைப் பார்க்கப் புதுவைக்கு வந்து போவதுண்டு. அவர்களில் ஒரு சிலரின் வருகையின் போது நானும் உடன் இருந்திருக்கிறேன்.

தெக்கத்தி எழுத்தாளர் என்றோ, கரிசல் எழுத்தாளர் என்றோ தங்கள் அடையாளத்தைச் சொல்லிக்கொள்ளாத இருவர் கி.ரா. வைப்பார்க்க வந்தபோது அவரோடு இருந்திருக்கிறேன். ஒருவர் தோப்பில் முகம்மது மீரான்; இன்னொருவர் கழனியூரன். கழனியூரன், கி.ரா. நாட்டுப்புறக்கதைகளைத் தொகுத்தபோது உடனிருந்து தொகுப்புக்கு உதவியவர். அவரைப்போலவே தொகுப்புக்கு உதவிய இன்னொருவர் பாரததேவி. கழனியூரனும் தோப்பிலும் புதுவைக்கு வந்து கி.ரா.வோடு பேசும் விதத்தைக் கவனித்த எவரும் அவர்கள் நெருங்கிய உறவுக்காரர்கள் என்று தான் நினைப்பார்கள். அவரோடும் கணவதி அம்மாவோடும் உறவுமுறை சொல்லிப் பேசிச் சிரித்து மகிழ்ந்து விட்டுப்போவார்கள்.

இந்த உறவு வரலாற்றில் சொல்லப்பட்ட பிறழ்வான நிலைக்கு எதிரானது. இந்தியாவில் இசுலாமியர்களின் ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வருவதற்காகவே விஜய நகரத்தில் இந்து ராஜ்ஜியம் நிறுவப்பட்டதாகவும், அங்கிருந்து வந்த நாயக்க ஆட்சியாளர்கள் மதுரைவரை வந்து இசுலாமியர்களை விரட்டியடித்ததாகவும் வரலாறு சொல்கிறது. அதற்கு முன்பு ஆந்திரப் பகுதியைக் கைப்பற்றிய இசுலாமிய அரசர்களும் தளபதிகளும் நாயுடுகளின் வீட்டுப் பெண்களை வம்படியாகத் திருமணம் செய்யவிரும்பினார்கள் என்றும், அதனை ஏற்காத நாயுடுகள் ஆந்திராவிலிருந்து இடம்பெயர்ந்து வந்தார்கள் என்றும், தெலுங்குச் சாதிகளின் தொன்மங்களில் பேசப்பட்டுள்ளன. கி.ரா. எழுதிய கோபல்ல கிராமம் நாவலில் கூடஅந்த இடப்பெயர்வுக் கதை இடம்பெற்றுள்ளது. தனது நாவலில் அப்படிச் சித்தரித்த கி.ரா.,தோப்பிலோடும், கழனி யூரனோடும் மாமா, மாப்பிள்ளை என்று உறவு சொல்லிப் பேசிக்கொண்டிருப்பார் .

1991- 92 ஆக இருக்கும். கி.ரா.வைப் பார்க்கப் புதுவை வந்திருந்தார். சந்தித்த அன்று முதல் எனக்கும் மாமா தான். கி.ரா., பெரிய மாமா ஆனதால், நான் சின்ன மாமா ஆகிவிட்டேன். அப்படித் தான் தோப்பில் அழைப்பார். அவர் மேடையில் பேசுவதைக் கேட்பதைவிட தொலைபேசியில் பேசுவதை விரும்பிக் கேட்பேன். நீண்ட நேரம் பேசுவோம். கடலோரக் கிராமத்தின் கதை, சாய்வு நாற்காலி தவிர எல்லாமே வந்தவுடன் அழைத்து தந்து படித்துக் கருத்துக் கேட்பார். அவ்விரண்டையும் போலவே கூனன் தோப்பு, துறைமுகம், அஞ்சு வண்ணம் தெரு, குடியேற்றம் என எல்லா நாவல்களுமே தமிழக இசுலாமிய சமூகத்தின் உள்கட்டுமான நெருக்கடிகள் பற்றிய அலசல்களே. வியாபாரம் சார்ந்து திருநெல்வேலியில் வாழ நேர்ந்தாலும் எழுத்தில் கன்னியாகுமரி மாவட்ட்த்திலேயே தான் இருந்தார். சிறுகதைகளில் குறிப்பான வெளிகளைப் பார்க்க இயலாது.

நான் நெல்லைப் பல்கலைக்கழகத்தில் சேர்ந்த ஆண்டில்தான் தோப்பிலின் சாய்வு நாற்காலி சாகித்ய அகாடெமி விருது(1997) பெற்றது. அவரது படைப்புகளை முன்வைத்து ஒருநாள் கருத்தரங்கம் ஒன்றை 1998 மார்ச்சில் நடத்தத் திட்டமிட்டபோது கி.ரா. மாமாவை அழைக்கமுடியுமா? என்று கேட்டார். அவர்தான் எனக்கு அகாடெமி விருது கிடைக்க முக்கியமான காரணம் என்றும் சொல்லி, அவரை அழைக்க முயற்சி செய்யுங்கள் என்றார். 'அழைக்கலாம்; ஆனால் கி.ரா. பயணம் செய்துவர வேண்டுமே; இவ்வளவு தூரம் பயணம் செய்யத் தயங்குவாரே' என்று சொல்லிவிட்டு முயற்சி செய்தேன். நாங்கள் பேசிக்கொண்டது போலவே அவர் வரவில்லை. ஆனால் தோப்பிலுக்காக ஒருநாள் முழுக்கக் கருத்தரங்கம் நடத்துவது குறித்து பெரிதும் மகிழ்ச்சி அடைந்தார். இதுதான்பல்கலைக் கழகங்கள் இலக்கியத்திற்குச்செய்யவேண்டிய வேலை என்று சொல்லி ஓர் அஞ்சலட்டை எழுதிப் போட்டிருந்தார். தோப்பில் கருத்தரங்கிற்குக் கி.ரா.வை அழைக்க முடியாததை எப்படியாவது ஈடுகட்டவேண்டும்; திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்திற்கு அவரை அழைக்கவேண்டும் என்பதில் எங்கள் பல்கலைக் கழகத் துணைவேந்தர் முனைவர் வே.வசந்திதேவியும் ஆர்வம் காட்டினார். முனைவர் வே. வசந்திதேவி இலக்கியவாதிகளைப் பல்கலைக்கழகத்தோடு தொடர்புபடுத்துவதில் ஆர்வம்கொண்டவர். எழுத்தாளர்கள் தொ.மு.சி.ரகுநாதனையும் சுந்தரராமசாமியையும் பல்கலைக்கழக ஆட்சிப் பேரவையின் உறுப்பினர்களாக ஆக்கும்படி ஆளுநருக்கு அவர்தான் பரிந்துரைத்தார். இளையோர் நலத்திட்ட ஆலோசனைக் குழுவில் தோப்பில் முகம்மது மீரானும் தமிழ்ச் செல்வனும் இடம்பெற்றிருந்தார்கள். அவரது பதவிக்காலம் முடியும் நிலையில் பெண்ணியம் குறித்து மூன்றுநாள் கருத்தரங்கம் ஒன்றை நடத்தினோம். அக்கருத்தரங்கின் தலைமையுரையை நிகழ்த்த கரிசல் எழுத்தாளர் கி.ரா.வை அழைக்க வேண்டும் என்று என்னிடம் வலியுறுத்தினார். அப்போது கி.ரா., தயாராக இருந்தால் நமது பல்க லைக்கழகத்தில்கூட அவரை ஓராண்டு வருகைதரு பேராசிரியராக நியமிக்கலாம் என்றார். அவர் நமது பல்கலைக்கழகப் பகுதியைச் சேர்ந்தவர்.

நமது பல்கலைக்கழகப் பகுதியின் மனிதர்களை எழுதியவர் என்று அடிக்கடிசொல்வார். புதுச்சேரிக்குப் போன கி.ராஜநாராயணனுக்குத் திரும்பவும் கரிசல் பூமிக்குத் திரும்பும் ஆசை இல்லை என்பது தெரிந்த பின் அந்த முயற்சியைக் கைவிட்டுவிட்டோம். *(நினைவுகளும் குறிப்புகளும் தொடரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண வரலாறு

1505–1948 வரை

ந.பரமேஸ்வரன்

### வடமராட்சி தோம்பு

கிராமங்களிலிருந்தும் சந்தைகளிலிருந்தும் பெற்ற வரி பெற்ற வரி

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| கரணவாய் | 439 | 2 | 07 | 066 | 3 | 10 |
| புலோலி | 344 | 1 | 10 | 092 | 3 | 10 |
| துன்னாலை | 193 | 0 | 01 | 028 | 2 | 00 |
| கரவெட்டி | 341 | 1 | 16 | 033 | 0 | 10 |

உடுப்பிட்டி மொத்தம் - 618.4.8

நான்காம் குறிச்சியில் வரிவிலக்கு பெற்ற தனக்காரர்களின் வரிவிலக்கு கழித்து 173.1.16

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மிகுதி | 443 | 0 | 13 | 100 | 0 | 00 |
| வல்வெட்டித்துறை | 029 | 0 | 06 | 009 | 1 | 00 |
| மாலிசந்தி | 024 | 1 | 07 | 054 | 0 | 05 |
| தும்பளை | | | | | | |
| வராத்துப்பளை | 094 | 3 | 18 | 000 | 0 | 00 |
| அல்வாய் | 352 | 4 | 18 | 022 | 4 | 00 |
| பருத்தித்துறை துறைமுகம் | 023 | 0 | 10 | | | |
| வல்வெட்டித்துறை துறைமுகம் | | | | 014 | 3 | 00 |
| தொண்டைமானாறு துறைமுகம் | | | | 018 | 4 | 00 |

சாதி ரீதியாக பெற்ற வரிகளில் அந்தக்காலத்தில் இருந்த சாதிகளின் போர்த்துக்கீச மொழியில் உள்ள பெயர்களை அடையாளம் காண்பது சிரமமாக உள்ளபடியால் அந்த விபரங்களை தவிர்த்துள்ளேன்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| பச்சிலைப்பள்ளி | | | | | | |
| முகமாலை | 143 | 3 | 00 | 061 | 3 | 05 |
| புலோப்பளை | 123 | 1 | 18 | 042 | 2 | 15 |
| பெரியபளை | 043 | 0 | 12 | 011 | 3 | 05 |
| முகாவில் | 056 | 4 | 13 | 009 | 1 | 05 |
| உடுத்துறை | 022 | 02 | 10 | 007 | 4 | 00 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| சோரன்பற்று | 054 | 2 | 09 | 012 | 1 | 10 |
| கிளாலி | 074 | 3 | 05 | 049 | 3 | 15 |
| தம்பகாமம் | 134 | 2 | 15 | 020 | 1 | 10 |
| சங்கத்தார்வயல் | 038 | 0 | 19 | 010 | 1 | 05 |
| பெரியபச்சிலைப்பள்ளி | 08 | 50 | 05 | 006 | 2 | 15 |
| வண்ணாங்கேணி | 107 | 2 | 03 | 027 | 1 | 1 |
| செம்பியன்பற்று | 063 | 0 | 01 | 034 | 1 | 10 |
| இத்தாவில் | 096 | 4 | 04 | 040 | 1 | 15 |
| கோயில்வயல் | 029 | 0 | 08 | 002 | 3 | 10 |
| குடாரப்பு | 027 | 2 | 17 | 020 | 1 | 00 |
| மருதங்கேணி | 017 | 0 | 04 | 006 | 0 | 00 |
| ஆழியவளை | 011 | 1 | 15 | 003 | 4 | 05 |
| இயக்கச்சி | 029 | 0 | 04 | 002 | 3 | 10 |
| மல்வில் | 013 | 2 | 08 | 004 | 0 | 00 |
| முள்ளியான் | 076 | 0 | 17 | 009 | 1 | 05 |
| வத்திராயன் | 012 | 3 | 16 | 014 | 1 | 00 |
| வேம்பொடுகேணி | 135 | 1 | 12 | 022 | 0 | 00 |
| தர்மக்கேணி | 100 | 0 | 01 | 021 | 3 | 10 |
| மாசார் | 038 | 1 | 18 | 034 | 1 | 10 |
| பொகாரப்பு | 090 | 2 | 11 | 003 | 0 | 00 |
| Vivandienpathu | 033 | 1 | 18 | 005 | 0 | 00 |
| Catndarpulao | 046 | 0 | 17 | 004 | 0 | 00 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மொத்தம் | 1941 | 2 | 17 | 479 | 3 | 15 |

| | | | |
|---|---|---|---|
| தச்சர், கொல்லரிடமிருந்து பெற்றவரி | 011 | 0 | 00 |
| சலவைத் தொழிலாளர்களிடமிருந்து பெற்றவரி | 01 | 41 | 00 |

(Vivandienpathu, Catndarpulaoஆகிய கிராமங்களின் பெயர்களை அடையாளம் காணமுடியவில்லை எனவே அவற்றை போர்த்துக்கீச மொழியில் உள்ளவாறே தந்துள்ளேன்)

போர்த்துக்கீசர் மேற்கொண்ட வரி அறவீடுகள் செலவினங்கள் தொடர்பான இந்த அட்டவணை மற்றும் புள்ளிவிபரங்கள் யாவும் பிரபல வரலாற்று ஆய்வாளர் போல் பீரிஸினால் (Paul Pieris)வெளியிடப்பட்டTHE KINGDOM OF JAFFNAPATAM 1645 என்ற நூலிலிருந்து பெறப்பட்டவை. யாழ்ப்பாணத்தில் போர்த்துக்கீசர் பெற்றவரி விபரங்களை லிஸ்பன் நகரிலுள்ள அரும்பொருள் காட்சியகத்திலுள்ள கையழுத்துப் பிரதி ஒன்றிலிருந்து பெற்றுக் கொண்டதாக போல் பீரிஸ் குறிப்பிட்டுள்ளார். போல் பீரிஸ் தனது டாக்டர்பட்ட ஆய்வினை THE KINGDOM OF JAFFNAPATAM 1645 என்ற தலைப்பிலேயே மேற்கொண்டுள்ளார் இங்கு சந்தைவரி என குறிப்பிடப்பட்டுள்ளது வீதியோரங்களில் வைத்து விற்பனை செய்தவர்களிடமிருந்து பெற்ற வரியாகவே இருக்கவேண்டும்; போல் பீரிஸ் ஒரு சிங்களவர் அவர் pol tax என குறிப்பிட்டுள்ளதையே தமிழில் சந்தைவரி என குறிப்பிட்டுள்ளேன்.

*(வரலாறு நீளும்)*

*(02-ஆம் பக்கத் தொடர்ச்சி)*

# பூகோள அரசியல் ....

தமிழ்த் தேசியக் கட்சிகள் தனித் தனிக்கட்சிகளாகப் பிரிந்திருப்பதை பலவீனமாகக் கருதியே சிங்கள ஆட்சியாளர்களும் அமெரிக்கா, இந்தியா போன்ற வல்லாதிக்கச் சக்திகளும் வடக்கு -கிழக்கிலும் புலம்பெயர் தேசங்களிலும் உள்ள தமிழ் அமைப்புகள் மற்றும் தனிநபர்களுக்குள் ஊடுருவி, தங்கள் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப ஈழத்தமிழர்களின் அரசியல் விடுதலை பற்றிய பேச்சுக்களைத் திசை திருப்புகின்றனர். அதில் வெற்றியும் கண்டுள்ளனர். அவற்றில் ஒன்றுதான் இந்த 13 பற்றிய பேச்சும்.

13 இன் மூலமாக உருவாக்கப்பட்ட மாகாணசபை, தமிழரசுக் கட்சியால் பெறப்பட்டதல்ல. அது ஆயுதப் போராட்டத்தின் குழந்தை. ஒவ்வொரு இயக்கங்கள் பற்றிய விமர்சனங்கள், குற்றச்சாட்டுக்களுக்கு அப்பால், அனைத்து இயக்கங்களுக்கும் அதில் கூட்டுப் பங்களிப்புண்டு. ஆனாலும் அது உரிய தீர்வல்ல என்பதை அன்றே எல்லோரும் ஒருமித்த குரலில் கூறியுமுள்ளனர்.

சிலர் அனுபவப்பட்ட பின்னர் 13 வேண்டாமென்கின்றனர். அதாவது கிழக்கு மாகாண சபை முதலமைச்சராக இருந்த பிள்ளையான் என அழைக்கப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் கூட அதிகாரமில்லாத சபை என்று கூறியிருக்கிறார். முதலமைச்சராக இருந்த காலத்தில் ஆக 750 மலசலகூடங்களை கட்டுவதற்கு மாத்திரமே அதிகாரம் கிடைத்திருந்ததென்ற உண்மையையும் அவர் வெளிப்படுத்தியிருந்தார்.

மாகாண சபைக்கு அதிகாரமே இல்லையென 1993 ஆம் ஆண்டு மேல் மாகாணத்தில் முதலமைச்சராகப் பதவி வகித்த முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா கூறியிருந்தார். விக்னேஸ்வரன் 2001 ஆம் ஆண்டு உயர்நீதிமன்ற நீதியரசராகப் பதவியேற்றபோது மாகாண சபையின் அதிகாரங்களை சிறுவர்களின் மாபிள் விளையாட்டோடு ஒப்பிட்டுப் பகிரங்கமாகவே சிங்கள உயர் அதிகாரிகள் முன்னிலையிலேயே கூறியிருந்தார்.

ஆகவே எழுபது ஆண்டுகால அரசியல் போராட்டம் நியாயம[illegible] 2009 இல் தமிழர்களின் ஆயுதப் போராட்டம் ஏன் இல்லாதொழிக்கப்பட்டது என்பதும் அமெரிக்கா, இந்தியா போன்ற வல்லரசுகளின் மனச்சாட்சிக்குத் தெரியும். அது பற்றிக் கடந்த ஆண்டு ஜனவரி மாதம் நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற விவாதம் ஒன்றில் சம்பந்தன் விளக்கமளித்திருந்தார். நிரந்தர அரசியல்தீர்வு வழங்கப்படுமென உறுதியளித்துவிட்டுப் பின்னர் அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகள் தன்னை ஏமாற்றிவிட்டதாகவும் கவலை வெளியிட்டிருந்தார். பத்து ஆண்டுகளின் பின்னர் சம்பந்தன் தனது மனச்சாட்சியை வெளிப்படுத்தியிருந்தார்.

ஆகவே நிரந்த அரசியல்தீர்வு எதுவாக இருக்க வேண்டுமென்பதைத் தீர்மானிக்க வேண்டியவர்கள், போரால் பாதிக்கப்பட்ட தமிழ்மக்கள்தான் என்ற யதார்த்தத்துக்கு அமைவாக ,இறைமை அங்கீகரிக்கப்பட்ட சுயாட்சிதான் தீர்வு என்பதை துணிவோடு சொல்வதற்கேற்ற முறையில் தமிழர்கள் ஒரு தேசமாகச் சிந்திக்க வேண்டுமானால், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை பலப்படுத்துவது யார் என்ற கேள்விக்கு இடமில்லாமல் செயற்பட வேண்டும். அதற்கேற்றவாறு தமிழரசுக் கட்சிக்குள் செயற்படுகின்ற வில்லங்கமான கருத்துடையோரை நீக்க வேண்டும். பூனைக்கு மணி கட்டுவது யார்?

தேர்தல் அரசியலில் ஈடுபடும் தமிழ்த்தேசியக் கட்சிகளில் மீது நம்பிக்கையே அற்றவொரு நிலையிலும் இறுதிச் சந்தர்ப்பமாக இந்தக் கட்டுரையாளர் இதனைப் பதிவிடுகிறார்.

ஆனால் இதனை ஒற்றுமைப்படுத்தல் என்று கருதவேண்டாம். தமிழர்களின் இறைமை, சுயாட்சி, சுயநிர்ணய உரிமை என்பதை ஒருமித்த குரலாகவும் தமிழர்கள் ஒரு தேசமாகவும் வெளிப்படுத்தப்பட வேண்டிய பூகோள அரசியல் சூழல் தற்போது உருவாகியுள்ளது. இதனால் எமது பலத்தை நிரூபிக்க வேண்டிய சந்தர்ப்பம் இதுவே.

ஆப்கானிஸ்தானில் இருந்து நேட்டோ படைகள் விலகிய நிலையில், இலங்கையை மையப்படுத்திய இந்தோ பசுபிக், தென்சீனக் கடல் விவகாரங்கள் சூடுபிடிக்கவுள்ளன. இதற்குள் தமிழர்கள் தம்மை ஒரு தேசமாகக் காண்பிக்க வேண்டிய அவசியம் தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மா

ஜீவகுமாரன்

மழையிருட்டு மாலைப் பொழுதை விழுங்கி இருந்தது.
புழுக்கம் வேறு. எப்போது மழைகொட்டித் தீர்க்கும்?
எப்போதுதான் புழுக்கம் கொஞ்சமாவது குறையும்??... என்பது போலிருந்தது.
ஐரோப்பாவில் ஐந்து நாட்கள் காலில் சில்லுகளைக் கட்டிக் கொண்டு ஓடும் வாழ்க்கையில் கொஞ்சம் ஆறுதலாகவும் மகிழ்ச்சியாகவும் இருப்பதே இந்த சனி ,ஞாயிறு தினங்களில் தான்.
ஞாயிறு மாலை வந்துவிட்டால் திங்கட்கிழமை செய்து முடிக்கவேண்டிய பணிகள் வந்து பயமுறுத்தும். எனவே சனிக்கிழமைதான் உண்மையான விடுமுறை நாள் போல இருக்கும்.
டென்மார்க்கில் குளிர் காற்று இல்லாது உண்மையான வெப்பமும் வெளிச்சமும் இருப்பதே அதிகூடியது இரண்டு அல்லது மூன்று மாதங்கள் தான்.
அதையும் இந்த சனி மதியம் உருவான புழுக்கமும் மழையிருட்டும் குழப்பிவிடும் போல் இருந்தது.
ஆனால் கனகராணி வீட்டினுள் உள்ள புழுக்கம் வெள்ளிக்கிழமை நடுச்சாமத்தின் போதுதொடங்கியது.

✦✦✦✦

கனகராணி!
வயது 52.
நான்கு பிள்ளைகளின் தாய்.
இரண்டு பெண்கள் மூத்தவை.
இரண்டு ஆண்கள் இளையவை
28 26 24 22 இரண்டு ஆண்டுக்கு ஒன்று என்ற கணக்கு.
மூத்தவளுக்கு இந்தக் கோடைகால விடுமுறை முடிய திருமணம் நிச்சயிக்கப்பட்டிருந்தது.
கனகராணிக்கு 44 வயதில் விவாகரத்து.
பிள்ளைகளின் பெயருக்குப் பின்னாலும் கனகராணியின் பெயரின் பின்னாலும் அவளின் 24 வயதில் இருந்து ஒட்டியிருந்த செந்தில் என அழைக்கப்பட்ட செந்தில்நாதன் விவாகரத்துக்குப் பின்பு மலேசியாவுக்குப் போன இடத்து அங்கேயே ஏதோ ஒரு நோய் வந்து மரணமானார்.
என்ன நோய் என்பது இன்னுமும் வெளிவராத சமாச்சாரமகவே இருக்கின்றது. ஆனால் அங்கிருந்த பொழுது அவரின் வங்கிச் சேமிப்பு பூஜ்ஜியத்தைத் தொட்டது. கனகராணிக்கு 44 வயதில் விவாகரத்து கிடைத்த அன்றே அவரின் மரணம் காடாத்து, அந்தியேட்டி, ஆட்டத் திவசம் அனைத்தும் நடந்து அழுது முடித்தாயிற்று.
பின்பு 46 வயதில் வந்த மரணச் செய்தி ஒரு குறுஞ்செய்தி மட்டும் தான்.
"கொள்ளி வைக்க பிள்ளைகள் வருவினமோ?"என்ற உறவினரின் கேள்விக்கு" நாங்கள் வரவில்லை"என ஆண்பிள்ளைகள் இருவருமே பதில் அளித்து விட்டு தங்கள் தங்கள் வேலைகளுக்கு சென்றுவிட்டார்கள்.
அவ்வாறே பெண்பிள்ளைகளின் பதிலும் அமைந்திருந்தது. துக்கம் விசாரிக்க வந்த ஆட்களிடம் எனக்கொரு துக்கமும் இல்லை என நேர்மையாக கனகராணி சொன்னது அன்று அவரவர் வீட்டு மாலைத் தேநீருக்கு நொறுக்குத் தீனியாகியது.
சாதகங்கள் பார்த்து, குலம், கோத்திரம் விசாரித்து, அம்மி மிதித்து, பகலிலேயே கண்ணுக்குத் தெரியாத அருந்ததி நட்சத்திரத்தைப் பார்த்து ,பிணைக்கப்பட்ட உறவு நான்கு பிள்ளைச் செல்வங்களைக் கொடுக்க இறுதியில் டென்மார்க்கின் குடும்ப நீதிமன்றத்தில் எல்லாமுமாக இருந்த உறவு எதுவுமே இல்லாது போய், கனடா செல்வதற்காக கோலாலம்பூரில் தங்கியிருந்த ஒன்றுவிட்ட தம்பிக்காரன் ஒருவன் கொள்ளிவைக்க எல்லா ஆட்டங்களும் அடங்கிப் போய் விட்டது.
அடுத்த நான்கு ஆண்டுகளும் அதிவிரைவாக ஓடியது போலவே இருந்தது மூத்தவளை மாப்பிள்ளை வீட்டார் தாங்களாகவே பெண் கேட்டு வந்த பொழுதுதான் அவளை நன்றாகவே வளர்த்திருக்கின்றேன் என கனகராணியின் மனம் பெருமைப்பட்டது. தகப்பன் இல்லாத பிள்ளை என அவள் எந்தக் குறையும் விட்டதில்லை.



பகல் முழுக்க ஆடை தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றில் வேலை பார்த்தாலும் .மாலையில் இரண்டு பாடசாலைகளில் துப்பரவு வேலையும் பிரத்தியேகமாக வீட்டில் வைத்து திருமணங்களுக்கு கேக் மற்றும் பலகாரங்கள் செய்து கொடுத்தும் வருமானத்தை சமன் செய்து கொண்டாள். இருவரின் வருமானத்தில் வளர்ந்த பிள்ளைகளுக்கு எந்தக் குறைவும் இன்றி தன் ஒருத்தியின் வருமானத்தினால் ஈடுகட்டி வளர்த்து வந்தாள்.
துப்புரவு வேலைகளுக்கு மகன்மார் உதவி செய்கின்றோம் என முன்வந்தாலும் அவர்களின் படிப்புக் குழம்பிவிடும் என அவர்களை அனுமதிக்கவில்லை. அதுவே அவர்கள் நல்ல பெறுபேறுகள் எடுக்கவும் நல்ல வேலையில் அமரவும் காரணமானது.
விவாகரத்து அவளுக்குப் பல சுமைகளையும் பொறுப்புகளையும் கொடுத்திருந்த போதும் அவளுக்கு பல சுதந்திரங்களைக் கொடுத்திருந்ததை அவளும் பிள்ளைகளும் வீட்டில் உணர்ந்தார்கள் இராணுவ ஆட்சியில் இருந்து ஒரு நாடு விடுதலை பெற்றதுபோல.
வீட்டினுள் தளபாடங்கள் அங்கிங்கு கொஞ்சம் விலகி இருந்தால், படுக்கை அறையின் விரிப்பு கொஞ்சம் கசங்கி இருந்தால் , பிள்ளைகளின் பெறுபேறுகள் சற்றுக் குறைந்திருந்தால், சாப்பாட்டில் கொஞ்சம் உப்புப் புளிகாரம் கூடிக் குறைந்து இருந்தால், இடி அமீனுக்கும் முசோலினிக்கும் அவள் பதில் சொல்லியே ஆகவேண்டி இருந்தது.
கோடை கால விடுமுறை,குளிர் கால விடுமுறை, பஸ்கா பண்டிகை விடுமுறை, இப்படிப்பட்ட விடுமுறைகளுக்காக டென்மார்க்கில் உள்ள பெற்றாரும் பிள்ளைகளும் காத்திருந்த பொழுது கனகராணியும் பிள்ளைகளும் அந்த விடுமுறைகள் வந்திருக்கவே வேண்டாம் என நினைத்துக் கொள்வார்கள். அந்தளவுக்கு வீட்டில் அடக்குமுறை தலைவிரித்தாடும். மேலாக விடுமுறைக்கு செலவழிக்க உள்ள பணத்தையும் ஏதோ ஒரு சாட்டுச் சொல்லி,

சிறுகதை



ஒரு தடவை வாழுற வாழ்வை எனக்கு துரோகம் செய்யாமல் வாழ நான் ஆசைப்படுகிறன். ஒரு பெண்ணின் மனநிறைவு என்றாலும் சரி உடல் நிறைவு என்றாலும் சரி எல்லாத்தையும் நான் உணர்ந்தது இந்த ஆறு மாதத்தில தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் உறவினர்கள் யாருக்காவது இலங்கைக்கு அனுப்பி விடுவார்.
செந்தில்நாதனுக்கு டென்மார்க் வந்து ஆறாவது வருசத்தில் பக்டறியில் ஏற்பட்ட ஒரு விபத்தில் முள்ளந்தண்டில் ஏற்பட்ட சிறிய வளைவு காரணமாக இளவயதுக்குரிய மாதாந்த பென்சனும் கூடவே காப்பீட்டுத் தொகையாக பெரிய தொகைப் பணமும் கிடைத்தது.
அது கூட அவரின் நண்பர் ஒருவர் மூலம் கனகராணிக்கு தெரியவந்ததுதான். இருபது வருட தாம்பத்திய வாழ்க்கையில் எதனையும் கனகராணியுடன் பகிர்ந்து கொண்டதில்லை படுக்கையைத் தவிர.
டென்மார்க்கின் நான்கு பருவநிலைகளுடன் போட்டிபோட்டுக் கொண்டு கோடைகாலம் வரும் பொழுது மணிக்கூட்டின் சிறிய முள்ளை முன்நோக்கியும், பனிக்காலம் வரும் பொழுது அதே முள்கம்பியை பின்நோக்கியும் நகர்த்திக் கொண்டு கனகராணி கிழமையில் 37 மணிநேரம் ஓடிஓடி உழைத்த வருமானத்துக்கு கிட்டத் தட்ட சமமான வருமானம் இளவயதுப் பென்சனாலும் காப்பீட்டுத் தொகைக்கு வங்கி அளித்த வட்டிப் பணத்தாலும் செந்தில்நாதனுக்கு கிடைத்தது.
அதைவிட ஊர் முழுக்க கட்டிய சீட்டுக்களால் வரும் கழிவுப் பணமும் வட்டிக் காசுகளும்,வட்டிக்கு வட்டியால் வந்த வருமானமும் அவரை ஒரு செல்வச் சீமானாக அந்த நகரம் மதிக்கக் காரணமானது.
காலை உணவை உண்டபடியே தொலைக்காட்சியில் இராசிபலன், பின் பத்துமணிபோல் நகரத்தைச் சுற்றி ஒரு நடைப்பயிற்சி , மதியம் வேலைக்குப் போக முதல் கனகராணி சமைத்து வைத்த உணவு ,பின்பு ஒரு குட்டித் தூக்கம்,மாலைத்தேநீர் பிஸ்கட்டுடன் தொடர்ந்து தொலைக்காட்சி நாடகங்கள் ,இரவு உணவு ,படுக்கை இரவு ஒன்பது அல்லது ஒன்பது முப்பதுக்கு என தன் வாழ்க்கையை தானே சொர்க்கபுரியில் இருப்பதுபோல அமைத்துக் கொண்டார்.
இடையிடையே தொலைபேசியில் ஊர்த்துழவாரங்கள்,வட்ஸ் அப், வைபர் அது இது என.
சிலவேளை 'கிளுக்'கென தானே சிரித்து தானே மகிழ்ந்து கைத்தொலைபேசியைக் காதலித்துக் கொண்டிருப்பார்.
அந்தவேளைகளில் தான் பிள்ளைகளுக்கும் கனகராணிக்கும் நிம்மதி.
அவர் தூங்கியபின்புதான் பிள்ளைகளும் சரி .கனகராணியும் சரி தாங்கள் விரும்பியவற்றைத் தொலைக்காட்சியில் பார்க்கமுடியும்.
"சகிப்பின் உச்சகட்டத்துக்கு வாழ்நாள் சாதனையாளர் பரிசுகொடுத்தால் அது உனக்குத் தானம்மா" என தகப்பன் வீட்டில் இல்லாதவேளையில் பிள்ளைகள் தாயாரைக் கலாய்ப்பார்கள்.
பிள்ளைகளின் பரீட்சைப் பெறுபேறுகள் சற்றுக் குறைந்தாலும் சரி ஏதாவது அவர்கள் குழப்படி செய்தாலும் சரி,"என்ன பிள்ளை வளர்ப்பு வளர்க்கின்றாய்?"என கனகராணியையே திட்டித் தீர்ப்பார்.
வாழ்க்கை ஓடிக் கொண்டுதான் இருந்தது.

(11 ஆம் பக்கம் பார்க்க)



# யாழ்ப்பாண நகரத்தின் அடையாளங்களை அழித்தல்

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொவிட் 19இற்கு பிற்பட்ட பிரான்ஸ் முதலான நாடுகள் , அதனை முகாந்திரமாக வைத்து நகரத்துள் வரும் வாகனங்களை ஒழுங்குபடுத்தும், கட்டுப்படுத்தும் நிரந்தர செயற்பாடுகளை நோக்கிச் செல்ல, நாமோ தெருக்களை அகலித்தலையே வாழ்வின் இலக்காகக் கொண்டு 'உங்கள் படுக்கை அறை வாசல் மட்டும் உங்கள் வாகனத்திலேயே செல்ல வைக்கிறோம்' என்கின்ற மாதிரித் தொழிற்படுகின்றோம். அவ்வகையில் பண்பாட்டு அடையாளம், வரலாற்றுத் தடயத்தை காப்பாற்று தல், நகரத்தின் தனிச்சிறப்படையாளத்தை தக்கவைத்தல் என்பதைவிட இடித்தழித்து பெருப்பித்தலே ஞானம் என்றவாறு தொழிற்படுவது ஏன்?

இவையெல்லாம் இல்லாது சிறுபான்மைச் சமூகங்கள் போகவேண்டும் என்று விரும்பும் பண்பாட்டுப் படுகொலைச் செயல்களுக்கு இதன் மூலமாக தெரிந்தும் தெரியாமலும் நாங்களும் முகவர்கள் ஆகுகின்றோமா?

'பண்பாட்டு அடையாளமற்ற அபிவிருத்திகள் அபிவிருத்திகளேயல்ல' என்றுதானே இன்றைய அபிவிருத்திப் பொருளியலாளர்கள் கூறுகிறார்கள்.

அந்தக் கூற்று முட்டாள்தனமானது என்று எங்கள் யாழ்ப்பாணத்து அறிஞர் பெருமக்கள் நினைக்கிறார்களா?

உண்மையில்நகர வீதிகளின் மிகமுக்கியமான பிரச்சினைகள் நகரக்கட்டடங்களுக்கான விதிமுறைகள் ஒழுங்காகப் பின்பற்றப்படாமையால் உருவானவையாக இருப்பதைக் காணலாம். அதற்குப் பல்வேறுபட்ட காரணங்கள் இருக்கலாம். ஆனால், அதனை எல்லாம் ஒழுங்குபடுத்திக் கையாளுவதன் மூலம்தான் இதனைச் செய்ய முடியும்.

ஆஸ்பத்திரி வீதியில் - குறிப்பாக ஆஸ்பத்திரிக்கு முன்பாக உள்ள தெருத் துண்டை உதாரணத்துக்கு எடுத்துக் கொண்டால், அந்தப் பக்கத்தின் பாதசாரிகளுக்கான நடைபாதைக்கான இடம், அப்பக்க கடைகளால் நிரந்தரமாகவோ அல்லது தற்காலிகமாகவோ பல இடங்களில் குழப்பப்பட்டிருப்பதைக் காணலாம். ஆனால் அந்த மாதிரியான விடயங்களில் பல்வேறு காரணங்களுக்காக நாம் வாளாதிருக்கிறோம் என்பதை மறுக்க முடியுமா?. அவற்றிற் தலையிட எங்களிடம் சட்டங்கள் இல்லையா அல்லது அவற்றை நடைமுறைக்குக் கொண்டுவர எங்களிடம் தற்துணிவு இல்லையா? நாங்கள் அனைவரும் சேர்ந்து ஒரு முதுநக ரத்தின் அடையாளங்களை அழிப்பதன் மூலம் எமது வரலாற்று தடயங்களை, பண்பாட்டுக் கூறுகளை அழிப்பதிற் பங்குகொண்டு வரலாற்றுக் கையறுநிலையை விரைந்து உருவாக்க உள்ளோம் என்பதை ஏன் உணர மறுக்கிறோம். அண்மையில் மொறட்டுவப் பல்கலைக்கழகத்தின் கட்டடக்கலை மாநாட்டுக்காக சமாப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரைகளின் தொகுதியைப் (2019) பார்க்க நேர்ந்தது. அதில் ஒரு கட்டுரை மாநகர சபை முதலியவற்றின் பாராமுகமான செயற்பாடுகளுக்கு நடுவே ஆஸ்பத்திரி வீதியின் கட்டட முகப்புக்கள் முதலானவை யாழ்ப்பாண நகரத்தின் முகத்தைச் சீரழிக்கின்ற முறை பற்றியும், அது எவ்வாறு அதன் நகரவாக்கத்தை மிகக் குழப்பமான திசையில் எடுத்துச் செல்கிறது என்பது பற்றியும் பேசி இருந்தது. ஆனால் இவ்வகைப்பட்ட ஆய்வுகள் மற்றும் ஆய்வாளர்களது கருத்துக்களை ஆற்றல்களை நாம் பயன்படுத்த விரும்புவது இல்லை? - அவை தொடர்பில் நமக்கு மாற்றுக் கருத்துக்கள் இருக்கலாம் அல்லது ஏற்புடைமை இல்லாது கூட இருக்கலாம். ஆனால், 'யாரையும் எக்கருத்தையும் எக்காரணங்கொண்டும் செவிமடுக்க மாட்டோம்' என்ற எமது சுய முனைப்பின் அடிப்படை யாது? என்பது எனக்கு எப்போதும் புரிவதே இல்லை.


உதாரணமாக, வேம்படிச்சந்தியிலிருந்து - சத்திரத்தைச்சந்திவரை ஆஸ்பத்திரி வீதியைப் பிரதானமாக எடுத்துக் கொண்டால், அதுவொரு குறுந்தூரம். அந்தக்குறுந்தூரத்திற்கு சமாந்தரமாக பல வீதிகள் அல்லது கிட்டிய இடைவெளியில் உள்ளன. அவற்றைப் பயன்படுத்தி இதன் நெருக்கடியை கையாள எங்களிடம் நகரத் திட்டமிட லாளர்கள் இல்லையா? அல்லது பாரஊர்த்திகள் பொருட்களை எடுத்துவருதற்கான நேரக்கட்டுப்பாட்டை கொண்டுவரமுடியாதா? அவை பின்னிராவில்தான் குறித்த வீதியைப் பயன்படுத்தலாம் என்ற விதிமுறைகள் உலகத்தில் எல்லா இடங்களிலும் தானே உள்ளன?

உலகத்தில் பல நகரங்களில் வாகனங்களைக் கொண்டு செல்லவே அனுமதிக்கப்படாத அல்லது நடந்து செல்வதற்கு மட்டுமே அனுமதிக்கப்பட்ட வீதிகள் உள்ளன. இவ் வீதிகளை அவர்கள் அதன் பண்பாட்டு வரலாற்று முக்கியத்துவம் கருதி அல்லது அதனைத் தமது மரபுரிமைத் தெருவாக நிலைநிறுத்தி பாதுகாப்பதற்காக இத்தகைய செயற்பாடுகளை மேற்கோண்டுள்ளார்கள். இதற்கப்பாலும் யாழ்ப்பாணத்திற்கான பெரிய ஆஸ்பத்திரிக்கு முன்பாகத்தான் இதனைச் செய்ய முற்படுகிறோம். தெருக்களை மேலும் பெருப்பித்து ஆஸ்பத்திரிக்குக் கிடைக்க வேண்டிய அமைதியை குழப்புகின்றோம். அது மட்டுமில்லாமல் ஆஸ்பத்திரியும் இவ்விடத்திலேயே வீங்கிச் செல்கிறது. இவற்றையெல்லாம் கவனத்திலெடுத்த தொகுக்கப்பட்ட ஒரு பார்வைக் கூடான வலிமை மிக்க திட்டமிடலை ஏன் செய்கிறோமில்லை? இது கடைசியாக பசுக்கன்றின் தலையில் மாட்டிய பானையை எடுத்த 'கன்றுமில்லை, பானையுமில்லை' என்ற கதையாகத்தான் முடியப்போகிறதா?

நகர பிதா அவர்களே, இந்தக் கடிதம் தங்களைக் குற்றஞ்சாட்டவோ அல்லது உங்கள் தன்முனைப்பைத் தூண்டி சினங்கொள்ள வைக்கவோ அல்ல. ஒரு நகரபிதாவோடு உரையாட அந்தநகரத்தின் ஒரு குடிமகனுக்குள்ள உரிமை சார்ந்தது மட்டுமே. ஆனால், என் வயது அனுபவத்தில் இக்கடிதம் பெரும்பாலும் கிணற்றிற் போடும் ஒரு கல்தான் என என் மனஞ் சொல்கிறது. ஆனாலும் துறைசார் சிந்தகனைகள் , கூட்டு உழைப்புக்கள் - உரையாடல்கள் மூலமாக ஆரோக்கியமான நிலைவரங்களை உருவாக்கலாம் என்ற நம்பிக்கையோடும், ஏற்கனவே கட்டமைக்கப்பட்ட பண்பாட்டுப் படுகொலைகளுக்கு உட்பட்ட சமூகத்தில் நாமும் நம்மை அறியாமலே அதில் பங்குபற்றி விட்டோம் என்ற காலஞ் சென்று வரும் ஞானத்தால் (சுடலை ஞானம்?) நாளை நாம் எல்லோரும் அவதிப்படாமல் இருக்கவேண்டியும் இதனை எழுதுகிறேன்.

**உண்மையில் நகர வீதிகளின் மிக முக்கியான பிரச்சினைகள் நகரக்கட டடங்களுக்கான விதிமுறைகள் ஒழுங்காகப் பின்பற்றப்படாமையால் உருவானவையாக இருப்பதைக் காணலாம். அதற்குப் பல்வேறுபட்ட காரணங்கள் இருக்கலாம்.**

## எண்களை இணைத்து படத்தை முழுமை செய்வோம்



## தேவை



**தூ**ரத்தேயிருந்து பறந்து வந்து அந்தப் பகுதியில் இரைதேட முற்பட்டன பறவைகள். அவற்றில் ஒன்று அந்தக் கோயிலின் உயர்ந்த கோபுர உச்சியில் அமர்ந்து கொண்டது.

– மற்றது கீழே உள்ள குப்பை மேட்டை துழாவத் தொடங்கியது. கோபுர உச்சிக் காகம் குப்பை மேட்டுக் காகத்தை கத்திக் கத்தி அழைத்தது.

"இங்கே வா...... இங்கிருந்து பார்க்க இந்த நகரமே தெரிகிறது"

குப்பை மேட்டுக் காகம் அலட்சியமாக அண்ணாந்து பார்த்தபடியே கூறியது


"...சீ..... நான் அங்கு வரமாட்டேன். இங்கிருந்து பார்க்க எனக்குத் தேவையான உணவு தெரிகிறது..!"

## பொது அறிவு

1. கறுப்பு முட்டை இடும் உயிரினம்
   **தவளை**
2. நித்திரையே கொள்ளாத உயிரினம்
   **எறும்பு**
3. நிறத்தைப் பார்க்கும் சக்தியுடைய பறவை
   **ஆந்தை**
4. நீரை அருந்தாத நீர்வாழ் உயிரினம்
   **டொல்பின்**
5. நுரையீரல் இல்லாத உயிரினம்
   **எறும்பு**

**வி.ஹறிஸ்**, தரம் 1
யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை.

கீழே இருக்கும் கால்களில் பன்றியின் கால் எது?



## பிஞ்சு தூரிகைகள்




வ.மதுஜா
தரம்-7
யா/ இந்து மகளிர் கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தின் தூரிகை ஓய்வெடுத்து ஓராண்டு!



கு.குகதாசன்
(B.F.A (Art & Design), Dip in Edu)
ஆசிரியர், யா/அராலி இந்துக்கல்லூரி, யாழ்ப்பாணம்.

## கலாபூசணம் ஓவியர் ஆசை இராசையா
## (16.08.1946 - 29.08.2020)

ஈழத்து இயற்பண்புவாத ஓவியச் செல்நெறிகளில் தனித்துவமிக்கவராக இணையற்ற கலைத்துவ ஆளுமையைக் கொண்ட கலைஞராகத் தன்னை அடையாளப்படுத்தி நின்றவர் ஓவியர் ஆசை இராசையா . யாழ் மண்ணில் வளமிக்க 'அச்சுவேலி' யில் 16.08.1946 இல் பிறந்த இவரது தந்தை ஆசை, அமைதியும், தர்ம சிந்தனையும் நேர்மை வழிப்போக்கும் கொண்டவர் - தாயார் செல்லம்மாவும் தந்தை வழிவாழும் பொறுப்புணர்வு மிக்க குடும்பப் பெண் - தையல் கலையில் தேர்ந்தவர். மகன் இராசையாவின் ஓவியத்திறன் இயல்பிலேயே இளவயதிலேயே வேரூன்றி வளரத் தொடங்கியது. விடாமுயற்சியும், இடையறா உழைப்பும் கொண்ட அச்சுவேலிக் கிராமத்து மக்களின் வாழ்வோடு கலைத்தாகமும் இரண்டறக் கலந்தது. எனவே அந்தக் கலைத்தாக வாழ்வோடு இராசையாவின் நெருக்கமான ஒட்டுதல் சாத்தியமாகிப் போனதில் வியப்பில்லை. 'கலை' பொருளாதார எற்றத்துக்கு உதவாது என்பதே கிராமத்துச் சித்தாந்தம்.

பாடசாலை வாழ்வு முடிந்ததும் அவரது கலைத்தாகம், வேகமாக கொழும்பு நுண்கலைக் கல்லூரியை நோக்கித் தள்ளியது. அது அவரது வாழ்க்கையின் திருப்பு முனையை ஏற்படுத்திய தேடல் காலமாகியது. அவருள்ளிருந்த ஓவியக் கலைஞன் புதிய பரிணாமத்தை நோக்கிய வளர்ச்சியில் தன்னை இனம் காட்டத் தொடங்கிய காலம் அதுதான்.

தேடல், ஆய்தல், கற்றல், அறிதல் என விரிந்து பரந்த தளத்தில் அவர் 'ஆத்மா' வின் கலையார்வம் விஸ்வரூபம் கொள்ளத் தொடங்கியது. அந்த விஸ்வரூப வளர்ச்சி பிரமிக்கவைக்கும் வகையில் வளர்ந்து வந்து இவரை ஒரு மகா கலைஞனாக்கியது. பல கண்காட்சிகளில் இவரது ஓவியங்கள் அவரது தனித்துவக் கலை ஆளுமையை அடையாளப்படுத்தின.

பரிசுகள், விருதுகள், பாராட்டுக்கள், கௌரவங்கள் என அவருக்கு கிடைத்த தேசிய அங்கீகாரங்கள் பல. அனைத்தையும் மௌனமாக ஏற்றுக்கொண்டு அமைதியாகத் தன்னியல்பு மாறாத கலைஞனாகத் தன்னை நிலைநிறுத்திக் கொண்டார் இராசையா.

குடத்துள் விளக்காக அவர், சுயவிளம்பரங்களைப் புறந்தள்ளி ஒடுக்கிக்கொள்பவராக இருந்தாலும் அவரது கலைப் படைப்புகளின் 'பிரமாண்டம்' அவரை குன்றின் மேல் விளக்காக சுடர்விடவைத்தன.

அச்சுவேலி மத்திய கல்லூரியின் பழைய மாணவரான இராசையா, ஓவியத்தின்பால் கொண்டிருந்த ஆர்வத்தினால் பாடசாலைக் காலத்தில் ஓவியப் பாடத்துக்கே அதிக மதிப்பெண்களைக் பெற்றதாகக் கூறியுள்ளார். பாடசாலைக் காலத்தில் அவருக்குச் சித்திர பாடத்துறையில் போதிய வழிகாட்டல் கிடைக்கவில்லை. எனினும் ஓவியப் பாடத்தில் மேற்படிப்பைத் தொடர்வதென்பதில் சமூகம் அக்கறை காட்டாத காலகட்டத்தில் வீட்டாருடைய எதிர்ப்பையும் மீறிக் கொழும்பு நுண்கலைக் கல்லூரியில் (College of Art and Craft) அனுமதி பெற்று 1966 தொடக்கம் 1969 வரையான காலப்பகுதியில் ஓவிய நுட்பங்களைப் பயின்றார்.



இலங்கை முத்திரைப் பணியக ஓவியக் குழுவில் ஓவியர் இராசையா இடம்பெற்றமை அச்சுவேலிக்குப் பெருமை தரக் கூடிய அம்சமாகும். ஓவியர் ஆசை இராசையாவின் படைப்புக்களில் வெளிக்காட்டப்படும் உருவங்கள் யாழ். மண் சார்ந்ததாகவே இருக்கின்றன.



ஸ்கெட்ச் (Sketch) , பிரதிமை (Portrait) பண்ணுதல் என எதிலும் தேர்ந்தவராக விளங்கினார். தைல வர்ணம், நீர் வர்ணம், பஸ்டல் என ஓவியக் கலைக்குரிய எவ்வூடகத்தையும் நேர்த்தியாகக் கையாளும் ஆளுமை அவருக்கு உண்டு. நிலக்காட்சி ஓவியங்களை வரைவதில் தனித்துவம் பெற்று விளங்கினார். அச்சுவேலிப் பிரதேசத்தின் இயற்கை அழகு, வல்லைப் பிரதேச நீரோடைக் காட்சிகள், பனைகளும் தாளம் பற்றைகளும் நிரம்பிய காட்சிகள் என இளமையில் தான் தரிசித்த ஊரின் அழகை நிலக்காட்சி ஓவியங்களாக வரைந்தார். இந்த ஓவியங்கள் பல இலட்சம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன. இவர் வரைந்த பிரதிமை (Portrait) ஓவியங்களும் பிரபலமானவை. யாழ். பல்கலைக் கழகத்தில் உள்ள பேராசிரியர் சு. வித்தியானந்தன், பேராசிரியர் மகேஸ்வரன் ஆகியோரின் மெய்யுருக்களும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் உள்ள பசுபதிச் செட்டியார், நாகலிங்கச் செட்டியார் மற்றும் இந்துவின் அதிபர்களது மெய்யுருக்களும் இவரது கைவண்ணத்தில் உருவானவையே. 1971 இல் வேலணை மத்திய கல்லூரியில் சித்திரபாட ஆசிரியராக நியமனம் பெற்ற இராசையா, பலாலி ஆசிரிய கலாசாலையில் பயிற்சி பெற்று 1975 தொடக்கம் 1983 வரை கொழும்பு றோயல் கல்லூரியில் பணியாற்றினார். இனக்கலவரத்தின் பாதிப்புக்கள் இவரையும் விட்டுவைக்கவில்லை. இதனால் தமிழ் மண்ணிலேயே வாழ்வது என்ற முடிவுடன் உறுதி பூண்டு வாழ்ந்து வந்தார்.

இலங்கை முத்திரைப் பணியக ஓவியக் குழுவில் ஓவியர் இராசையா இடம்பெற்றமை அச்சுவேலிக்குப் பெருமை தரக் கூடிய அம்சமாகும். இலங்கை அரசின் எட்டு முத்திரைகளுக்கான ஓவியங்களை இவர் வரைந்துள்ளார். சேர். பொன். இராமநாதன், சேர். பொன். அருணாசலம், சேர். வைத்திலிங்கம் துரைசுவாமி, சேர்.ஜோன் கொத்தலாவல, ஜோர்ஜ் ஈ.டி. சில்வா, ஈ.பி. மல்லசேகரா ஆகியோரது மெய்யுருக்களும் 'தவலம்' என்ற மலையகப் போக்குவரத்து மார்க்கம், இலங்கையின் முதற் புகைவண்டி ஓவியம் என்பனவுமே அவையாகும்.

ஓவியர் ஆசை இராசையாவின் படைப்புக்களில் வெளிக்காட்டப்படும் உருவங்கள் யாழ். மண் சார்ந்ததாகவே இருக்கின்றன. இவரது முதலாவது தனிநபர் ஓவியக் கண்காட்சி 1985 இல் அச்சுவேலி புனித திரேசா மகளிர் கல்லூரியில் இடம்பெற்றது.

ஓவியத்துறை சார்ந்து பல பட்டங்களையும் விருதுகளையும் ஆசை இராசையா பெற்றுள்ளார். நல்லூர் பிரதேச செயலகம் வழங்கிய கலைஞானச் சுடர் (2009), வடமாகாண ஆளுநர் விருது (2009), கலா பூஷணம் விருது (2010), கொழும்புத் தமிழ்ச் சங்க விருது (2012), ஞானம் சஞ்சிகை விருது (2012), எழுத்தாளர் ஊக்குவிப்பு மையத்தின் 'தமிழியல் விருது' (2013), திருமறைக் கலாமன்றம் வழங்கிய கலைஞானபூரணன் விருது (2014) என்பன குறிப்பிடத்தக்கனவாகும்.

யாழ். பல்கலைக்கழகச் சித்திரமும் வடிவமைப்பும் துறையில் கற்கும் மாணவர்களுக்கு வருகை விரிவுரையாளராகவும் பணியாற்றினார். ஆசை என ஆன்றோரால் ஆசையாக அழைக்கப்படும் இராசையா தரமான நூல்களின் வடிவமைப்பாளராகவும் அட்டைப்பட ஓவியராகவும் நிலவுருக்கள் மற்றும் மெய்யுருக்களை வரைவதிற் புகழ் பெற்றவராகவும் இறுதிவரை தனது கலைச்சேவையைத் தொடர்ந்தவர்.

ஓவியர் ஆசை. இராசையா தனது ஓவியங்கள் பற்றியதான "விம்பம்" என்ற நூலினையும் வெளியிட்டிருந்தார். சுகவீனம் காரணமாக அவர் கடந்த வருடம் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வீடுதிரும்பியிருந்த போதும் , மீண்டும் சுகவீனம் காரணமாகத் தெல்லிப்பழை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு , 29.08.2021 அன்று இறைபதமடைந்தார்.

ஈழத் தமிழ்ச் சமூகம் பல்வேறு தளங்களிலும் தடம் பதித்த தனது ஆளுமைகளைத் தொடர்ச்சியாக இழந்து கொண்டிருக்கின்ற துயர்மிகு காலத்தில் வாழ்கின்றோம். இந்தத் தொடர் இழப்புக்களின் வரிசையில் கடந்த ஆண்டு எமது மண்ணின் மூத்த ஓவியர் ஆசை இராசையாவையும் இழந்து விட்டோம். கலையுலகில் நிரப்பப்பட முடியாத இடைவெளியை விட்டு ஆசை. இராசையா எம்மை விட்டுப் பிரிந்துள்ளாரெனினும், வர்ணங்களுள்ளவரையும் தூரிகைகள் இயங்கும் வரையும் இவ் அற்புத கலைஞனின் பெயரை அவை மானசீகமாக உணர்த்தியவண்ணமே இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியன்



# சந்திக்கு வந்த சண்டை!!



ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான கூட்டணி அரசின் பிரதான பங்காளிக்கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கும், தோழமைக்கட்சிகளுக்குமிடையில் மீண்டும் மோதல் ஏற்பட்டுள்ளது. கூட்டணிக்குள் இதெல்லாம் சகஜமப்பா எனக்கூறி சமாளிப்பதற்கு மூத்த உறுப்பினர்கள் முற்பட்டாலும், சண்டை என்பது சந்திவரை வந்துவிட்டது.

அரசமைப்பின் 20ஆவது திருத்தச்சட்டத்தில் ஆரம்பித்த மோதல் கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனைய விவகாரத்தில் வலுப்பெற்றது. தற்போது கூட்டுக் கடிதத்தால் 'சமர்' உச்சம் தொட்டுள்ளது என்றே கூறவேண்டும்.

கொரோனா வைரஸ் பரவல் தாண்டவமாடி வருவதால் நாட்டை முடக்குமாறு பல தரப்பினரும் அரசிடம் தொடர் கோரிக்கைகளை விடுத்துவந்தனர். ஆனால் கடும் கட்டுப்பாடுகளை விதிப்பதற்கும், நாட்டை முடக்காதிருக்கவும் அமைச்சரவைக் கூட்டத்தில் ஏகமனதாக முடிவெடுக்கப்பட்டிருந்தது.

எனினும் மறுநாள் ஆளுங்கூட்டணியிலுள்ள 10 பங்காளிக்கட்சிகள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு அவசர கடிதமொன்றை அனுப்பின. நாட்டை இரு வாரங்களுக்காவது முடக்குமாறு அதில் பிரதானமாக வலியுறுத்தப்பட்டிருந்ததுடன், ஊரடங்கின்போது முன்னெடுக்கப்படவேண்டிய 7 விடயங்களும் சுட்டிக்காட்டப்பட்டிருந்தன. அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் விமல்வீரவன்ஸ, உதய கம்மன்பில, வாசுதேவ நாணயக்கார ஆகியோரும் குறித்த கடிதத்தில் கையொப்பமிட்டிருந்தனர். இதனால் கடுப்பான ஜனாதிபதி கோத்தா, மூன்று அமைச்சர்களுக்கும் செம 'டோஸ்' கொடுத்துள்ளார் எனவும், அமைச்சரவைக் கூட்டுப் பொறுப்பை மீறும் வகையில் செயற்படக்கூடாது என கடுந்தொனியில் கர்ஜித்துள்ளார் எனவும் தகவல்கள் வெளியாகின.

இதற்கிடையில் மகாநாயக்க தேரர்களும் கூட்டறிக்கை விடுத்து 'லொக்டவுனை' வலியுறுத்தியதால் 10 நாட்களுக்கு நாட்டை முடக்கும் தீர்மானத்தை ஜனாதிபதி எடுத்தார்.

ஆனாலும் பங்காளிகளுக்கிடையிலான மோதல் தணியவில்லை. தோழமைக்கட்சிகளின் செயற்பாடு கீழ்த்தரமான அரசியல் நகர்வாகும் என சாடும் மொட்டுக் கட்சி உறுப்பினர்கள், சர்வதேசத்தின் நிகழ்ச்சி நிரலுக்குள் அவர்கள் சிக்கிவிட்டனர்போல் தெரிகிறது எனவும் சாடியுள்ளனர்.

வழமையாக சர்வதேசச் சூழ்ச்சி, சதி, பிடி போன்ற விடயங்களையெல்லாம் விமல், வாசு, கம்மன்பில போன்றவர்கள்தான் அடிக்கடி அரசியல் களத்தில் உபயோகிப்பார்கள். ஆனால் அவர்களே சர்வதேசப் பிடிக்குள் சிக்கிவிட்டனர் என மொட்டுக் கட்சி உறுப்பினர்கள் விமர்சிப்பது, கூட்டணிக்குள் ஏற்பட்டுள்ள மோதலின் பாரதூரத்தன்மையை வெளிப்படுத்துவதாக சுட்டிக்காட்டப்படுகின்றது.

நாட்டை முடக்குவதில்லை என தீர்மானம் எடுக்கப்பட்ட அமைச்சரவைக் கூட்டம் இரவு 10.10 வரை இடம்பெற்றுள்ளது. இறுதிக் கட்டத்தில்தான் அந்த முடிவு எடுக்கப்பட்டது எனவும், 9 மணியளவில் விமல், வாசு, கம்மன்பில ஆகிய மூவரும் வேறொரு கூட்டத்துக்கு சென்றுவிட்டதால் இது தொடர்பில் அவர்களுக்கு தெரியாது எனவும் சிலர் கூறினாலும், கூட்டம் முடியும்வரை அவர்கள் இருந்துள்ளனர் என மற்றும் சிலர் தெரிவிக்கின்றனர்.

# 'மெகா' கூட்டணி தாமதம்!

எதிர்க்கட்சிகளை ஒன்றிணைத்து பலமான பரந்துபட்ட கூட்டணியை உருவாக்குவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டிருந்தாலும் கொரோனாத் தொற்றுக் காரணமாக அந்த முயற்சி தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது என அறியமுடிகின்றது. எதிரணிகளை ஒன்றிணைக்கும் முக்கியமான முதற்கட்ட கூட்டமொன்று சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவர் முன்னாள் சபாநாயகர் கருஜயசூரியவின் ஏற்பாட்டில் ஜூலை 17 ஆம் திகதி கொழும்பில் நடைபெற்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இந்தக்கூட்டத்தில் பங்கேற்றிருந்தது. இணைந்து பயணிப்பதற்கான சாத்தியப்பாடுகள் மற்றும் சமகால அரசியல் விடயங்கள் தொடர்பில் இந்தக்கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டது. தொடர் சந்திப்புகளை நடத்துவதற்கும் திட்டமிடப்பட்டிருந்தது. இதற்கிடையில் கொரோனா வைரஸ் தாண்டவமாடிவருவதால் வைரஸ் தொற்றிலிருந்து மக்களையும் நாட்டையும் மீட்பதற்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என்ற நோக்கில், கூட்டணி அமைக்கும் முயற்சி தற்காலிகமாகப் பிற்போடப்பட்டுள்ளது.







# சஜித்தின் திட்டம்!

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவை சந்தித்து பேச்சு நடத்துவதற்கு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளது. இது தொடர்பில் ஜனாதிபதிக்கு கடிதமும் அனுப்படவுள்ளது.

கொரோனா நெருக்கடி நிலைமையைச் சமாளிப்பது பற்றியும், அதற்குத் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுப்பது பற்றியும் ஆராய்வதற்கு சர்வகட்சி கூட்டத்தை கூட்டி, சர்வகட்சிப் பொறிமுறை ஊடாக தேசிய வேலைத்திட்டத்தை முன்னெடுக்குமாறு ஐக்கிய மக்கள் சக்தி கோரிக்கை விடுத்திருந்தது.

எனினும், ஜனாதிபதியின் தரப்பில் இருந்து அதற்கு உரிய பதில் வழங்கப்படவில்லை. இந்த நிலையிலேயே சந்திப்புக்கான நேரம் கோரி கடிதம் அனுப்பப்படவுள்ளது. இதற்கு முன்னர் அதாவது கொரோனா 2ஆவது அலையின்போது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார ஆகியோர் ஜனாதிபதியைச் சந்தித்து பேச்சு நடத்தியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

அதன்பின்னர் சந்திப்புத் தொடரவில்லை. இந்நிலையிலேயே பேச்சை தொடர்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

# மஹிந்தவின் கட்டளை

ஜனநாயகத்தின் காவலன், நீதியின் குரல், இனவாதச் சேற்றில் முளைத்த வெண்தாமரை என்றெல்லாம் போற்றப்பட்ட முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர கொரோனா வைரஸ் தொற்றால் கடந்த 24 ஆம் திகதி உயிரிழந்தார். சுகாதார நடைமுறைகளின் பிரகாரம் அவரின் பூதவுடல் தகனம் செய்யப்பட்டது. நெருங்கிய உறவினர்களும், முக்கிய அரசியல் பிரபலங்களும் பங்கேற்று அஞ்சலி செலுத்தினர்.

கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்ட மங்கள சமரவீர, முதலில் நாரஹேன்பிட்டிய பகுதியிலுள்ள தனியார் மருத்துவமனையொன்றில் அனுமதிக்கப்பட்டார். மங்களவின் நிலைமை தீவிரம் என்பதால் சர்வ வசதிகளையும் கொண்ட அப்பகுதியிலேயே உள்ள மற்றுமொரு தனியார் மருத்துவமனைக்கு அவரை மாற்றுமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

எனினும், அந்த மருத்துவமனையில் கொரோனாத் தொற்றாளர்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்த அனைத்து அறைகளும் நிரம்பி வழிந்துள்ளன. இதனால் இடம் இருந்திருக்கவில்லை.

இது தொடர்பில் மங்களவின் பிரத்தியேக செயலாளர், தெஹிவளை கல்கிஸை மாநகரசபையின் முன்னாள் மேயர் ஒருவருக்கு அறிவித்துள்ளார். அவர் உடனேயே அது தொடர்பில் பிரதமருக்குத் தெரியப்படுத்தியுள்ளார். மங்களவின் நிலை குறித்தும் விவரித்துள்ளார்.

இதனால் கலக்கமடைந்த மஹிந்த, மங்களவை மாற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளார்.

அதேபோல மங்களவுக்கு வழங்குவதற்கு தேவையான ஒரு மருந்துக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டிருந்தது. இது குறித்தும் பிரதமருக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பில் தனது மகன் யோசிதவுக்கு அறிவித்த மஹிந்த, நாட்டில் எங்கிருந்தாலும் அந்த மருந்தை உடன் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யவும் எனப் பணித்துள்ளார். அதன் பிரகாரம் மருந்தும் வழங்கப்பட்டுள்ளது.

மங்கள குறித்த செய்தி அறிந்ததும் கவலையில் இருந்த மஹிந்த, தன்னை தொடர்புகொண்ட தெஹிவளை கல்கிசை முன்னாள் மேயரிடம் 2005 ஜனாதிபதி தேர்தல் பற்றியும் விவரித்துள்ளார். "என்னை தோற்கடிக்க வேண்டும் என்பதே சந்திரிகாவின் எதிர்பார்ப்பு. ஆனால் மங்களதான் என்னை வெற்றிபெற வைத்தார்." என்று அதன் போது மஹிந்த கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வி.மைக்கல்கொலினின் நூல் அறிமுகம்

# வீணையடி நீ எனக்கு...

○ இராகவன்

வி.மைக்கல்கொலினுக்கு எந்தவொரு முன்னறிமுகமும் தேவையில்லை. ஏற்கனவே பரசுராமபூமி ' என்ற சிறுகதைத்தொகுப்பினூடாகத் தனது புனைவாற்றலை நன்கு வெளிப்படுத்தியவர். இப்போது வீணையடி நீ எனக்கு... என்ற புதினத்தை வெளிக் கொண்டு வந்துள்ளார். இவர் தனக்கு வாலாயமான மொழியிலும் வடிவத்திலும் இதைச் சாத்தியமாக்கியிருக்கிறார். ஒரு விதமான மனோரதியப் பாங்கில் இங்கே கதை சொல்லப்பட்டிருந்தாலும் நல்லதொரு காலப் பதிவாக அமைந்திருப்பதையும் மறுப்பதற்கில்லை.




இப்புத்தகத்தினூடாக சுவாரசியமான இரண்டு புதிய தகவல்களைப் பெற முடிந்தது முதலாவது நாமனைவரும் கேட்டு ரசித்த, ரசிக்கும் அமுதமழை பொழியும் முழு நிலவிலே இந்த அழகுச்சிலை உடல் முழுதும் நனைந்ததே 'எனும் திரையிசைப் பாடலை எழுதியவரைப் பற்றியது . இந்தப்பாடல் பொம்பிளை மனசு என்ற திரைப்படத்திற்காக எழுதப்பட்டுத் திருச்சி லோகநாதனின் மகனும் எம் மகராஜன், தீபன்சக்கர வர்த்தி ஆகியோரின் சகோதரருமான ரி.எல். தியாகராஜனால் பாடப்பட்டது . இதுவரை அந்தத் திரைப்படம் வெளிவராத நிலையில் பாடல் வெளிவந்து பட்டிதொட்டியெங்கும் ஒலிக்கத் தொடங்கிவிட்டது .

இதெல்லாம் நாங்கள் அறிந்திருக்கும் தகவல் ஆனால் பாடலாசிரியர் யாரெனத் தேடிப் பார்த்திருக்க மாட்டோம். ஏனென்றால் இதை வைரமுத்துவோ அல்லது வாலியோதான் எழுதியிருப்பார்கள் எனப் பொதுவாக நினைத்துக் கொண்டு கடந்து சென்றிருப்போம் .

சிலவேளைகளில் பாடலாசிரியர் யார் என்பதை அறிந்து கொள்வதில் ஆர்வமில்லாமலுமிருக்கும் . ஆனால் இந்தப் பாடலாசிரியர் கிழக்கிலங்கை மட்டக்களப்பைச் சேர்ந்த எழுத்தாளர் ஆ.மு.சி.வேலழகனின் மகன் இளவழகன் என்பதை இப்புதினத்தின் வழியே தேடிக் கண்டடைவதற்கு வி.மைக்கல்கொலின் எனக்கு வழிசமைத்துத் தந்திருந்தார் என்பதை இங்கே குறிப்பிட வேண்டும் . இதே போல் மகேந்திரனின் முக்கியமான திரைப்படங்களிலொன்றான நண்டுவிலிடம்பெற்ற மலேசியா வாசுதேவன் பாடிய அள்ளித்தந்த பூமி அன்னையல்லவா........ என்ற பாடலை வைரமுத்து அல்லது வாலி எழுதியிருக்கலாமென்றுதான் நினைத்திருந்தேன்.

அந்தப் பாடலை மதுக்கூர் கண்ணன் எழுதியிருப்பதாக இப்புதினத்தினூடாகத் தெரிந்து கொண்டேன். இவ்விரு தகவல்களுக்காகவும் வி.வி.மைக்கல்கொலினுக்கு இவ்விடத்தில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்புதினத்தில் கவிதைகள் கொட்டிக் கிடக்கின்றன. எனினும் வாசிப்பில் பெரிதாகச் சலிப்பூட்டவில்லை திருகோணமலையிலிருந்து மட்டக்களப்பின் வந்தாறுமூலைப் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகிவரும் ஜெயரதன் நிவேதா எனுமிருவருக்குமிடையே உருவாகும் சிநேகிதம் காதலாக மாறுமொரு சாதாரண கதையாகத்தான் இதுவும் முதலில் தோற்றங் கொள்கிறது. ஜெயரதன் ஓர் இளங்கவிஞனாக இப்புதினத்தில் அறிமுகப்படுத்தப்படுவதால் கவிதைகள் கொட்டுவது நியாயமானதே.

பல்கலைக்கழகத்தினுள் நிகழும் சம்பவங்கள் அனைத்தும் அறிக்கையிடல் (Reporting) முறையில் பதிவு செய்யப்படுகின்றன . நனவோடை உத்தியில் கதை நகர்த்தப்பட்டுள்ளது.

தடுத்து வைக்கப்பட்டுத் தனிப்பட்ட விசாரணை என்ற பேரில் நிவேதா வல்லுறவுக்குட்படுத்தப்படுவது இப் புதினத்தின் திரும்பல் புள்ளி (Tuming point) யாகிறது அதிலிருந்து கதைப் போக்கு வேகமெடுக்கிறது . நிவேதாவின் மனநிலை மற்றும் அதன் விளைவான செயற்பாடுகள் நுட்பமாகப் பதிவு செய்யப்பட்டிருப்பது கவனத்திற்குரியது.

எதிர்பாராத விதத்தில் புதினத்தை முடித்திருப்பதற்காக மட்டுமன்றி அது வரவேற்கத்தக்க தூரநோக்குள்ள ஒரு முடிவு என்பதற்காகவும் வி .மைக்கல்கொலினைத் தாராளமாகப் பாராட்டலாம். கொண்டாடலாம். மைக்கல்கொலின் நமது பராட்டுக்கு கொண்டாட்டத்திற்கு முரியவராகின்றார். அதாவது நிவேதா ஒரு பல்கலைக்கழக மாணவி என்பதால் உரியவர்கள் மூலமாக அழுத்தங் கொடுத்து தடுத்துவைக்கப்பட்ட அன்றைய தினமே அவளை உயிருடன் மீட்கமுடிந்தது .

ஒரு சாதாரண பொதுமகளுக்கு இது நிகழ்ந்திருந்தால் அவளது நிலை என்ன? நிவேதாவைப் போல் உடனடியாக மீட்டிருக்க முடியுமா ? என்ற இயல்பான நியாயமான கேள்வியையும் ம்றைமுகமாக எழுப்புகிறார். இவ்வாறான பொதுமகள்கள் காணாமல் போனோர் பட்டியலில் சேர்க்கப்பட்டுப் புதை குழிகளுக்குள் உறங்குவது தானே வழமையானது என்ற தகவலை இப்புதினம் தராமல் தந்திருக்கிறது என்றே சொல்லத் தோன்றுகிறது. ஓர் அன்பு நண்பனாகவும் தேர்ந்தவாசகனாகவும் வி .. மைக்கல் கொலினைத் தாராள மனதோடு வாழ்த்துகிறேன். ■

# கல்யாணம் கச்சேரி கனநாளாம் ஒப்பேறி!

(கொரோனாக் காலப் பதிவுகள்)

○ வேலணையூர் சுரேஷ்



41 நல்லநாள் நேரம் பார்த்து தினம்
நன்மைகள் செய்யக் காத்து பெற்ற
பிள்ளைகள் கருமம் பிந்தி நீண்டு
போகுதே வயதும் முந்தி இங்கே
உள்ளநாள் எல்லாம் கிருமித் தொற்று
உசுப்புதே உயிரின் வேரை? இந்த
கொள்ளைநோய் தீர்வ தெப்போ? எங்கள்
தலைவிதி நோவோம் யாரை ஐயோ!

42 முனியப்பர் கோயில் பக்கம் சென்று
முந்தானை போட்டுக் கதைத்தவ ரெல்லாம்
இனி எப்ப என்று ஏக்கம் கொண்டார்?
இப்படி வருமென்று யார்தான் கண்டார்?
சனியன்றேல் ஞாயிறு சந்திக்க என்று
சந்தர்ப்பம் பார்த்த சங்கதி போச்சே
தனியாகக் கோட்டையை பார்த்து வரலாம்
தாவணி குடைக்கு அங்கிப்ப தடையாம்

43 மணவறை வைக்கும் மண்டபம் கூட
மரக்கறி விற்கும் அங்காடி யாக
பணக்குறை போக்கும் யுக்திகள் வேற
பணம் பொருள் உள்ளவர் நிலையிது வாக
தினம் அரை வயிற்றுக் குழைப்பவர் ஏழை
தினக்கூலி நலிந்தோர் நிலையென்ன வாகும்?
அனற்புகை கிளம்ப அடிவயி றெரியும்
அபலைகள் கண்ணீர் எவருக்குப் புரியும்?



44 கிட்டிய சொந்த பந்த மென்றும்
கிட்டவும் அழைக்க முடியாத காலம்!
பட்டியல் இட்டுப் பணச்சடங் கென்று
பல பேர் கூடிட ஒண்ணாத நேரம்
மட்டுப் படுத்தி மரணச் சடங்கிலும்
அற்ப சொற்ப பேருக்கு அனுமதி
விட்டுத் தொலையாத கொரோனா வாலே
விட்டுப் போச்செம் வாழ்நாள் நிம்மதி

45 திட்டம் இட்டுநாம் திருநாள் பெருநாள்
திருவிழாச் செய்யும் காலமும் வருமாம்
சட்டம் சொல்வதை ஏற்று ஒழுகினால்
சந்தோச வாழ்க்கை மீளவும் பூக்குமாம்
நட்டம் நமக்கும் நாட்டுக்கும் ஆதலால்
நன்கு உணர்ந்து பொறுமை காத்து
கொட்ட மடிக்கும் கொரோனா விலக
கல்யாணம் கச்சேரி செய்தின் புறுவோம்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர்களின் போராட்டம் நியாயமானதா?

ந.பரமேஸ்வரன்

தமக்கு உரிய தீர்வு கிடைக்காவிட்டால் தொழிற் சங்க நடவடிக்கை தொடரும் என ஆசிரிய தொழிற்சங்கங்கள் அறிவித்துள்ளன. ஆசிரிய தொழிற்சங்கங்களின் இந்த அறிவிப்பு எந்தவகையிலும் நியாயப்படுத்த முடியாத ஒன்று என்றுதான் சொல்லவேண்டும். இந்தக் கட்டுரையை வாசித்துவிட்டு ஆசிரிய சமூகம் இந்தக் கட்டுரையாளருக்கு எதிராக வரிந்து கட்டிக்கொண்டு வரக்கூடும். அல்லது கட்டுரையாளர் கோத்தாபயவுக்கு வக்காலத்து வாங்குகிறார் கோத்தாவின் கைக்கூலி என்று சிலவேளை விமர்சிக்கக்கூடும். ஆனால் யதார்த்தம் என்ன என்பது ஆசிரிய சமூகத்துக்கு தெரியாத அல்லது புரியாத ஒன்றல்ல. ஆசிரிய சமூகம் யதார்த்தத்தைப் புரிந்துகொள்ள வேண்டும்.

ஆசிரிய தொழிற்சங்கங்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுவதற்கு இதுவல்ல நேரம். இங்கு ஆசிரியர்களின் கோரிக்கைகள் பற்றியோ அல்லது நீண்டகாலமாகத் தீர்க்கப்படாமலிருக்கும் அவர்களது பிரச்சினைகள் பற்றியோ கருத்துக் கூறவரவில்லை. தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கு அல்லது பணிப்புறக்கணிப்புக்கு இது பொருத்தமான நேரம் அல்ல என்பதையே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.


இங்கு இரண்டு முக்கியமான விடயங்களை சுட்டிக்காட்டுவது பொருத்தமாக இருக்கும்; இந்த விடயங்கள் ஆசிரிய சமூகத்துக்கு தெரியாதவையுமல்ல.

முதலாவதாக ஶ்ரீலங்கா தற்போது மிக மோசமான பொருளாதார சிக்கலுக்குள் சிக்கியுள்ளது. வருகிற மாதங்களில் அரச ஊழியர்களுக்கு சம்பளம் கொடுப்பதற்கே அரசாங்கம் திண்டாட வேண்டிய நிலைதான் காணப்படுகிறது. அரச கஜானா (திறைசேரி) காலியாகி விட்டது என்பது இலங்கைப் பிரஜைகள் அனைவரும் நன்கு அறிந்த ஒருவிடயம்; ஆசிரிய சமூகத்துக்கு இந்த விடயம் தெரியாது என்று சொல்ல முடியாது. "ஆவீனம் மழை பொழிய இல்லம் வீழ அகத்தடியாள் முகம்நோக்க" என்று தொடங்கும் விவேகசிந்தாமணி பாடலை நினைவுபடுத்தும் நிலையிலேயே தற்போதைய அரசாங்கம் காணப்படுகிறது. இந்தப் பாடலின் பொருள், " கடும் மழைபெய்து வீட்டின் சுவர் இடிந்து வீழ்ந்துள்ளது, மனைவி சமைப்பதற்கு எதுவுமில்லை என கணவனின் முகத்தைப் பார்க்கிறார்" என்று தொடங்குகிறது; இந்த பாடலின் கதாநாயகனின் நிலையிலேயே தற்போதைய அரசாங்கம் காணப்படுகிறது. அரசாங்கம் பிச்சைக்காரர்களிடம் பிச்சை எடுத்தே தனது பிரஜைகளுக்கு சாப்பாடு போடுகிறது (ஆசிரியர்கள் உட்பட அனைவருக்கும் சம்பளம் வழங்கி வருகிறது). பாகிஸ்தான், பங்களாதேஷ் போன்ற நாடுகள் பெற்றுக்கொண்ட கடனுக்காக சீனா எப்போது பாகிஸ்தானையும் பங்களாதேஷையும் ஆக்கிரமிக்க போகிறதோ தெரியாது. இலங்கை பாகிஸ்தானிடமும் பங்களாதேஷிடமும் கடன் வாங்குகிறது. சில தசாப்தங்களுக்கு முன்னர் பங்களாதேஷின் வறுமையைப் போக்க உதவுங்கள் என்று பங்களாதேஷ் சிறுமி ஒருத்தியின் புகைப்படத்துடன் கூடிய சுவரொட்டிகள் இலங்கையிலும் ஒட்டப்பட்டிருந்தன. இன்று இலங்கை பங்களாதேஷிடம் கடன் வாங்குகிறது.

அத்துடன் இலங்கை இந்து சமுத்திரத்தின் கேந்திரத்தில் அமைந்திருப்பதால் வல்லரசுப் போட்டியில் ஈடுபட்டுள்ள இந்தியா, சீனா, அமெரிக்கா போன்ற நாடுகளிடமும் அவ்வப்போது கடன் வாங்கி, காலத்தை ஓட்டி வருகிறது தற்போதைய ராஜபக்ச அரசு. இப்படி அனைவருக்கும் நல்லபிள்ளைக்கு நடிக்கும் இராஜதந்திரம் எத்தனை காலத்துக்கு கைகொடுக்கும் என்பது தான் பிரச்சினை நாட்டு நிலைமை இவ்வாறு இருக்கையில் ஆசிரிய தொழிற் சங்கங்களின் போராட்டம் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒன்றல்ல.

ஆசிரியத் தொழில் ஏனைய தொழில்களைப் போன்றதல்ல. அது மற்றவர்களால் செய்ய முடியாத தனித்துவமான புனிதமான ஒரு தொழில். வேறு எந்தத் தொழிற்சங்கம் போராட்டத்தில் ஈடுபட்டாலும் இராணுவத்தை வைத்தோ அல்லது புதியவர்களை பணிக்கு அமர்த்தியோ பணிகளை முன்னெடுக்கலாம். ஆனால் ஆசிரியத் தொழில் ஏனைய துறைகளிலிருந்து விதிவிலக்கான ஒன்று.

மின்சாரத்துறையினரும் எரிபொருள்துறையினரும் பணிப்பகிஸ்கரிப்பில் ஈடுபட்டபோது அரசாங்கம் இராணுவத்தைக் கொண்டு பணியை முன்னெடுத்தது. ஆனால் கல்வித்துறையில் அவ்வாறு இராணுவத்தினரைக் கொண்டு கல்விப்பணியை முன்னெடுக்கமுடியாது.



இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி ஆட்சியை கவிழ்க்கும் நோக்கம் , ஆசிரிய தொழிற்சங்கங்களுக்கு இருக்குமானால் அதுபற்றி யோசிக்கலாம் ஆனால் அவ்வாறு இருப்பதாகவும் தெரியவில்லை.

அடுத்த முக்கியமான பிரச்சினை மனிதாபிமானப் பிரச்சினையே. இரண்டு வருடங்களாக கொரோனா அச்சுறுத்தல் காரணமாக பாடசாலைகள் மூடிக்கிடக்கின்றன. பாடசாலைகள் மூடப்பட்டிருந்தாலும் பரீட்சைகளை மட்டும் சற்று காலதாமதமானாலும் ஒழுங்காக நடத்துகிறது இலங்கை அரசாங்கம். இரண்டு தேசிய மட்ட பரீட்சைகளான க.பொ.த உயர்தர , சாதாரணப் பரீட்சைகள் அடுத்தடுத்து நடைபெறவுள்ள நிலையில் பரீட்சைக்கு மாணவர்களை தயார்ப்படுத்த வேண்டிய ஆசிரியர்கள் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபடுவது அவ்வளவு பொருத்தமானது அல்ல; ஆசிரியர்களின் பிள்ளைகளும் பரீட்சைக்கு தோற்றவுள்ளனர். ஆசிரியர்களின் பணிப்பகிஷ்கரிப்புக் காரணமாக அவர்களது பிள்ளைகளின் எதிர்காலமும் பாதிக்கப்படப் போகிறது என்பதை ஆசிரியர்கள் உணராதவர்களல்லர். எனவே நாட்டினதும் மாணவர்களினதும் நலனைக் கருத்திற் கொண்டு ஆசிரியப் பெருந்தகைகள் தமது போராட்டத்தை கைவிட்டு கடமைக்கு திரும்புவதையே இலங்கை மக்கள் அனைவரும் எதிர்பார்க்கிறார்கள். இலங்கை ஆசிரிய சங்கத் தலைவர் ஜோசப் ஸ்டாலின் போன்றவர்கள் ஆசிரியர்களின் தனிப்பட்ட பிரச்சினை [illegible] முன்வந்து [illegible] மாணவர்களின் எதிர்காலம் பற்றியும் சிந்திப்பது நல்லது. ■

# அம்மா…

(06 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் ஒருநாள் என்ன நடந்தது ஏது நடந்தது என்று தெரியாது. தான் இனி இலங்கையில் போய் வாழப்போறன் என்றபடி ஒரு பத்திரத்தை முன்னே எடுத்து வைத்தார்.

விவாகரத்துக் கோரும் பத்திரம்.

ஒருகணம் நிதானித்தாள்.

அடுத்தகணம் கையெழுத்திட்டாள் கனகராணி.

அப்போது கூட கனகராணி தன்னிடம் இது வேண்டாம் என கெஞ்சுவாள் என எதிர்பார்த்த செந்திலுக்கு கனகராணி அடுத்துச் செய்ததுதான் ஆச்சரியமாக இருந்தது.

அந்த விவாகரத்துப் பத்திரத்துக்கு மேல் தனது தாலியை கழற்றி வைத்தாள்.

வழமையாக மாலை ஆறு மணிக்கு மூடப்படும் கடைகள் சம்மர் விடுமுறைகளின் பொழுது மாதச்சம்பளத்துடன் ஒட்டிவரும் வெள்ளிக் கிழமைகளில் நடுநிசிவரை திறந்திருக்கும்.

ஆடல்கள் ,பாடல்கள்.. இரவு உணவகங்கள் எல்லாம் நடைபாதைகளில் கொட்டகை போட்டு நகரமே கோலாகலமாகக் காட்சிதரும்.

கனகராணியின் நாலு பிள்ளைகளும் மகிழ்ச்சியாக ஊர் சுற்றி விட்டு நடுநிசியைத் தாண்டித் தான் வீட்டுக்கு வருவார்கள்.

நடைபாதைக்கடை ஒன்றைத் தாண்டிவரும் பொழுது"அங்கே அம்மா",என இளையவள் ஆற்றங்கரையில் அமைந்திருந்த உணவு விடுதியின் வெளியே போடப்பட்டிருந்த சாப்பாட்டு மேசை ஒன்றைச் சுட்டிக் காட்டினாள்.

கனகராணி ஒரு டெனிஸ்காரனுடன் இருந்து உணவு அருந்திக் கொண்டு இருந்தாள்.

அவர்களுக்கு அண்மையில் நிலத்தில் குற்றிவைக்கப்பட்டிருந்த தீப்பந்தங்கள் குளிருக்கு இதமாகவும் அழகாகவும் இருந்தன.

கனகராணி கைகளில் எலுமிச்சைச்சாறு கலந்த சோடா. டெனிஸ்காரனின் கைகளில் உயர்தர வைன்.

பிள்ளைகள் மௌனமாக வீடு திரும்பிவிட்டார்கள்.

அவர்கள் நால்வரின் மனங்களும் தகித்துக் கொண்டிருந்தன.

இரவு இரண்டு மணிபோல டெனிஸ்காரனின் காரில் வீட்டுக்கு வந்திறங்கினாள் கனகராணி.

பிள்ளைகள் தாய் வீட்டுக்குள் வந்ததும் ஹோலில் இருந்து எழுந்து தத்தம் அறைகளுக்குச் சென்றார்கள். ஆனால் அவர்களால் தூங்கமுடியவில்லை. கனகராணி தூங்கிவிட்டாள்.

✧✧✧✧

சனி முழுக்கவும் ஞாயிறு பகலும் எதுவுமே இயல்பாக இருக்கவில்லை. வீடு மௌனத்தில் உறைந்திருந்தது. "சொல்லித் தொலையுங்களேன்"கனகராணியே மௌனத்தை உடைத்தாள். வெள்ளி மாலை அவர்கள் கண்டது தேநீர் மேசைக்கு வந்தது. நிதானமாக கனகராணி நாலுபிள்ளைகளின் முகத்தையும் பார்த்தாள்.

"கட்டாயம் மூத்தவளின் கலியாணம் இன்னும் மூன்று மாதத்தில் முடிய உங்களுக்கு சொல்லத்தான் இருந்தேன். இதில் எந்த இரகசியமும் இல்லை. உங்களுக்குச் சொல்லாமல் யாருக்குச் சொல்லுவது? நானும் றொபேட்டும் சேர்ந்து வாழமுடிவெடுத்து இருக்கிறம்." பிள்ளைகள் நால்வரும் அதிர்ந்துவிட்டார்கள். வேண்டாம் என்பதற்கு பிள்ளைகளிடம் இருந்து ஆயிரம் காரணங்கள்.

அனைத்தையும் கேட்டுக் கொண்டு இருந்துவிட்டு, எழுந்துபோய் தனது கோப்பையுள் மீண்டும் கோப்பியை நிரப்பிக் கொண்டு வந்து கனகராணி இப்போது சாப்பாட்டு மேசையில் அமராது ஜன்னலடியில் சாய்ந்துகொண்டு,"நான் உங்கள் நாலுபேருக்கும் நல்ல அம்மாவாக வாழ்ந்திருக்கிறன். அப்பாவுக்கு கூட நல்ல மனைவியாக நடந்திருக்கிறன். ஆனால் அப்பா எனக்கு என்றுமே நல்ல கணவனாக இருக்கவில்லை",பிள்ளைகள் நிமிர்ந்து பார்த்தார்கள்.

"வெட்கத்தை விட்டுவெளியே சொல்வதென்றால் என் பிள்ளைகள் உங்கள் நால்வரையும் நான் எனது மகிழ்ச்சியில் பெறவில்லை" என சொல்ல நினைத்தாள்.

ஆனால் சொல்ல முடியவில்லை.

கனகராணியின் கண்கள் கலங்கின.

"அப்பாவின் அதிகாரத்தை நீங்கள் வாழ்க்கை முழுக்க பார்த்திருப்பீர்கள் தானே. அதுதான் படுக்கை அறையிலும். என்னை ஒரு பெண் ஜென்மமாக என்றுமே அவர் பார்த்ததில்லை"

"அம்மா"நால்வரின் வாய்களும் முணுமுணுத்தன.

"எப்போவாவது திருந்துவார் என எதிர்பார்த்துக் கொண்டு உங்களையும் வளர்த்துக் கொண்டு இருந்தேன். நீங்களும் வளர, எனக்கும் வயதாக வயதாக அவர் வீட்டில் பகலில் தனியே இருந்தபொழுதும், இரவில் வேளையுடன் படுக்கச் சென்ற பொழுதும், சற் என்றும் வைபர் என்றும் ,வட்ஸ்அப் என்றும் யார் யாருடன் என்ன கூத்துகள் அடித்துக் கொண்டிருந்தார் என எனக்குத் தான் தெரியும் அவர் நித்திரையாகிவிட்டாலும் நித்திரையாகாத அவரின் போனில் வந்ததுகளைப் பார்த்து, நான் நித்திரையைத் தொலைத்த இரவுகள் ஆயிரம்"

"அம்மா எல்லாம் புரியுது. ஆனால் இப்போ ஊர் என்னசொல்லும்?"

"என்னத்தை சொல்லும்? ஒரு தடவை வாழுற வாழ்வை எனக்கு துரோகம் செய்யாமல் வாழநான் ஆசைப்படுகிறன். ஒருபெண்ணின் மனநிறைவு என்றாலும் சரி உடல் நிறைவு என்றாலும் சரி எல்லாத்தையும் நான் உணர்ந்தது இந்த ஆறு மாதத்தில் தான்."

நால்வரும் எழுந்து வந்து தாயைக் கட்டிஅணைத்துக் கொண்டார்கள். ஐவரின் கண்களில் இருந்தும் பொலபொல என்று ஒழுகியது. இருட்டியிருந்த கரிய திரண்ட முகில்களின் மீது குளிர்காற்று வீச மழை கொட்டியது. கோடைகால வெக்கை மெதுமெதுவாகக் குறையத் தொடங்கியது. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# சுழல்களின் மீதான எதிர்பார்ப்பு

○ ஆர்.லயனல்

விளையாட்டு

ஐ.பி.எல். தொடரின் இரண்டாவது பாதி ஆரம்பிப்பதற்கு இன்னும் சில தினங்களே எஞ்சியுள்ளன. இந்தியாவில் ஏப்ரல் மாதம் இடம்பெற்ற இந்தத் தொடர் கொவிட் தொற்றுக் காரணமாகக் கைவிடப்பட்டது. தற்போது இரண்டாவது பாதி ஐக்கிய அரபு இராச்சியத்தில் இடம்பெறவுள்ளது. ஐக்கிய அரபு இராச்சிய மைதானங்கள் சுழலுக்கு ஒத்துழைக்கக்கூடியவை என்பதால், தொடரில் சுழல்பந்து வீச்சாளர்களின் ஆதிக்கம் அதிகம் இருக்கும் என்பதுதான் பொதுவான எதிர்பார்ப்பாக உள்ளது. அணிகள் ஒவ்வொன்றும் மேற்கொண்டுள்ள ஒப்பந்தங்களும்கூட அதையேதான் கட்டியம் செய்கின்றன. பெங்களூரைப் பொறுத்தவரை. மக்ஸ்வெலை ஒப்பந்தம் செய்து அந்த அணி துடுப்பாட்டத்தில் பலம்பெற்றுள்ள போதிலும், பந்துவீச்சைப் பொறுத்தவரை கொஞ்சம் தொய்வுநிலை இருந்தது. அதிலும் சுழல்பந்துவீச்சில் சகலைத் தவிர்த்துவிட்டால் பிறிதெவரும் அணியைக் கரைசேர்க்கும் நிலையில் இல்லை. தற்போது அந்த வெற்றிடத்தை இலங்கை அணியின் சுழல்பந்து வீச்சாளர் வனிந்து ஹசரன்கவைக் கொண்டு நிவர்த்திசெய்ய எத்தனித்துள்ளது ஆர்.சி.பி.

ராஜஸ்தான் அணியும் ஏற்கனவே விலகிய வீரர்களுக்கு மாற்றாக, ரி20 தரப்படுத்தலில் முதலிடத்தில் உள்ள சுழல்பந்து வீச்சாளர் சம்சியை ஒப்பந்தம் செய்துள்ளது. ஏற்கனவே ரசிட்கான், சகல் ஆகியோர் பெயர் குறிப்பிடும் சுழற்பந்து வீச்சாளர்களாக இருக்கின்ற நிலையில், தற்போது இந்தப் போட்டி பலமுனைப் போட்டியாக மாறியுள்ளது.

**'சுழலுக்கு வந்த கிராக்கி...'**



# கற்பிதங்கள் மிக அவசியம்

ஐந்தல்ல பத்தல்ல 70 சதங்களைத் தன் பெயரின் கீழ் எழுதி வைத்துள்ளார் கோலி. கோலி சதம் எடுக்காத அணிகளே இல்லை. இப்படியொரு இராச்சியத்தைக் கட்டியெழுப்பிய அவர் கடந்த ஒன்றரை வருடங்களாக ஒற்றைச் சதத்தைப் பெறுவதற்குப் படும்பாடு துன்பகரமானது. கோலியின் ரசிகர்களால் இம்மியும் பொறுத்துக்கொள்ள முடியாத அவஸ்தை அது. இங்கிலாந்து இந்திய அணிகளுக்கு இடையிலான ஐந்து ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடர் தற்போது நடைபெற்று வருகின்றது. இந்தத் தொடரில் கோலியின் 71ஆவது சதம் மிக இலகுவாகப் பதிவாகும் என்று எதிர்பார்த்தவர்கள் பலர். ஆனால், அண்டர்சன் கோலிக்குச் சிம்மசொப்பனமாகத் திகழ்ந்து கொண்டிருக்கின்றார். அண்டர்சன் எழுதிய 'ஸ்கிரிப்ட்'டுக்கு உயிர் கொடுப்பதுபோன்றுதான் அமைகின்றது கோலியின் செயற்பாடு. 'அவுட் சைட் த ஆப் ஸ்ரம்ப்' கோலியின் பெரும் பலவீனமாக இருக்கின்றது. தேவையற்ற 'கவர் ட்ரைவ்'களை கோலி முயற்சி செய்கின்றார். விளைவாக ஸ்லீப் திசையில் அல்லது இலக்குக் காப்பாளரிடம் பிடிகொடுத்து பவிலியன் திரும்புகின்றார்.

ஒன்றல்ல, இரண்டல்ல 7 தடவைகள் கோலி அண்டர்சனிடம் ஆட்டமிழந்துள்ளார். கோலியை இலகுவாக ஆட்டமிழக்கச் செய்யக்கூடிய வீரராக ஆஸ்திரேலியாவின் சுழல் ஜாம்பவான் லையன் மட்டுமே இருந்தார். தற்போது இந்தப் பட்டியலில் அண்டர்சனும் இணைந்துள்ளார். கோலி தன் தவறைத் திருத்திக்கொள்ள வேண்டும். சதம் என்பது வேறுகதை. ஆனால், ஒரு சம்பியன் வீரர், உலகத்தரம் வாய்ந்த துடுப்பாட்ட வீரர் ஒரே மாதிரியாக மீண்டும் மீண்டும் ஆட்டமிழப்பதென்பது ஏற்கத்தகாததுதான்.

**'நல்லமாட்டுக்கு ஒரு சூடு...'**

○ ஆர்.பிரகாஷ்

# பஞ்ஷிர் இனி என்னவாகும்?

உலக உலா

ஒ ஆப்கானிஸ்தானைப் பொறுத்தவரை அனேகமானோரின் எண்ணம் என்ன?- அங்கு அமெரிக்காவின் ஆதிக்கம் மிகையாக இருந்தது. அமெரிக்காவின் ஆதரவு பெற்ற கனி தரப்பு ஆட்சியமைத்திருந்தது. அமெரிக்கப் படைகளின் வெளியேற்றத்தின் பின்னர் தலிபான்களால் நாடு கைப்பற்றப்பட்டது என்பதுதானே. ஆனால், தற்போது அங்கு உள்நாட்டுப் போருக்கான முனைப்புக்கள் மிகத் தீவிரமாக இடம்பெற்று வருகின்றன என்பது எத்தனை பேருக்குத் தெரியும்?. அதுதான் பஞ்ஷிர் பள்ளத்தாக்கு விவகாரம். காபூல் நகரில் இருந்து வடக்கே 150 கிலோ மீற்றர்கள் தொலைவில் நாட்டின் வடக்கு மத்திய பிராந்தியத்தில் பாகிஸ்தான் எல்லையோரம் அமைந்துள்ளது பஞ்ஷிர் பள்ளத்தாக்கு. மத்திய ஆசியாவின் பாரம்பரிய இனக் குழுமங்களில் ஒன்றாகிய தஜிக் மக்கள் அடர்த்தியாக வசிக்கின்ற மலைப் பள்ளத்தாக்கு அது. ஆப்கானிஸ்தானைப் 'பேரரசுகளின் கல்லறை' என்று கூறினால் பஞ்ஷிர் பள்ளத்தாக்கு அதன் இருதயம் போன்றது. அங்குள்ள மக்களுக்கென்று சிறப்பான தனித்துவம் இருக்கிறது. பல தசாப்தங்களாக ஆப்கானிய கெரில்லாப் போர்களின் அடக்க முடியாத மையமாக அது விளங்கி வருகிறது. மனத் திடமும் மலைகளின் அரணும் கொண்ட பஞ்ஷிர் மக்களை வல்லரசுகளால் கூட வெல்ல முடியவில்லை. 1996ஆம் ஆண்டுமுதல் 2001ஆம் ஆண்டு வரை தலிபான்கள் ஆப்கானிஸ்தானில் ஆட்சியமைத்திருந்த காலத்தில்கூட பஞ்ஷிர் பள்ளத்தாக்கை அவர்களால் கைப்பற்ற முடியவில்லை.

### அகமத் ஷா

பஞ்ஷிர் வரலாற்றையும் பெருமைகளையும் அகமத் ஷா என்னும் மலைச் சிங்கத்தைத் தவிர்த்துவிட்டுக் கதைத்துவிட முடியாது. தலிபான்களின் முதலாவது ஆட்சிக்காலத்தில்கூட தலிபான் எதிர்ப்பு நிலையில் இருந்த பல்வேறு ஆயுதக் குழுக்களை ஒன்றிணைத்து பஞ்ஷிர் பகுதியிலும் அதன் சூழமைவுகளிலும் ஆட்சியமைத்திருந்தார் அகமத் ஷா. அமெரிக்க இரட்டைக் கோபுரத் தாக்குதலுக்கு இரு தினங்களுக்கு முன்பாக, அல் குவைதா தீவிரவாதிகளால் அவர் கொல்லப்பட்டார். அவர் உயிருடன் இருந்திருந்தால் சில வேளைகளில் இரட்டைக்கோபுரம் தகர்க்கப்படாமலும் போயிருக்கலாம். ஏனெனில் இரட்டைக் கோபுரம் அல் குவைதாவால் தகர்க்கப்படலாம் என்று அவர் ஏற்கனவே எச்சரித்தார். இன்று அகமத் ஷாவின் வழியில் அவரது மகன் அகமத் மசூத் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார்.

ஆப்கானிஸ்தானை ஆழ நினைக்கின்ற உள்நாட்டு, வெளிநாட்டு சக்திகளுக்கு சிம்மசொப்பனமாக இருந்து வருகின்ற பஞ்ஷிர் பிரதேசம் ஆப்கானிஸ்தானில் எவ்வாறான ஆட்சி அமைய வேண்டும் என்பதைத் தீர்மானிக்கின்ற பகுதியாக இருக்கிறது. தனியான சுயாட்சி உள்ள ஒரு பிராந்தியமாக அதனை அங்கீகரிக்குமாறு அதன் தலைவர்கள் கோரிவருகின்றனர். தலிபான்களிடம் இருந்து தப்பிய அரச படையினர், தலிபான்களால் பெரும் அச்சுறுத்தலுக்கு உள்ளாவதாக உணர்கின்ற ஏனைய பகுதிகளைச் சேர்ந்த ஆப்கான் வாசிகள், தலிபான் எதிர்ப்பு சக்திகள் அனைவரும் தற்சமயம் பஞ்ஷிர் பள்ளத்தாக்கு மக்களுடன் அணி திரண்டுள்ளனர். தலிபான் படைகளை எதிர்கொள்வதற்கான முன் ஆயத்தங்களிலும் பயிற்சிகளிலும் ஈடுபட்டுள்ள அவர்கள் 'தேசிய எதிர்ப்பு முன்னணி' என அழைக்கப்படுகின்றனர்.

### தலிபான்களின் வியூகம்

தலிபான்களுக்கு கிடைத்திருக்கின்ற இரண்டாவது சந்தர்ப்பம் இது. மின்னல் வேகத்தில் நாடு முழுவதையும் கைப்பற்றிவிட்ட அவர்கள் இப்போது பஞ்ஷிரைச் சுற்றி வளைத்துள்ளனர். அங்குள்ள தலிபான் எதிர்ப்பு முன்னணிப் படைகளுக்கு முன்பு போல வெளியே இருந்து ஆயுத உதவிகள் மற்றும் விநியோகங்கள் கிடைப்பதற்கான வாய்ப்புகள் அறவே இல்லை. அமெரிக்காவும் மேற்கு நாடுகளும் தங்களுக்கு உதவவேண்டும் என்று அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். இதற்கு முன்பு பஞ்ஷிர் தலைமைக்கு ஈரானின் ஆதரவு இருந்து வந்தது. இப்போது ஈரான் தலிபான் தலைமைக்கு தனது ஆதரவை வெளிப்படுத்தி உள்ளது.

மலை சார்ந்த இயற்கையான பாதுகாப்பு அரண்களால் சூழப்பட்ட பஞ்ஷிர் தலிபான்களிடம் வீழ்ந்தாலும் அவர்கள் அங்கு நீண்டதொரு கெரில்லா எதிர்ப்புப் போரைத் தொடர வேண்டி வரலாம் என்று அவதானிகள் குறிப்பிடுகின்றனர். எது நேர்ந்தாலும் எதிர்த்துப் போரிட்டு மடிவது என்பதில் உறுதியாக நிற்கும் பஞ்ஷிர் தலைவர் அஹ்மத் மசூத், 'ஆப்கானிஸ்தானின் சுதந்திரத்தை விட்டுக் கொடுக்காத கடைசித் துண்டு நிலமாக பஞ்ஷிர் விளங்கும்' என்று உறுதிபடக் கூறியிருக்கிறார். தலிபான்களுக்கு எதிரான இன்னொரு இராணுவ நடவடிக்கை பஞ்ஷிரில் இருந்து ஆரம்பிக்கப் படுமா என்பதற்குக் காலம்தான் பதில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இராகவன்

ஒரு மாதிரியாய்க் கதைச்சுக் கதைச்சு சிவா வீட்டுக்கு வந்திட்டம். எங்களைக் கேற்றடியில நிப்பாட்டிப்போட்டு, "நில்லுங்கோடா வாறன்"எண்டிட்டு வீட்டுக்குள்ள ஓடினான். ஒரு அஞ்சு நிமிசமா நாங்கள் ரண்டு பேரும் ஆளையாள் பார்த்துக்கொண்டு, "என்னடா இவனைக் காணேல"என்று உச்சுக் கொட்டிக் கொண்டு நிண்டம்.

ஒரசுகையுமில்லை. அப்பன் "வாடா உள்ளுக்கை போய்ப்பார்ப்பம்!" எண்டு என்னைக் கேட்டான். எனக்குத் தயக்கமாயிருந்திச்சுது. மாட்டன் எண்டால் அப்பன் அடிச்சும் போடுவான் எண்டு பயமாயுமிருந்தது. அதுக்கிடையில உடுப்பு மாத்திக்கொண்டு ஒரு மாதிரி ஆடியசைஞ்சு கொண்டு சிவா வந்திட்டான்.

"என்னடா சிங்கம்,புலி,கரடி,யானையளப் பாப்பமோ?" எண்டு அப்பன் அவனிடம் கேட்டான்.

" இல்லையடா இண்டைக்குப் பாக்கேலாது"கொஞ்சம் கவலையாய்க் கதைக்கிற மாதிரிச் சிவா சொன்னன்.

"ஏனடா? ஏன்?"எண்டு அப்பன் பரபரக்க, சிவாவோ

## ஊர்ப்புதினம்



"ஒட்டகச்சிவிங்கியைக் கொண்டு வாறதுக்கு ஆசையண்ணா கொழும்புக்குப் போய் இன்னுந் திரும்பி வரேல்ல. மிருகக்காட்சிச்சாலையின்ரை திறப்பு அவரிட்டத்தானிருக்கு. அவர் வந்தாத்தான் மிருகங்களைப் பார்க்கலாம்" எண்டு நிதானமாகச் சொன்னான். அப்பனுக்கு முகங் கறுத்திட்டுது. "அவர் எப்ப வருவர்?" எண்டு சிவாட்டைக் கேட்டான்.

" ஒட்டகச்சிவிங்கி வந்த உடன வருவார்" எண்டான் சிவா. அப்பனும் ஒரு விடாக்கண்டன். "ஒட்டகச் சிவிங்கி எப்ப வரும்?" எண்டு கேட்டான்.


"அது வரேக்குள்ள வரும்"எண்டான் சிவா. அப்பனுக்குச் சுள்ளெண்டு கோவம் வந்திட்டுது: சிவாவின்ரை கழுத்தில பிடிச்சு, "செம்மறி! மரியாதையாய் என்னைக் கொண்டுபோய் என்ர வீட்டை விடு. இல்லாட்டி நடக்கிறதே வேற" எண்டு உறுக்கினான். இதை சிவாவின்ரை தாய் கண்டிட்டு "ஆரடா அது சண்டித்தனங் காட்டுறது?"எண்டு கேட்டுக்கொண்டு ஒரு பூவரசங்கம்பை முறிச்சுக்கொண்டு ஓடிவர , அப்பன் சிவாவை விட்டுட்டு ஓட, நான் எங்கட வீட்டை வந்து சேர்ந்திட்டன். இதையெல்லாம் நான் அம்மாட்டச் சொல்லேல்ல. சொல்லியிருந்தால் நல்ல பூசை கிடைச்சிருக்கும்.

அடுத்தநாள் நேசறிக்கு நான் போகேக்குள்ள அப்பன் வந்து முதல்ல என்னோட தனகினான். "பேய்ச்செம்மறி! நேற்று நீ என்னை விட்டுட்டு ஓடிவிட்டாய். இண்டைக்கு நீ வீட்டை போற கெட்டித்தனத்தைப் பார்ப்பம்" எண்டு உறுமினான். எனக்குப் பிறகுதான் சிவா தமையன்ர சைக்கிள்ள 'லிட்டில் சுப்பஸ்ரார்' மாதிரி வந்திறங்கினான். தமையன்காரன் சைக்கிளைத் திருப்பிக் கொண்டு போகும் வரைக்கும் பார்த்துக் கொண்டிருந்த அப்பன் போய்ச் சிவாவின்ர சேர்ட் கொலரைப் பிடிச்சு, "ராஸ்கோல் நேற்றென்னைப் பேக்காட்டிப் போட்டுக் குசாலாய் வாறாய் என்ன? இண்டைக்கு உன்ர பல்லைக் கழட்டிக் கையில தராட்டிப் பார்" எண்டு வெருட்டினான். சிவா இதுக்கெல்லாம் பயப்பிடுற ஆளா? அப்பன்ரை கையைத் தட்டிப் போட்டு, "ஏன் நானே உன்னை வரச் சொல்லிக் கேட்டனான். நீயாய்த்தானே வந்தனி? அதுக்கு நான் என்ன செய்யிறது?" எண்டு மறுத்தான் குடுத்தான். "நீ கதையை மாத்தாதை. இண்டைக்கு நீ எப்படி வீட்டை போறாய் எண்டதையும் பாப்பம்" எண்டு அப்பனும் சளைக்காமல் வெருட்டினான். அதுக்கிடையில பேபியக்கா வந்து நேசறி தொடங்கிட்டு.

(தொடரும்....)

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

# போரும்...



களை பொருட்படுத்துவதில்லை என்று முடிவெடுத்தார்கள். அப்படி ஒரு முடிவை எடுத்து யுத்தத்தை வெல்வது ஒரு பெரிய காரியமும் அல்ல. அதாவது ஒரு இனப்படுகொலை மூலம் யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்கு பெரிய வீரம் தேவையில்லை. அதுமட்டுமல்ல போரின் இறுதிக் கட்டத்தில் தமிழ் மக்களின் இழப்புக்களை தடுப்பதற்கு இந்தியாவோ அல்லது ஐ.நா.வோ பொருத்தமான நடவடிக்கைகள் எதனையும் எடுக்கவில்லை. இறுதிக்கட்டபோரில் ஏற்பட்ட உயிரிழப்புக்களுக்கு அதுவும் ஒரு காரணம். அதாவது போரில் அரசாங்கம் வென்றதற்கு அதுவுமொரு காரணம்தான். ஆனால் வைரஸும் போரும் ஒன்றல்ல என்பதனை கடந்த ஒன்றரை ஆண்டுக்கு மேலான காலம் நிரூபித்துவிட்டது. எனினும் அரசாங்கம் ஒரு யுத்தகளத்தில் முடிவெடுப்பது போலவே இப்பொழுதும் முடிவெடுக்கிறது. கடந்த வெள்ளிக்கிழமை ஜனாதிபதி நாட்டுமக்களுக்கு ஆற்றிய உரையில் சமூக முடக்கத்தை ஏன் அரசாங்கம் ஒத்திவைத்தது என்பதற்கு விளக்கங்களை வழங்கினார். அதாவது வைரசை முடக்குவது என்றால் சமூகத்தை முடக்க வேண்டும். சமூகத்தை முடக்கினால் பொருளாதாரம் முடங்கிவிடும். ஏற்கனவே முடங்கிப்போயி ருக்கும் பொருளாதாரத்தை மேலும் முடக்குவதற்கு அரசாங்கம் தயங்குகிறது. அதனால் தான் சமூகத்தை முழுமையாக முடக்க அரசாங்கம் தயங்குகிறது. பொருளாதாரத்தை பாதுகாப்பதற்காக உயிரிழப்புக்களை தாங்கிக் கொள்ளலாம் என்பதும் ஒருவித யுத்தகளச் சிந்தனைதான்.

இப்பொழுது அறிவிக்கப்பட்டிருப்பதும் ஓர் அரைச் சமூக முடக்கம்தான். பிரதான சாலைகளில் தான் நடமாட்டங்கள்



பெருமளவுக்கு குறைந்திருக்கின்றன. ஆனால் நாட்டின் உட்தெருக்களிலும் குக்கிராமங்களிலும் வாழ்க்கை வழமைபோல இயங்குகிறது.கொரோனாச் சந்தைகள் ஆங்காங்கே திறக்கப்பட்டுவிட்டன. வணிகர்கள் கடைகளின் முன் கதவை மூடிபின் கதவால் வியாபாரம் செய்கிறார்கள். அப்படியென்றால் வைரஸ் பெருஞ்சாலைகளின் வழியாகத் தான் வருமா?அல்லது பின் கதவின் வழியாக வராதா? இவ்வாறான ஒரு அரைச் சமூக முடக்கத்தைக் கூட அரசாங்கம் சிவில்தனமாக அறிவிக்காமல் இராணுவத்தனமாகவே அறிவித்திருக்கிறது.

இந்த அரசாங்கம் வைரஸுக்கு எதிரான நடவடிக்கைகளை ஒரு போரைப் போலவே முன்னெடுக்கிறது. ஒரு பெருந்தொற்று நோய் காலத்தில் நாட்டை அதிகம் இராணுவமயப்படுத்திய ஓர் அரசாங்கம் இது. சுகாதார அமைச்சின் செயலாளராகவும் ஒரு முன்னாள் படைப் பிரதானியே காணப்படுகிறார். புதிய சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெலவுக்கு மருத்துவ ஆய்வக விஞ்ஞானிகளின், நிபுணர்கள் சங்கத்தின் தலைவர் ரவிகுமுதேஷ் பின்வருமாறு அறிவுறுத்தியுள்ளார்...... "நீங்கள்" முதுகெலும்புள்ள சுகாதார அமைச்சராக செயற்பட விரும்பினால் உங்களைத் தாண்டிவரும் உத்தரவுகளை அமுல்படுத்துவதிலிருந்து சுகாதாரச் செயலாளருக்கு உடனடியாகத் தடைவிதியுங்கள். இல்லையெனில் சுகாதார சேவையில் சரியான தீர்மானங்களை எடுப்பதில் சீரான தன்மையைப் பேணுவது கடினம்"

அரசாங்கம் ஏன் வைரஸுக்கு எதிரான நடவடிக்கைகளை அதிகம் இராணுவமயப்படுத்துகிறது? அதற்கு பின்வரும் காரணங்கள் உண்டு. முதலாவது காரணம் இந்த அரசாங்கத்துக்கும் படைத்தரப்புக்கும் இடையிலான உறவு இரத்தமும் சதையும் போன்றது. இந்த அரசாங்கத்தின் அடிப்படைப் பலமே யுத்த வெற்றிதான். எனவே போர்வெற்றியின் பங்காளியான படைத்தரப்பில் தான் இந்த அரசாங்கம் அதிகம் தங்கியிருக்கும். அதிலும் குறிப்பாக தமிழ்மக்களால் போர்க்குற்றம் சாட்டப்படும் ஒரு படைத்தரப்பை பாதுகாத்தால் தான் இந்த அரசாங்கம் தன்னையும் பாதுகாக்கலாம். எனவே படைத்தரப்பை தண்டிக்கப்பட முடியாத ஒருதரப்பாக மகிமைப்படுத்த வேண்டிய தேவை இந்த அரசாங்கத்துக்கு உண்டு. யுத்தத்தை வென்ற ஒரு படையை வைரஸுக்கு எதிரான போரிலும் நிறுத்தி அதில் வெற்றிகொள்ள வைப்பதன் மூலம் படைத்தரப்பின் அந்தஸ்தை உயர்த்தலாம் என்று இந்த அரசாங்கம் சிந்தித்தது. இது முதலாவது காரணம்.

இரண்டாவது காரணம் , அனர்த்த காலங்களில் படைத்தரப்பை உதவிக்கு அழைப்பது ஒரு உலகப் பொது இயல்பு. இலங்கைத்தீவில் அதிக ஆளணியும் அதிகவளங்களும் கொண்ட வினைத்திறன்மிக்க ஒரு அரச உபகரணம் படைத்தரப்பே. குறிப்பாக அரசாங்கத்துக்கு அதிகம் விசுவாசமான ஒரு உபகரணமும் அதுதான். எனவே அந்த உபகரணத்தை வைத்து அரசாங்கம் வைரசை எதிர்கொண்டது. அதனால் தொடக்கத்தில் வெற்றிகளையும் பெற்றது. அண்மை மாதங்களாக தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகளை ஒருபடை நடவடிக்கைபோல வேகமாக முன்னெடுத்து வரும் அரசாங்கம் அதில் ஒரு முன்னுதாரணத்தை காட்டியும் இருக்கிறது. இது இரண்டாவது காரணம்.

மூன்றாவது காரணம் வைரஸுக்கு எதிரான நடவடிக்கைகளில் படைத்தரப்பை முன்னிலைப்படுத்தும் பொழுது அது தொடர்பில் விமர்சனங்களை முன்வைப்பதற்கு எதிர்க்கட்சிகளும் ஊடகங்களும் சிங்களப் பொதுஉளவியலும் தயங்கும். போரில் 'ரிஸ்க்' எடுத்து உயிரைக்கொடுத்து வெற்றி கொண்டது போலவே இப்பொழுது வைரஸுக்கு எதிராகவும் படைத்தரப்பு ரிஸ்க் எடுக்கிறது என்ற ஒரு படிமத்தை அரசாங்கம் கட்டியெழுப்ப முயன்றது. வைரஸுக்கு எதிரான நடவடிக்கைகளை விமர்சிப்பது என்பது அதில் முன்னணி செயற்பாட்டாளர்களாகக் காணப்படும் படைத்தரப்பையும் விமர்சிப்பதுதான். தமது யுத்த வெற்றி நாயகர்களை விமர்சிக்க தயங்கிய சிங்களக் கூட்டு உளவியலை அரசாங்கம் நன்கு பயன்படுத்தியது.

இதனால் இந்தக்கட்டுரையின் தொடக்கத்தில் கூறப்பட்ட உலகின் மிக நூதனமான ஒரு பொதுச்சுகாதாரக் கட்டமைப்பும் சம்பந்தப்பட்ட துறைசார் நிபுணத்துவமும் பெருமளவுக்கு படைத்தரப்பின் முகாமைத்துவத்தின் கீழ் கொண்டுவரப்பட்ட பொழுது அதற்கு பெருமளவு எதிர்ப்பு முதலில் தோன்றவில்லை. வெல்லமுடியாத ஒரு போரில் வெற்றி பெற்ற ஒரே தகுதி காரணமாக உலகின் மிகவினைத்திறன் மிக்க முன்னுதாரணமான ஒரு பொதுச்சுகாதாரக் கட்டமைப்பை படைத்தரப்பு மேலாண்மை செய்யும் ஒரு நிலை தோன்றியது. நாட்டு மக்கள் மூன்றாவது தடுப்பூசியை அதாவது பூஸ்டர்டோஸை பெற்றுக் கொள்ளவேண்டும் என்பதனையும் சில நாட்களுக்கு முன் படைத்தளபதியே அறிவித்திருந்தார்.

ஆனால் கடந்த ஒன்றரை ஆண்டுகளுக்கு மேலான தொகுக்கப்பட்ட அனுபவமானது வைரஸும் யுத்தமும் ஒன்று அல்ல என்பதை நிரூபித்துவிட்டது. ஹெகலிய ரம்புக்வெல கூறியது போல விடுதலைப் புலிகளை தோற்கடித்த அதே படைத்தரப்பால் வைரஸை எதிர்பார்த்த வேகத்தில் எதிர்பார்த்த அளவுக்கு வெற்றிகொள்ள முடியவில்லை. அரசாங்கத்தால் பொருள்களின் விலைகளைக் கட்டுப்படுத்த முடியவில்லை. தலைநகரத்தில் அரிதாக கிடைப்பது அமெரிக்க டொலர்.எங்கும் கிடைப்பது வைரஸ் என்றாகி விட்டது. போரில் வெற்றிபெற்ற ஒரு படைத்தரப்பு வைரஸுக்கு எதிரான நடவடிக்கைகளிலும் வெற்றி பெறும் என்ற எதிர்பார்ப்பு கலையத் தொடங்கி விட்டது.இதை இன்னும் ஆழமாகச் சொன்னால் யுத்தவெற்றிகளின் பளபளப்பின் மீது வைரஸ் பரவத் தொடங்கிவிட்டதா ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாயம் என்பது மாயாஜாலமா? விஞ்ஞானமா?

சி.சுரேன்

அந்த இரசாயன விற்பனை நிலையம் அன்று வழமையை விட பரபரப்பானதாக காணப்பட்டது. சுகாதாரத் துறையினரால் அறிவிக்கப்பட்ட கோவிட் தொற்றுக்கான எவ்வித சுகாதார முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் அங்கு பின்பற்றப்பட்டதாகத் தெரியவில்லை. கொரோனாவைக் கூட மறந்து விட்டு அந்த உரக்கடையில் கூட்டம் மோதுமளவுக்கு. பெரும் பிரச்சினையை இப்போது விவசாயிகள் எதிர்கொண்டுள்ளனர் என்பதே உண்மை.

மே மாதம் 6 ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவிப்பு எண் 2226/48 இவ்வாறு கூறுகின்றது." இரசாயன உரங்கள், பூச்சி நாசினிகள், மற்றும் களை கொல்லிகள் என்பவற்றின் இறக்குமதியானது உடன் அமுலுக்கு வரும் வகையில் தடை செய்யப்படுகின்றது". ஏப்ரல் 26 ஆம் திகதி ஜனாதிபதியினால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை பத்திரம், அங்கீகரிக்கப்பட்டே மேற்கண்டவாறு வர்த்தமானி வெளியிடப்பட்டது. இதன் உடனடி விளைவாக விவசாய இரசாயன விற்பனை முகவர்களால் ஓர் செயற்கைத் தட்டுப்பாடு உடனடியாகவே உண்டாக்கப்பட்டது. இதனால் தற்போது இரசாயன உரவகைகள் இரண்டு மடங்கு விலை ஏற்றத்துடன் விற்பனை செய்ப்படுகின்றன. எனவே மட்டுப்படுத்தப்பட்ட அளவில் உள்ள இரசாயன உள்ளீடுகளைக் கூட பெருந்தொகைப் பணத்தைக் கொடுத்தே பெறவேண்டிய நிலை விவசாயிகளுக்கு.

அண்மையில் கேகாலையில் ஆயுள்வேத வைத்தியரான தம்மிக்க என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்ட கோவிட் ஆயுள்வேத பாணியால் எழுந்த சர்ச்சை எமது சமூகத்துக்கு நல்லதோர் எடுத்துக்காட்டு. எவ்விதமான விஞ்ஞானபூர்வ நிரூபணங்களுமின்றி. இந்தப் பாணியை அரசாங்கம் அங்கீகரித்தது. முன்னாள் சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி இந்தப் பாணியை உட்கொண்ட படங்கள் ஊடகங்களில் வெளியானதும் தான் தாமதம், மக்கள் வெள்ளம் அந்த ஆயுள்வேத வைத்தியரின் வீட்டைச் சூழ்ந்துவிட்டது. ஆனால் பரிதாபம் என்னவெனில், அந்தப் பாணியை உட்கொண்ட பவித்ரா வன்னியாராச்சியே பின்னர் கொரோனாவால் பாதிக்கப்பட்டார். அதன் பின்னர் அந்தப் பாணி குறித்த சந்தேகங்கள் எழ, பல ஆய்வுகளின் பின்னர் அந்தப் பாணி கொரோனாவைக் கட்டுப்படுத்தாது என்பது நிரூபிக்கப்பட்டதால், இப்போது அதற்கு தடை போடப்பட்டுள்ளது. இதே போன்றதொரு நிலைமையே இன்றைய விவசாயத்துறையிலும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இராசாயன உரங்களுக்கு தடை போட்டால் எழப்போகும் சிக்கல்களை எவ்விதம் தீர்ப்பது என்ற தீர்க்கதரிசனம் எதுவுமில்லாமல் கண்மூடித்தனமாகவே இந்தத் தடை உத்தரவு போடப்பட்டுள்ளது. அதன் விளைவையே நாட்டிலுள்ள விவசாயிகள் இப்போது அனுபவிக்கின்றனர்.

"இந்தவேலைத்திட்டத்தின் மூலம் பல சிக்கல்கள் ஏற்படலாம். ஆனால் நிலையான பொருளாதார முறைமையை உருவாக்குவது தாமதமாகக் கூடாது. இதுவரை முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகளில் இருந்து பின்வாங்காமல் இரசாயன உரங்கள் பயன்படுத்துவதை முழுமையாக நீக்கிய உலகின் முதல் நாடாக இலங்கையை மாற்றுவேன்" என்று சவால் வேறு விடுத்துள்ளார் ஜனாதிபதி கோத்தாபய. இந்தச் சவால் வரவேற்கப்பட வேண்டியதுதான். இரசாயனமற்ற உணவு என்பது எதிர்காலத்துக்கான நல்லதொரு சகுனமே ஆயினும் இது ஒரு சவால் மிகுந்த செயற்பாடு. கத்தி மேல் நடப்பது போன்றது. எதிர்கால நலனுக்காக இப்போதுள்ளவர்களை கைவிடுவது புத்திசாலித்தனமாகாது.

கொவிட் தொற்றின் பின்னரான சூழ்நிலையில் இலங்கையின் முதன்மையான விவசாய உற்பத்திகளில் வரவேற்கத்தக்க அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. மஞ்சள், உழுந்து, மிளகாய், சோளம் போன்ற பொருள்களுக்கு விதிக்கப்பட்ட இறக்குமதித் தடை காரணமாக இலங்கையில் இவ்வகையான உற்பத்திகளுக்கு நல்ல சந்தை நிலைவரம் உள்ளது. மஞ்சள் ஒரு பிரதான பயிராக இல்லாத போதிலும் வீட்டுத்தோட்டங்களில் அது பயிர் செய்யப்பட்டு தற்போது மஞ்சள் கிழங்கு கிலோ ரூபா 500 வரை விற்பனை செய்யப்படுகின்றது. சோளத்தின் விலை உயர்வடைந்துள்ளது. கோழி வளர்ப்பில் சோளம் முக்கிய தீவனமாக உள்ளதால் கோழி இறைச்சியின் விலை உயர்வடைந்துள்ளது. உற்பத்தியாளர் சமூகம் இதனால் நன்மையடைந்த போதும் 21 மில்லியனுக்கும் அதிகமான நுகர்வோர் இதனால் பாதிப்படைகின்றார்கள்.



ஆனால் தேவையானளவு வளங்களுடன் தன்னிறைவினை எட்டிய பயிர்ச் செய்கை நடவடிக்கைகள் எல்லாம் இரசாயன உரவகைகளுக்கு விதிக்கப்பட்ட தடை காரணமாக, ஸ்தம்பிக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன. உள்ளீடுகளுக்குத் தட்டுப்பாடு ஏற்படும் போது உற்பத்திகளின் விலை அதிகரித்தாலும் உற்பத்தியாளருக்கான நிகர இலாபம் குறைவாகவே இருக்கும். இதனால் நுகர்வோர் மாத்திரமன்றி, உற்பத்தியாளர்களும் பாதிப்பை எதிர்நோக்கப் போகின்றார்கள். எனவே அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்டுள்ள இரசாயன உரங்களுக்கான தடையானது, நீண்டகால இலக்கில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய ஒன்று . இப்படி திடீரென நடைமுறைப்படுத்தினால் பெரும் பின்னடைவே விவசாயத்துறையில் ஏற்படும். அதுவும் மாற்று வழிகளுக்கான நடைமுறைப்படுத்தல்கள் எதுவும் இன்றி உடனடி அமுலாக்கத்தின் விளைவு உணவு பாதுகாப்பின்மையாகவே அமையும்.

தற்போது நாம் காண்பது கனவு. இக்கனவை நனவாக்க பல படிமுறைகளை தாண்ட வேண்டியுள்ளது. மேலும் தற்போது நாம் காணும் கனவு அவ்வளவு அழகானதல்ல. ஆபத்தானது. இரசாயனமற்ற விவசாயம் எனும் கருப்பொருள் வரவேற்கதக்க ஒன்று. ஆனால் சரியான அணுகுமுறைகள் இன்றி இந்தக் கருப்பொருளை அடைய முயற்சித்தால் உடனடியான முதல் பிரச்சினை உணவுப் பாதுகாப்பின்மை தான். இரசாயனத்தில் இருந்து சேதன முறைக்கு மாறும் போது பயிர் விளைச்சலில் நிச்சயமாகப் பெரும் சரிவு ஏற்படும். இதன் விளைவினால் ஏற்படும் விலை அதிகரிப்பினால் நுகர்வோர் பாதிக்கப்படுவர். அரசாங்கத்தின் இந்தச் செயற்பாட்டால் அந்நியச் செலாவணியைச் சேமிக்கும் திறன் மற்றும் மூலோபாயத்திறன்கள் குறித்து மகிழ்ச்சியடையக் கூடியதாக இருந்தாலும், இதனால் ஏற்படும் உடனடியான விளைவுகள் ஆரோக்கியமற்றவையாக இருக்கும். அதுவும் கொரோனா, ஊரடங்கு, முடக்கம் என மக்களின் வாழ்வாதாரம் ஆட்டம் கண்டுள்ள நிலையில், இதுவொரு மேலதிக இடராக மாறப்போகின்றது.

" மாஜாயால வித்தை காட்டுவதன் மூலமோ மந்திரங்கள் மூலமோ விவசாயத்தைச் செய்ய முடியாது. இது அறிவியல் மற்றும் விஞ்ஞானம் ஆகும்" என்கிறார் பேராதனைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் புத்தி மாரம்பே. இலங்கையின் பிரதான பயிராக நெல் உள்ளது. நெல் உற்பத்தியில் தற்போது நாம் தன்னிறைவு எனும் நிலையை நெருங்கியுள்ளோம். எமது நாட்டில் உள்ள நெல் ஆராய்ச்சி நிலையங்களில் இருந்து அதிக விளைச்சலைத் தரக்கூடிய பல மேம்படுத்தப்பட்ட நெல்லினங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இலங்கையில் நெல் செய்கைபண்ணப்படும் மொத்த விஸ்தீரணத்தில் 98 % விஸ்தீரணத்தில் இவ்வாறு மேம்படுத்தப்பட்ட நெல் இனங்களே பயிரிடப்படுகின்றன. அவை அனைத்தும் இரசாயனப் பசளைகளுக்கே வினைத்திறனானவை. அவற்றை சேதன முறையில் பயிரிடுவதால் விவசாயிகளுக்கு பெருநஷ்டமே ஏற்படும். மீண்டும் நெல்லுக்கும், அரிசிக்கும் பிற நாடுகளிடமே கையேந்த வேண்டியிருக்கும்.

பத்தலகொட நெல் ஆராய்ச்சி நிலையத்தை சார்ந்த விவசாய விஞ்ஞானி டி.என். சிறிசேனவின் ஆராய்ச்சி முடிவுகளின்படி ஒரு ஹெக்டெயர் நிலப்பரப்புக்கு 10 தொன் சேதன உரத்தைப் பயன்படுத்தும்போது நெல் விளைச்சலில் 21.5 % = 31 % வரையான விளைச்சல் குறைவு ஏற்படுகின்றது. மேலும் சேதன உரத்துடன் அசேதன உரங்களையும் தொடர்ச்சியாக 1011 வருடங்களுக்கு பயன்படுத்தும்போது நெல்லில் உச்ச விளைச்சலை அடையலாம். எனவே நாம் சேதன உள்ளீடுகளை பிரயோகித்து பயிர்ச்செய்கை மேற்கொள்ளும் போது, விளைச்சல் 3.92 மில்லியன் தொன் குறைவடையும் (கடந்த ஆண்டு இலங்கையின் மொத்த நெல் உற்பத்தி 5 மில்லியன் தொன்) . மேலும் எமது நாட்டுக்கான ஆண்டொன்றுக்கான அரிசி தேவை 2.4 மெ.தொன் ஆகும். விவசாய திணைக்களத்தின் தரவின் படி 100 கிலோ நெல்லினை அரிசி ஆக்கும் போது 68 கிலோ அரிசி கிடைக்கப்பெறும்.

இதன் அடிப்படையில் ஆண்டொன்றுக்கு 2.08 மெற்றிக் தொன் அரிசியே கிடைக்க வாய்ப்புள்ளது. மேற்குறித்த கணிப்புக்களில் காலநிலை மாற்றத்தால் ஏற்படும் அழிவுகள், இயற்கை அழிவுகள், களை கொல்லிகள், பூச்சி நாசினிகள் மீதான தடையின் தாக்கங்கள் கணக்கிலெடுக்கப்படவில்லை. அரசாங்கத்தின் கொள்கைகளின்படி உடனடியான அரிசி இறக்குமதி என்பது சாத்தியமில்லை.

எனவே நமது பிரதான உணவுக்கான பாதுகாப்பே கேள்விக்குறியாகின்றது. இந்த மாற்றத்தினை நோக்கிய நகர்வின் உடனடி விளைவாக மேலும் பிரதான ஏற்றுமதி பொருளாகிய தேயிலை உற்பத்தியில் 35% வீழ்ச்சியும் இறப்பர் உற்பத்தியில் 26 %வீழ்ச்சியும் தெங்கு உற்பத்தியில் 30 % வீழ்ச்சியும் ஏற்படலாம் என நிபுணர்களால் கணிப்பிடப்படுகின்றது. இந்நிலை அந்நியச் செலாவணி ஈட்டத்துக்கான பிரதான வழியிலும் வீழ்ச்சியை உண்டாக்கும்.

இந்தப் பத்தியின் மூலம் அரசாங்கத்தின் கொள்கையை சவாலுக்குட்படுத்துவது எனது நோக்கமல்ல. தவறு சொல்வதும் நோக்கமல்ல. அதன் உடனடி அமுலாக்கத்தினால் ஏற்படுத்தப்படும் விளைவுகளை விஞ்ஞான முறைகளினூடு எடுத்துக்காட்டுவதே பிரதான நோக்கம் ஆகும். அறிமுகப்படுத்தப்படும் புதிய தொழில் நுட்பங்கள் எமக்கு வரப் பிரசாதங்களே . ஆயினும் சேதன விவசாயத்துக்கு அவற்றின் தகைவுடமை திறன் என்பது கேள்விக் குறியே!. இவை எமது நாட்டில் உள்ள 46 விவசாயச் சூழலியல் வலயங்களுக்கும் பொருத்தமானவையா என சிந்திக்க வேண்டும். எனவே இரசயானமற்ற விவசாயம் என்னும் எண்ணக் கருவை நகர்த்த இது தொடர்பான ஆராய்ச்சிகளுக்கு நாடு முழுவதுமுள்ள விவசாய ஆராய்ச்சி நிலையங்களைப் பயன்படுத்தலாம். ஆண்டு ஒன்றுக்கு ஒரு மில்லியன் ஹெக்டேயர் விஸ்தீரண நெற் பயிர்ச்செய்கை நிலத்துக்கு 10 மில்லியன் தொன் சேதனப் பசளை தேவைப்படுகின்றது.

இதில் 5 மில்லியன் தொன் அளவை வைக்கோல் (பொட்டாசிய மூலம்) மூலம் பிரதியீடு செய்தால் 5 மில்லியன் தொன் சேதன உரம் மேலதிகமாகத் தேவைப்படுகின்றது. வரும் பெரும் போகத்துக்குள் இதன் உற்பத்தி சாத்தியமா என்பதும் கேள்விகுறியே!. இந்த நிலைமையானது நெல்லுக்கு மட்டுமே விபரிக்கப்பட்டுள்ளது. மற்றைய பயிர்கள் கணக்கில் எடுக்கப்படவில்லை.

எனவே விவசாய நாடாகிய இலங்கையில் புதிதாகக் கொண்டு வரப்பட்டுள்ள இரசாயனமற்ற விவசாயம் என்ற கொள்கையின் அமுலாக்கத்தை நீண்ட காலத் திட்டத்துடனும், நீண்ட கால இலக்குடனும் நடைமுறைப்படுத்தினால் மட்டுமே நஞ்சற்ற உணவு எனும் இலக்குடன் உணவுப் பாதுகாப்பு எனும் நிலையையும் ஒரு சேர அடையமுடியும். இதற்கான பயணத்தினை நீண்ட சாலையினூடாகவே மேற்கொள்ள வேண்டும். அதுவும் மேம்படுத்தப்பட்ட அணுகுமுறைகளுடன் பயணித்தால் மட்டுமே அது சாத்தியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுகதையா இந்த வாழ்க்கை?

ம.மயூரபாலன்


அரசன் ஒருவன் ஆழ்ந்த தூக்கத்தில் கனவொன்று கண்டான். அந்தக் கனவிலே அவனுக்கும் அயல் நாட்டு அரசனுக்கும் இடையில் போர் நிகழ்கிறது. அந்தப் போரில் அவன் தோல்வியைத் தழுவிய காரணத்தினால் உயிரை காப்பாற்றுவதற்காக ஓடிக் கொண்டிருக்கின்றான். ஓடி ஓடி ஒரு காட்டை அடைகின்றான். அதிக தூரம் ஓடிய களைப்பினாலும் தாங்கமுடியாத பசியினாலும் என்ன செய்வதென்று அறியாது நிற்கிறான். அப்பொழுது சுற்றும் முற்றும் பார்த்த பொழுது அவனது கண்ணுக்கு எட்டிய தூரத்திலே ஒரு குடிசை தென்பட்டது. அவன் அங்கு சென்று குடிசைக் கதவை தட்டிய பொழுது ஒரு மூதாட்டி கதவைத் திறந்தாள். அரசனும் அந்த மூதாட்டியிடம் "எனக்கு மிகவும் பசியாக இருக்கிறது. சிறிதளவு உணவு தாருங்கள்" எனக் கேட்கிறான்.

அந்த மூதாட்டி "என்னிடம் சமைத்த உணவு இல்லை . ஆனால் சிறிதளவு அரிசியும் பருப்பும் உள்ளது. நான் அதனைத் தருகின்றேன் நீயே சமைத்து உண்" எனக் கூறுகிறாள். அவனும் வேறு வழியின்றி அங்கிருந்த ஈரமான விறகுகளை கொண்டு மிகுந்த சிரமத்துடன் அவற்றை சமைக்கிறான். உணவு மிக சூடாக இருந்ததால் ஆறுவதற்காக அதனை ஓர் இலையின் மேல் போட்டு பரவி வைக்கிறான். அந்த நேரம் ஒன்றுடன் ஒன்று சண்டை போட்டுக் கொண்டு அங்கு வந்த இரண்டு எருதுகள் அந்த உணவை மண்ணுடன் மண்ணாக கலந்து விட்டன.

அதனைக் கண்ட அரசன் அந்த துக்கம் தாங்காது கண்ணீர் விட்டு அழுதான். அந்தக் கண்ணீர் அவனது முகத்திலே வழிந்த பொழுது அவன் கனவு கலைந்து நித்திரையிலிருந்து எழுந்தான். எழுந்து பார்த்த பொழுது அவனது அரண்மனை, தங்கக் கட்டில் அருகில் சேவகர்கள் என எல்லாம் அப்படியே இருப்பதனை கண்டான். ஆனால் அவன் கண்ட கனவு அவனுக்கு மிகவும் நிஜமானது போலத் தோன்றியது. இப்பொழுது அரசனுக்கு ஒரே குழப்பம் .நான் இருக்கும் இந்த அரண்மனை வாழ்க்கை கனவா அல்லது நான் போரில் தோற்று ஓடியது கனவா என்ற சந்தேகம் அவனுக்கு ஏற்பட்டது.

தனது சந்தேகத்தை தீர்க்கும்படி மந்திரிமார்களுக்கும் அறிஞர் பெருமக்களுக்கும் அவன் வேண்டுகோள் விடுத்தான். அரசனது சந்தேகத்தை தீர்ப்பதற்கு பலரும் முன் வந்தார்கள் பல விஷயங்களை கூறினார்கள். ஆனால் யாருடைய விளக்கங்களும் அரசனுக்கு திருப்தியை கொடுக்கவில்லை. இறுதியாக உடல் எட்டுக் கோணலாக இருந்த அஷ்டவக்ரர் எனும் இளைய முனிவர் வந்தார். அவர் அரசனுக்கு "இப்பொழுது நீ அரசனாக இருப்பதும் நிஜம் அல்ல நீ கனவில் கண்டதும் நிஜம் அல்ல" எனக் கூறி அரசனுக்கு அந்த மெய்ஞானத்தை அருளி அவன் உண்மையில் யார் என்பதனை உணர வைத்தார்.

இந்தக் கதையில் இருந்து நாம் பல விஷயங்களை கற்றுக்கொள்ள முடியும். முதலாவதாக இதுதான் நிஜமானது கனவில் கண்டது பொய் என பலரும் கூறியதை அரசன் எந்தவித ஆதாரமும் இன்றி ஏற்றுக் கொண்டிருக்கலாம். ஆனால் அவன் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. மற்றும் அந்த அரசன் எனக்கு எல்லாமே தெரியும். எனக்கு யாரும் ஒன்றையும் கற்பிக்கத் தேவையில்லை என்னும் இறுமாப்புடன் இருந்திருக்கலாம். ஆனால் அவன் அவ்வாறு இருக்காது பணிவுடன் உண்மை என்ன என கண்டுகொள்ள வேண்டும் என்பதற்கான ஒரு



தேடுதலை வைத்திருந்தான்.

அடுத்ததாக உடல் கோணலாக இருந்த இளம்வயதான அஷ்டவக்கிரரின் வெளித் தோற்றத்தை கொண்டு எடை போடாது அவருடைய அறிவைக் கொண்டு மட்டுமே எடை போட்டான். இது மிகவும் முக்கியமான விஷயமாகும். ஏனெனில் நாம் அதிகபட்சம் வெளித்தோற்றத்தை வைத்துத் தான் மற்றவர்களை எடை போடுகிறோம். பழத்தை வைத்து மரத்தை அறிந்து கொள்ளுங்கள் என சொல்லப்பட்டுள்ளது.

ஆனால் நாமோ காவி உடை தரித்து நெற்றியிலே பொட்டு அணிந்து இருக்கும் ஒருவரை பார்த்தால் அவரை ஒரு ஞானி என எண்ணுவோம். மருத்துவமனையிலே வெள்ளையுடை போட்ட ஒருவரைக் கண்டால் அவர் ஒரு மருத்துவர் என நம்புவோம் ஆனால் உண்மையில் அவர் யார் என்பதை அவரது செயலால்தான் கண்டுகொள்ள முடியும்.

அறிந்தோ அறியாமலோ நமது வாழ்விலும் அந்த அரசனுக்கு ஏற்பட்ட நிலை நடைபெற்றுள்ளது. நம்மில் பலரும் "என்னடா இந்த வாழ்க்கை" என்று ஒரு கேள்வியை எப்பொழுதாவது கேட்டிருப்போம். ஆனால் அதற்கான பதிலை தேடுவதற்கு முயற்சி செய்திருக்க மாட்டோம். பணம் ,பொருள், பதவி என உலகத்தின் போதையில் ஒருவன் மூழ்கி இருக்கும் பொழுது யாராவது இவைகள் எல்லாம் பொய் எனக் கூறினால் அவனுக்கு சிரிப்புத்தான் ஏற்படும். பிழைக்கத் தெரியாதவர்கள் எல்லோரும் இப்படித்தான் பேசுவார்கள் எனக் கூறுவான். ஆனால் ஒரு கணத்திலே வாழ்க்கை தலைகீழாக மாறும் பொழுதுதான் அவை உண்மை அல்ல என்பதனை புரிந்து கொள்வான்.


கறுப்புத் திங்கள் என கூறப்பட்ட நாளிலே பங்குச் சந்தை பெரிய வீழ்ச்சி அடைந்தது. அன்று எத்தனையோ மக்கள் அதனால் தற்கொலை செய்து கொண்டார்கள். ஏனெனில் ஒருநாள் கோடீஸ்வரராக இருந்த அவர்கள் மறுநாள் ஏழைகளாகி விட்டார்கள். அவர்கள் பணம்தான் தமது வாழ்க்கை என எண்ணி இருந்தார்கள்.

எனவேதான் ஞானிகளும் மகான்களும் இவைகள் எல்லாம் உண்மை அல்ல. உங்களின் உள்ளே உள்ள மெய்ப்பொருளை அறிந்து கொள்ளுங்கள் என மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கூறினார்கள். "தன்னை அறிந்து இன்பமுற வெண்ணிலாவே" என வள்ளலார் பாடினார். "தன்னை அறிய தனக்கொரு கேடில்லை" என திருமூலர் கூறினார். இவ்வாறு ஒன்றல்ல பல்லாயிரம் பாடல்கள் உள்ளன.

நாம் நமது வாழ்வில் நடைபெறும் விஷயங்கள்தான் நமது வாழ்க்கை என எண்ணுகின்றோம். ஆனால் நமது வாழ்வில் நடைபெறும் விஷயங்கள் நமது வாழ்க்கை அல்ல. அவை இரண்டுக்கும் இடையில் ஒரு வித்தியாசத்தைக் கண்டு கொள்ள வேண்டியது அவசியமாகும். இன்று ஒன்றின்மேல் ஒன்றாக துன்பத்தின் அலைகள் வந்து தாக்கும் பொழுது வாழ்க்கையே இருண்டு போய் இருப்பதாகத் தோன்றும் நேரத்தில் கூட நமக்கு சில தெரிவுகள் உள்ளன. இருள் சூழ்ந்த வேளையிலே இருளைப் பற்றி குறைகூறிக் கொண்டு இருக்கலாம் அல்லது ஒளியை எடுத்து வருவதற்கு முயற்சி செய்யலாம். அது நம்மைப் பொறுத்தது.



ஒன்றின்மேல் ஒன்றாக துன்பத்தின் அலைகள் வந்து தாக்கும் பொழுது வாழ்க்கையே இருண்டு போய் இருப்பதாக தோன்றும் நேரத்தில் கூட நமக்கு சில தெரிவுகள் உள்ளன.



## என்னைத்தான் பார்க்கவில்லை...!

காசு பணம் சரி பார்த்தேன்
நகை நட்டு சரி பார்த்தேன்
சொத்து சுகம் சரி பார்த்தேன்
என்னைத்தான் பார்க்கவில்லை!

பட்டி தொட்டி சரி பார்த்தேன்
பற்று பாசம் சரி பார்த்தேன்
பங்கு பாகம் சரி பார்த்தேன்
என்னைத்தான் பார்க்கவில்லை!

ஆட்டம் பாட்டம் சரி பார்த்தேன்
தோட்டம் துரவு சரி பார்த்தேன்
அக்கம் பக்கம் சரி பார்த்தேன்
என்னைத்தான் பார்க்கவில்லை!

ஊர் உலகம் சரி பார்த்தேன்
உறவு முறை சரி பார்த்தேன்
வரவு வரை சரி பார்த்தேன்
என்னைத்தான் பார்க்கவில்லை!

நடந்து வந்த பாதையிலே
கடந்து வந்த பயணத்திலே
எத்தனையோ பார்த்துவிட்டேன்
என்னைத்தான் பார்க்கவில்லை!



முனைவர் மு. அ. காதர், சிங்கப்பூர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிணங்களின் ரயில் 4

விறுவிறுப்பான திகில் சித்திரக் கதை




(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org